www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஒக்.11–17,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 278

## இருமுனை அதிர் இடி

### போர்முனைச் செய்திகள்



எக்ஸ்ரே ரிப்போர்ட்

ரோஜாவின் காதல் முறிவு

சுவையான விவகாரம்

சுட்டனர் துரத்தினர் தூக்கி எறிந்தனர்



படிப்பகம்

# முரசம்

## பேரினவாதத்தின் புனிதப்போர்

*அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.*

வன்னிச் சமரில்
எண்ணற்ற உயிர்ப்பலிகள்!

முன்னெப்போதும் இல்லாதளவு
எண்ணிக்கை ஏறியுள்ளது!

மாண்டவர் யாராக
இருந்தாலும்-எல்லாமே
மனித உயிர்கள்தானே!

தேர்தல் வெற்றிக்காக
அன்று-24 மணிநேரத்தில்
தனிச் சிங்களம்!

தேர்தல் வெற்றிக்காக
இன்று-16 மாதங்களாக
'ஜயசிக்குறுய்'!

நாடாறு மாதம்
காடாறு மாதம் என்பர்.
'ஜயசிக்குறுய்'
16 மாதங்களாக
திக்குத் தெரியாத
காடாண்டு கொண்டிருக்கிறது!

எண்ணற்ற தமிழர்கள்
இடம் பெயர்ந்துள்ளனர்!
எண்ணற்ற இழப்புக்கள்
தொடர்ந்து வருகின்றன!

செய்தித் தணிக்கை
மத்தியில்கூட
எண்ணிக்கை விபரங்கள்
மலைப்பூட்டுகின்றன!

மலையை எப்படி
கையால் மறைப்பது?
அரசு கூறும் கதைகளை
நம்புவதற்கு ஆளில்லை!

'விழுந்தும் மீசையில்
மண்படவில்லை' என்று
அரச பிரசார சாதனங்களில்
விசேட அறிவித்தல்கள்!

கைக்குக்
கனி எட்டமுன்னரே
எட்டிவிட்டதாகக் கூறுவதை
பலமுறை கேட்டாயிற்று!

அரச வானொலி
செய்தியறிக்கையை,
அதே வானொலி
அலைவரிசை மூலம்
ஒலிபரப்பாகும்
பி.பி.சி. செய்தி
சாயம் வெளுக்க வைக்கிறது!

பொல்லைக் கொடுத்து
அடிவாங்குவது போல
அலைவரிசையைத் தந்து
அம்பலமாகிக்கொண்டிருக்கிறது
அரச பிரசாரம்!

உள்ளூர் பத்திரிகைகள்
என்ன பாவம் செய்தன?
அவைக்கு மட்டும்
இறுக்கமாக கைப்பூட்டு!

வெறும் வீறாப்புகளுக்கு
எப்போதும் குறைச்சலில்லை!

உயிர்கள் உதிர்கையில்,
நோகாமல் ஜம்பங்கள்!

என்ன விலை கொடுத்தும்
தேர்தல் வெற்றியே
குறி என்றான பின்னர்,
'எண்ணிப் பார்த்து'
வருந்த யாருள்ளனர்?

ஆனாலும் இனிமேல்தான்
அபாயம் அதிகமாகும்!

சொந்த அரசியலுக்காக
இத்தனை பலிகளா?
என்ற கேள்வி எழாதிருக்கவும்,
இத்தனை பலி தேவையா?
என்ற மலைப்பு
தோன்றாதிருக்கவும்
போருக்குப் புனிதம்
கற்பித்தே ஆகவேண்டும்!

புனிதம் கற்பிக்க
பௌத்த மதபீடங்களையும்
பேரினவாத பிரசாரகர்களையுமே
அரசு இப்போது
நம்பத் தொடங்கியுள்ளது!

தேர்தலை ஒத்திவைக்க
பௌத்த பீடங்களை
நாடியதில் இருந்து
இன்றைய ஆட்சியாளரின்
பேரினவாதம் நோக்கிய
சாய்வு ஆரம்பமாகிவிட்டது!

போர் விளைவுகளை-
அறியும் சிங்கள மக்களின்
அதிருப்திகள், சீற்றம், சலிப்பு
என்பவற்றில் இருந்து
ஆட்சியாளரை
பாதுகாக்கக்கூடியதும்
பேரினவாத சக்திகளே!

குளிக்கப்போய்
சேறு பூசிய நிலையில்
நிற்கிறது அரசு!

இனிமேல்
பேரினவாதக் கட்டளைகளை
இந்த அரசால்
மீறவும் முடியாது!
நியாயமான தீர்வை
முன்வைக்கவும் முடியாது!
முடியாது! முடியாது!! முடியாது!!!

மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தத்தைத் கோருவதே
ஒரே வழி!
ஒரே ஒரு வழி!!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

# ஆன்மீகம்

## குத்துவிளக்குப் பூஜை

குத்து விளக்கு அல்லது தீபம் தெய்வங்களை ஜோதி வடிவில் வழிபடும் சாதனம். எந்தப் பூஜை செய்தாலும் முதலில் விளக்கேற்ற வேண்டும் என்பது மரபு.

குத்து விளக்கைச் சுத்தமாகத் தேய்த்து மஞ்சள் நீரால் கழுவித் துடைத்து அதை ஒரு தட்டில் வைத்து அதன் நெற்றியில் சந்தனம் குங்குமம் இட்டு எண்ணெய் அல்லது நெய் ஊற்றி, பூவும் சாத்தி குத்துவிளக்கை ஏற்றி அம்பாளை ஆவாஹனம் செய்து, அதன் பாதத்தில் அக்ஷதை, குங்குமம் அல்லது புஷ்பத்தால் அர்ச்சித்து, பழம், பால், வெற்றிலை, பாக்கு, அன்னம் அல்லது சர்க்கரைப் பொங்கல் நெய் வேதியம் செய்து வழிபடலாம். அம்பாளை வழிபடும் சுலோகங்கள் அல்லது அஷ்டோத்திர மந்திரங்கள் கூறி அர்ச்சனை செய்யலாம்.

குங்குமார்ச்சனை செய்ய எளிய தமிழ் மந்திரங்கள் உள்ளன. ஆடி, ஆவணி மாத வெள்ளிக்கிழமை மாலையில் இந்தப் பூஜையை, சுமங்கலிகளும் கன்னிப் பெண்களும் செய்வது உத்தமம். தனியாகவோ, ஐந்து அல்லது ஏழு பெண்கள் சேர்ந்து தனித்தனிக்குத்து விளக்கு வைத்து குத்து விளக்கு பூஜை செய்யலாம். மாங்கல்யபலம் புத்திரபாக்கியம், ஐஸ்வர்யம், குடும்பத்தில் அமைதி லக்ஷ்மிகடாக்ஷம் போன்ற அருள் செல்வங்கள் கிட்ட குத்து விளக்கு பூஜை பலன் தரும்.

தொகுப்பு: அ.அச்சுதன்-சேனையூர்-06.



## நரகமும் அதன் வேதனையும்

இவ்வுலகில் மனித சமுதாயத்துக்கு குறிப்பிட்ட கால அளவு வாழ்க்கையைக் கொடுத்து அதில் அல்லாஹ்வின் கட்டளைகளை எடுத்து நடந்து வாழ்ந்தவர்களுக்கு சுவர்க்கத்தையும் அதற்கு மாறு செய்து நிராகரித்து வாழ்ந்தவர்களுக்கு நரகத்தையும் அமைத்துள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்: "நரகத்தைப் பயந்து கொள்ளுங்கள். அதன் எரி பொருள் மனிதர்களும் கற்களுமாகும். அது காபிர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. (குர்ஆன்)

மேலும் "எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களுக்கு நரக நெருப்புத்தானிருக்கும். அங்கு அவர்கள் மரணித்துப் போகும்படியாக அவர்கள் காரியம் முடிவு செய்யப்படமாட்டாது. மேலும் அந் (நரகத்தில்) உள்ள வேதனை இலேசாக்கப்படவும் மாட்டாது. இவ்வாறே நாம் எல்லாக் காபிர்களுக்கும் வேதனை வழங்குவோம். (குர்ஆன்)

எனவே சகோதரர்களே! அல்லாஹ்வின் கட்டளைகளை பின்பற்றி நடப்போமாக. அந்தக் கொடிய நரக வேதனையை விட்டும் நம்மையும் நமது ஏனையோரையும் பாதுகாப்போமாக.

எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.275

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### யோசனை

ஆறம்சக்
கோரிக்கையை
முன்
வைத்த
அண்ணே!
ஆளயே
காணோமே...?

டன்சினேன்-தியாகராஜன்.

### எதிர்பார்ப்பு

இளமையும் முதுமையும்
இலையைக் கொய்ய,
ஈன்றெடுத்த குழந்தையும்
அதையே செய்ய,
ஈடேற்றம் எங்கே-
இனிமேல் எனக்கு!

எல்.டி. நபீள்-கலாவெவ.

### அட்டைகள்

கண்கள் எதிர்காலக்
கனவுகள் பறிக்க,
கைகள் வயிற்றுக்காய்
கொழுந்துகள் முறிக்க,
வெளியே தெரியாமல்
கால்களில் அட்டைகள்
விளையாடும்!

ஜெனி-மட்டக்களப்பு.

### கிடைப்பது...?

இவர்களுக்கு
கிடைக்கும்
உரிமைகளும்
சலுகைகளும்
தேர்தல்வாக்குறுதி
மட்டும்தான்!

ம. திருவரசுராசா-
வவுனியா.

## கவிதைப் போட்டி இல.278



பரிசுக்குரிய கவிதை

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 17.10.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.278
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



### சுயரூபம்

வேலுப்பிள்ளை மகனின் வீம்பான போக்கால்
வேண்டாத இப்போரென, பேரினவாதம் பேசும்!
வெள்ளைச் சாமியின் பேரன் ஆமாசாமி போட்டும்
வேவல் வத்தையில் நடந்ததன் பேரென்ன?

டாக்டர். புனிதா கருணாகரன்-திருகோணமலை.

### வே(வா)டிக்கை

நாட்டு வளம் பெருக்க
நாளும் உழைப்பவரை
நாயாய் மதித்திங்கு
நடுத்தெருவில் நிறுத்திவிட்டு
கொழுந்தெடுக்கும் கைகளிலே
குண்டுவந்த பின்னாலே
கோடி பணம் செலவுசெய்து
காரணங்கள் தேடுவதேன்?

சி.மு. சுந்தரேசன்-மஸ்கெலியா.

### ஆயுத முதலைகள்

கிள்ளிப் போட்டாலும்
முளைக்கும்!
முளைக்காவிட்டால்
வாழ்வேது?

சுபா வரன்-கொழும்பு.

### ஏன்?

எம் கூடை நிரம்புகிறது
எம் கூடு நிரம்புகிறதா...?

செ. வில்லியம்.

### புரியுமா?

செம்மணி உண்மைகளையே
மறந்திருக்கும்...
அம்மணிக்கு..!
பெண்மணிகள்
நம் துயர் புரியுமா?

ந. ஜீவராஜ்- சுழிபுரம்.

### கங்காருகள்

இவர்கள்
கூடையை மட்டுமல்ல
தேசத்தையும்
சுமக்கும் கங்காருகள்.

சுஜோ-மல்லாவி.

### தீ

"வேலய முடிக்கணும்-சுருக்கா
வீட்டுக்கு ஓடணும்....
'லயன்'கள
எரிக்கிறாகளாம் ராசா!"

எஸ். பிரபா-பதுளை.

### நியதி!

தளிர் கொய்யும் கரங்களெல்லாம்
தரமுயர்த்தும் நாட்டை!
வலி கொடுக்கும் துயரின் நிலை
விடுவதில்லை வீட்டை!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### பொருளாதாரம்

மலையில் கிள்ளி
மலைபோல் சேர்த்தாலும்
வாழ்க்கை இன்னும்
மடுவில்தான்
இருக்கிறது!

வை. சித்திகிருஷ்ணா-பாண்டிருப்பு.01.

### அவர்களும்-நாங்களும்

எமக்காகப் பேசிடுவோர்
குளிரூட்டி அறைக்குளிலே!
நமக்காக நாம் உழைப்போம்
குளிர் உறையும் மலைகளிலே!

கவிஞன் 'திக்கவயல்'-மன்னார்.

# வாசக(ர்)சாலை

## மதியாதார் வாசல் மிதிப்பவர்கள்

அன்பு முரசுக்கு,

யாழ்ப்பாணத்தில் புளொட், ஈ.பி.டி.பி. இரண்டுக்கும் நடந்தது தக்க படிப்பினை. ஆயுதங்களுடன் நடமாடும்போது இவ்வாறான மோதல் சம்பவங்கள் நடப்பது தவிர்க்க முடியாததே. ஆனால் நடந்த சம்பவத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் வருந்திக் கொள்வதும், "இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்வோம!" என்று பேசித்தீர்ப்பதுமே ஒருத்தரை ஒருவர் மதிக்கும் செயலாக இருக்கும். ஆனால் யாழில் நடந்தது நேர்மாறு. ஈ.பி.டி.பி.யை சுட்டது புளொட் என்று தொடர்ந்து கூறுகிறது படை. புளொட்டை "சாவகச்சேரி பக்கம் தலைகாட்டக்கூடாது" என்று மிரட்டுகின்றனர். எனவே இக்கட்சிகளுக்கு இருக்கும் மரியாதை என்ன? மதிக்கப்படவில்லை-மிதிக்கிறார்கள்! மதியாதார் தலைவாசல் மிதித்துக் கிடந்துகொண்டு புலிகளைத் திட்டி மதியாதாரிடம் நல்ல பெயர் எடுப்பதே இவர்கள் கடனாகியதோ?

எம். தவனேஷ், கொழும்பு-06.

## கும்பலில் கோவிந்தா

செம்மணி புதைகுழிக்கு நடந்த கதி குறித்து ஒரு தமிழ்க் கட்சிக்குக்கூட ஏன் சந்தேகம் வரவில்லை? எங்கோ இருக்கும் மனித உரிமை அமைப்புக்கள் சந்தேகப்படும்போது, இந்தக் கட்சிகளுக்கு அரசுமீது இத்தனை நம்பிக்கையா? உண்மையில் இத்தகைய மௌனம்கூட துரோகம்தான்! அவ்வப்போது பிரச்சனை சூடாகும்போது அறிக்கைவிட்டு கும்பலில் கோவிந்தா போடுவார்கள். பின்னர் அடங்கிவிடுவார்கள். இதுதான் தமிழ்க் கட்சிகளின் நிலை. இறுதியில் தமிழ்க்கட்சி உறுப்பினர் ஒருவரையே சுட்டுவிட்டு அவர்களுக்குள்ளேயே பழி போட்டபின்னர்கூடவா விழி திறக்கவில்லை?! இவர்கள் இனித் திருந்த இடமுண்டா? முரசே! கூறு!

மு. செபஸ்டியன், வவுனியா.




## உன்னில் சந்தேகம்

முரசே!

உன் கணிப்பும், கருத்துக்களும் உடனுக்குடன் பலிப்பது உன்மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அதாவது நீ ஒரு ஜோசிய முரசாக இருப்பாயோ என்றுதான். ஆனால் ஜோசியம் கூட தவறுவது உண்டே? முரசு கூறுவது தவறுவதில்லை. உண்மை. இது ஐஸ் பொழியல் அல்ல. நான் மட்டுமல்ல என் அயலவர்களும் வியந்து கூறுவதைத்தான் கூறுகிறேன். இதனைப் பொறுக்காத சிலர் (யாரென்று கூற விரும்பவில்லை) முரசு மீது பொச்செரிச்சல் படுவதும் திட்டுவதும் எதிர்பார்க்க வேண்டியதுதான்.

ஆ. சின்னத்துரை, கல்முனை.

## தொடைகளில் கயிறு

அனைவரும் கெட்டவர்கள். படையினர், அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள், தென்னிலங்கைக் கட்சிகள், அமைச்சர்கள், பரிவாரங்கள் அனைவரும் கெட்டவர்கள். அம்மையார் மட்டும் நல்லவர்- வல்லவர். இதுதான் சில தமிழ்க் கட்சித் தலைவர்கள் தங்கள் தொங்கு அரசியல் கபடத்தை நியாயப்படுத்தக் கூறும் விளக்கம். மேற்கண்ட அனைவரும் தவறு செய்தால் கூட சர்வ வல்லமை படைத்தவரால் ஒரு நொடியில் அவர்களை தலைகீழாக மாற்ற இயலுமே? ஏன் செய்யவில்லை? சிந்திப்பார்களா? மாட்டார்கள். தெரிந்துகொண்டே எங்கள் தொடைகளில் கயிறு திரிக்கப் பார்க்கிறார்கள். இனி எடுபடாது.

பி. ஸ்ரீகேசவன், மட்டக்களப்பு.

ராஜேஸ்குமார் அவர்களின் தலையில் நரை விழுந்தாலும், எழுத்தில் இளமை குன்றாத பாணி வியக்கச் செய்கின்றது. இளமை துள்ளி விளையாடுகின்றது. 'முள் நிலவு' ஒளிவிட்டுப் பிரகாசிக்கட்டும்.

மர்லியா முஹாஜிரீன், மீவலதெனிய.

போர் முனையிலிருந்து வரும் செய்திகள் யாவும் படு உஷார். சுவையான அரசியல் நிலவரங்களைச் சுமந்து வரும் முரசுக்கு வாழ்த்துக்கள். மனித உயிர்களை உறிஞ்சிக் குடித்த 'இடி அமீன்' பற்றி ரசிகன் எழுதும் தொடர் பரபரப்பை ஊட்டுகிறது. அத்தோடு ரசிகன் தரும் இலக்கியச் சுவை எனக்கு என்றும் தெவிட்டாத இன்பமூட்டிச் செல்கின்றது.

எம்.என். முஸாதீக்,
கிண்ணியா-05.

## கற்பனைக் கட்சிகள்

"தேவை கருதியே தமிழ்க் கட்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. தேவை முடிந்ததும் இவர்கள் கையில் உள்ள ஆயுதங்களும் பறிக்கப்படும்" என இராஜதந்திரியார் கூறியது நூற்றுக்கு நூறு உறுதியானது. இராஜதந்திரியார் கூறி ஒரு மாதமாகும் முன்னரே யாழில் இரண்டு தமிழ்க் கட்சிகளது உறுப்பினர்களுக்கு நடந்த கதி அதோகதி. இதற்கே நீதியான நடவடிக்கை எடுக்குமாறு நிர்ப்பந்திக்க அக்கட்சிகளால் முடியவில்லை. இந்நிலையில் தாம் கூறினால் அரசே ஆடும், கவிழும், நடவடிக்கை எடுக்கும் என்றெல்லாம் இக்கட்சிகள் கற்பனைகளில் காலம் கடத்துகின்றன. அதுதான் தமாஷ்.

எம். துஷிரா, திருமலை.

## ஆரம்பித்தது இவர்களே!

அன்பார்ந்த முரசுக்கு,

யாழ் மாநகர முதல்வர் கொலை தொடர்பாக ராஜதந்திரி அலசியது ஒவ்வொன்றும் மணி. கொள்கையை வகுத்தது கூட்டணி. அதனைத்தான் முன்னெடுக்கிறார்கள் புலிகள். தமிழீழ இலட்சியம் முதல் துரோகிகள் ஒழிப்புவரை கூட்டணி ஆரம்பித்துவைத்த பாதைதான். இன்று தம்நிலை மாறியதால் அனுதாபம் தேட முக்கால் அழுகின்றனர் கூட்டணிக்காரர்.

சி. சிவநாயகம், கொழும்பு.

## இடி மழை

"வன்னியில் மழை கொட்டும், இடி இடிக்கும்" என்று நாரதர் கூறினார். முரசு கரம் தவழ்ந்தது வியாழன். இடி இடித்த செய்தி கிடைத்தது ஞாயிறு மாலையில். நாரதரைக் கவனமாக இருக்கச் சொல்லவும். அவர் நாக்கு கரி நாக்கேதான் என்பது என் முடிந்த முடிவு.

பூ. ராசேந்திரம், கொழும்பு-08.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
பக்ஸ்- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

www.padippakam.com

# கிளிநொச்சி சமரும் மாங்குளம் மோதலும்

## ஒரே தராசில் வைத்து எடைபோட முடியாது!

(அலுவலக நிருபர்)

கிளிநொச்சியில் பரந்தன் சந்திவரை புலிகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் மாங்குளம் நகரைக் கைப்பற்றிவிட்டதாக அரசு கூறியது.

மாங்குளத்திற்கு வடகிழக்கே ஒலுமடுவில் நிலை கொண்டிருந்த படையினரே உட்பாதைகள் வழியாக முன்னேறி நகரின் ஒரு பகுதிக்குச் சென்றடைந்தனர்.

யாழ்-வவுனியா நெடுஞ்சாலை வழியாகவும், மாங்குளம் ஒட்டிசுட்டான் சாலை வழியாக ஒலுமடுவில் இருந்தும் இருமுனைகளில் முன்னேற கடந்த ஆறுமாதகாலமாக முயற்சிக்கப்பட்டது.

தற்போது பிரதான சாலைகள் வழியாக அல்லாமல் உட்பாதைகள் ஊடாக முன்னேறியே நகரின் பகுதியை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மாங்குளம் சந்தியில் ஒரு பகுதியில் புலிகளும், மறுபகுதியில் படையினரும் அருகருகே நிலை கொண்டுள்ளனர்.

மாங்குளத்தின் பெரும் தரைப்பகுதி புலிகளின் வசமே உள்ளது. நகரின் பகுதியில்தான் படையினர் நிலைகொண்டுள்ளனர். அங்கிருந்து மாங்குளத்தின் ஏனைய பகுதிகள் நோக்கி முன்னேற முயலும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே பலத்த மோதல் நடந்து வருகிறது.

மாங்குளம் மோதலில் 95 படையினர் பலியானதாக படைத்தரப்பு கூறியது. புலிகள் தரப்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியானதாகவும் கூறினர்.

மாங்குளம் மோதலில் இதுவரை 19 புலிகளே பலியானதாக பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. எறிகணைகளையே புலிகள் அதிகம் பயன்படுத்தி படையினர்மீது தாக்குதல் நடத்தினர்.

மாங்குளத்தில் படையினர் தற்போது நிலைகொண்டுள்ள பகுதியில் இருந்து பரந்தனுக்குச் செல்வதாயின் 35 கிலோமீட்டர்கள் கடந்தாகவேண்டும். கடந்த 16 மாத காலத்தில் 45 கிலோ மீட்டர் தூரத்தையே படையினர் கடந்துள்ளனர். அதிலும் 10 கிலோ மீட்டர் தூரம் சண்டையின்றி கடந்த பகுதியாகும்.

### ஒரே தராசில்

கிளிநொச்சி சமரையும், மாங்குளத்தில் நகரின் பகுதிக்குச் சென்றதையும் ஒரே இராணுவத் தராசில் வைத்து எடைபோடுவதும், சமமாகச் சித்தரிக்க முற்படுவதும் பொருத்த மற்றது என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

மாங்குளம் நகருக்குள் பிரவேசித்ததால் புலிகளது போக்குவரத்துப் பாதிக்கப்படும் என்று கூறப்படுவதும் பூகோள நிலைக்கு மாறானதாகும்.

மாங்குளமும் கிளிநொச்சி நகரும் படையினர் வசம் இருந்தால்கூட புலிகளால் யாழ்-வன்னிச் சாலையில் இருந்து முல்லைத்தீவுக்குச் செல்ல வழிகள் உள்ளன. தற்போது கிளிநொச்சி புலிகள் வசம் வந்துள்ளதால் முரசுமோட்டை ஊடாக முல்லைத்தீவுக்குச் செல்வது சுலபம். எனவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பதைவிட, வவுனியா-யாழ் சாலையில் உள்ள நகர்களில் மாங்குளமும் ஒன்று என்பதே சரியானதாகும். ஏற்கனவே புளியங்குளம் நகரைக் கைப்பற்றவும் ஐந்துமாதம்வரை சமர் நடந்தது.

ஓமந்தை, புளியங்குளம் ஆகிய நகரங்களைச் சென்றடைந்த பின்னரும் அவை கேந்திர நகர்கள் என்றே கூறப்பட்டு வந்தன. கிளிநொச்சியை 1996ல் கைப்பற்றிய போது விசேஷ பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்பட்டது. புலிகளின் நிர்வாக மையமான நகரம் வீழ்ந்துவிட்டது என்று கூறப்பட்டது.

### பிரதான நகர்

வன்னியில் முல்லைத்தீவை அடுத்து கிளிநொச்சிதான் புலிகளின் பிரதான நகரமாக இருந்தது. அதன் வீழ்ச்சியின் பின்னரே மாங்குளம் முக்கியத்துவம் பெற்றது.

தற்போது தமது முன்னைய பிரதான நகரை புலிகள் திரும்பப் பெற்றுள்ளனர்.

நகரங்களையோ பகுதிகளையோ படையினர் கைப்பற்றலாம்; தக்கவைக்க முடியாது என்பதை தாம் நிரூபித்துள்ளதாகவும், மேலும் நிரூபிக்க உள்ளதாகவும் 'புலிகளின் குரல்' வானொலியில் 'ஓயாத அலைகள்-02' தொடர்பான கண்ணோட்டத்தில் கூறப்பட்டது. ●

# புலிகளிடம் விமானப் படை?

## ஹெலி 01 – விமானம் 01

(வர்மா)

விடுதலைப் புலிகளிடம் ஹெலிக்கொப்டர் இருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வருகிறதல்லவா? முரசுக்குக் கிடைத்த மிக நம்பகமான தகவலின்படி புலிகளிடம் ஹெலிக்கொப்டர் இருப்பது நூறுவீதம் உறுதியாகியுள்ளது.

ஹெலிக்கொப்டர் ஒன்றும், சிறிய ரக விமானம் ஒன்றும் புலிகளின் தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக நேரில் கண்டவர்கள் மூலம் உறுதியாகியுள்ளது.

சிறிய ரக விமானத்தை இதுவரை புலிகள் பறக்கவிட்டதாகத் தெரியவில்லை. இன்னமும் பூரணமாகத் தயாராகவில்லை என்று கூறப்படுகிறது.

ஹெலிக்கொப்டர் மட்டும் பூரணமாக-தயாரான நிலையில் முல்லைத்தீவுப் பகுதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

ஹெலிக்கொப்டர் வெள்ளோட்டம் விடப்பட்டதை பிரபாகரன் நேரில் நின்று பார்வையிட்டுள்ளார்.

யாழ் குடாநாட்டில் படை நடவடிக்கைக்கு முன்னதாகவே விமானத் தயாரிப்பில் புலிகள் கவனம் செலுத்தி வந்தனர்.

அதுபற்றிய தகவல்கள் முரசிலும் வெளிவந்தது தெரிந்ததே. தற்போது தமது முயற்சியில் புலிகள் முதற்கட்ட வெற்றியடைந்துள்ளனர்.

### கப்பலில் வந்தன

மிக முக்கியமான தருணத்தில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு ஹெலியைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

புலிகளிடம் இதுவரை இல்லாதிருந்தது வான்படை மட்டுமே. தற்போது சிறிய அளவில் என்றாலும் வான்படையும் உருவாக்கப்பட்டுள்ளது.

எனினும் புலிகளின் ஹெலி மற்றும் சிறிய ரக விமானம் போன்றவை-மறுதரப்பு விழிப்பாக இருந்தால் விமான எதிர்ப்பு ஆயுதங்களால் சுலபமாகச் சுட்டு வீழ்த்தப்படக் கூடியவை. எனவே எதிர்பாராத தருணங்களில் பயன்படுத்த புலிகள் திட்டமிட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

வெளிநாடுகளில் ஸ்போர்ட்ஸ் விமானம் என்று அழைக்கப்படும் சிறிய ரக விமானங்களின் உதிரிப்பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும். அதுபோல ஹெலியின் பாகங்களும் விற்பனைக்கு உள்ளன.

புலிகள் தமது கப்பல் மூலம் உதிரிப்பாகங்களைக் கொண்டுவந்து வன்னியில் வைத்து ஹெலியையும், சிறியரக விமானத்தையும் உருவாக்கியுள்ளனர். ●

# லயன் எயார் விமானம்

## சுட்டு வீழ்த்தியது புலிகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளோடு கொழும்பு வந்த லயன் எயார் விமானம் கடலில் வீழ்ந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு:

மன்னார் கடற்பரப்பின் மேலாக பறந்த லயன் எயார் விமானம் புலிகளது விமான எதிர்ப்பு படையினராலேயே சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

இரணைதீவில் இருந்தே புலிகளால் ஏவுகணை ஏவப்பட்டுள்ளது. ஏவுகணை பட்டதும் நடுவானில் விமானம் வெடித்தது.

ஆனையிறவில் இருந்து தரைமார்க்கமாக பலாலிக்கு கொண்டு செல்லப்பட்ட துருப்புக்கள் அங்கிருந்து விமானம் மூலமே கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர்.

27.09.98 அன்று சமர் ஆரம்பித்தது. 28.09.98 அன்று லயன் எயார் விமானம் காயப்பட்ட துருப்புக்களை ஏற்றி இறக்கியதாக தெரிகிறது.

29.09.98 அன்றும் லயன் எயாரின் இரண்டு விமானங்களில் ஒன்று காயப்பட்ட துருப்புக்களையும், மற்றொன்று பயணிகளையும் ஏற்றியிருக்கிறது.

காயப்பட்ட துருப்புக்களை ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டதால் அவ்விமானம் குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட முடியவில்லை. அதனால் பயணிகள் விமானம் புறப்பட்டு விட்டது.

### தவறிய குறி

சண்டை நடப்பதாலும், அதிக துருப்புக்கள் காயமடைந்து கொண்டு செல்லப்படுவதாலும் லயன் எயாரின் விமானங்கள் அனைத்திலும் காயப்பட்ட படையினரே ஏற்றிச் செல்லப்படுவர் என்று புலிகள் நினைத்தனர்.

தனியார் விமான சேவைகள் படையினரால் பயன்படுத்தப்படுவதை நிரூபிக்கவும் தக்க சந்தர்ப்பமாக கருதியே லயன் எயார் விமானத்தை வீழ்த்த புலிகள் முடிவு செய்திருந்தனராம்.

ஆனால் படையினர் பயணிகள் செல்ல ஒரு விமானத்தை அனுமதித்து மற்றொரு விமானத்தை தமது தேவைக்கு பயன்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் புலிகளின் ஏவுகணைக்கு பயணிகள் விமானம் இரையானது.

காயப்பட்ட படையினரை ஏற்றியிருந்த விமானம் உரிய நேரத்தில் புறப்பட்டிருந்தால் அதுதான் புலிகளின் குறியில் சிக்கியிருக்கும்.

வழக்கமாக சண்டை உக்கிரமாக நடக்கும்போது பலாலி விமான தளம் ஊடாக பயணிகள் போக்குவரத்து நடப்பதில்லை.

புலிகளது எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரும் லயன் எயார் விமானி தனது வழிப்பாதையை மாற்றாமல் தொடர்ந்து மன்னார் கடல் வழியாகவே சென்று வந்துள்ளார். ■

# புலிகளும் தமிழர்–மாண்டோரும் தமிழர்

லயன் எயார் விமானத்தில் பயணம் செய்த பயணிகள் குறித்து அரசு எவ்விதமான கரிசனமும் காண்பிக்கவில்லை. கடலில் சுழியோடி சடலங்களை மீட்க தம்மால் முடியவில்லை என்றால், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியிருக்க வேண்டும். அதனையும் செய்யவில்லை.

சுழியோடிகளுக்கு அனுமதி வழங்குவதையும் இழுத்தடித்துள்ளது பாதுகாப்பு அமைச்சு. விமானத்தை சுட்டதும் தமிழர்கள், மாண்டவர்களும் தமிழர்கள், எமக்கென்ன? என்ற மனோபாவமே இதன்மூலம் அம்பலமாகியுள்ளது என்று பலியானவர்களது உறவினர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக தமிழ்க் கட்சிகள்கூட அரசை கண்டித்து நியாயம் கிடைக்க வழி செய்யவில்லை என்றும் பலத்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் மட்டுமே இவ்விடயத்தில் ஜனாதிபதிக்கு கண்டனம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார். ●

# வவுனியா நகரில் பதற்றம்!

## புலிகள் தாக்கலாம் என அச்சம்

(நமது நிருபர்)

வவுனியா நகரில் புலிகள் பலத்த தாக்குதல் ஒன்றுக்குத் தயார் நிலையில் இருப்பதாக பாதுகாப்பு தரப்பு கருதுகிறது. அதனையடுத்து வவுனியாவில் தீவிர கண்காணிப்பும், கைதுகளும் நடந்துவருகின்றன.

வவுனியா நகரில் வியாபார நிறுவனங்களில் பணிபுரியும் தமிழ் இளைஞர் யுவதிகளது விவரங்களை படையினர் திரட்டி வருகின்றனர்.

படையினருக்கு சளைக்காமல் புளொட் இயக்கத்தினரும் விவரம் திரட்டி வருகின்றனர்.

வவுனியாவில் படையினருடன் ஏற்பட்டுள்ள உரசல்களையடுத்து, தாம் புலிகளுக்கு எதிராக முன்னின்று செயற்படும் அமைப்பாகக் காண்பிக்க புளொட் முற்பட்டுவருகிறது.

படையினர் பொதுவாக விவரம் திரட்டும்போது, புளொட் அமைப்பினர் புகைப்படங்களுடன் விவரம் சமர்ப்பிக்குமாறு கேட்டு வருகின்றனராம். எனினும் புளொட் உட்பட ஏனைய தமிழ்க்கட்சிகள்மீது படையினர் கடும் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

வவுனியாவில் புலிப்பீதியை உருவாக்குவதும் தமிழ்க்கட்சிகள் சிலவற்றின் வேலைதான் என்று பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர். அப்படிச் செய்தால்தான் தங்கள் உதவியை படையினர் நாடுவர் என்று நினைக்கிறார்களாம்.

இத்தகைய சூழல்களும் புலிகள் தாக்குதல் நடத்தத் தூண்டுகோலாகலாம் என்று மக்கள் கூறுகின்றனர். ●

# கப்பலில் போக்குவரத்து நடத்துக!

## பயணிகளுக்கு புலிகள் அறிவித்தல்

யாழ் குடாநாட்டுக்கான போக்குவரத்துக்கு விமானங்களை தவிர்த்து கப்பல்களை பயன்படுத்துமாறு புலிகள் துண்டுப்பிரசுரம் மூலம் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

பயணிகள் விமானங்களில் துருப்புக்களை ஏற்றிச் செல்வதாக சந்தேகித்தால் தடுத்து சோதனையிட முடியாது. பயணிகள் கப்பல்கள் என்றால் சந்தேகம் வந்தால் கடல் நடுவே மறித்து சோதனையிடலாம் என்று கருதியே கப்பல் போக்குவரத்துக்கு அனுமதியளிக்க புலிகள் முன்வந்துள்ளதாக தெரிகிறது. ●

# கப்டன் இல்லாத கப்பல்

"கப்டன் இல்லாத கப்பல் தடுமாறுவது போல் நாடு இன்று தடுமாறும் நிலை ஏற்பட்டுள்ளது!" என்று அண்மையில் சிறிலங்கா இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவுகளைக் குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் வர்ணித்திருக்கிறார்.

கடந்த சில நாட்களில் பல நூற்றுக் கணக்கான அரச படைத்துருப்புக்கள் உயிரிழந்துள்ளனர். இந்த இக்கட்டான நிலையில் இந்நாட்டின் தலைவியும் முப்படைகளின் பிரதான தளபதியுமான ஜனாதிபதி சந்திரிக்கா நாட்டில் இல்லை.

பிரதான அமைச்சர்களான வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தர்மசிறி சேனநாயக்க மற்றும் அமைச்சரவை பேச்சாளர் மங்கள சமரவீர ஆகியோரும் நாட்டில் இல்லை. இதுபெரும் துரதிஷ்டவசமான சம்பவமாகும்.

யாழ் குடாநாட்டை மீட்டபின்னர் கிளிநொச்சியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம் ஒன்றை அமைத்தனர். இம்முகாம் இன்று பறிகொடுக்கப்பட்டு விட்டது. பலநூற்றுக்கணக்கான படையினர் உயிரிழந்துள்ளனர். இதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

சீரான திட்டமில்லாமல் போரை நடத்தி வருவதினாலேயே இத்துரதிஷ்ட நிலை உருவாகியுள்ளது இவ்வாறு அவர் மேலும் கூறியுள்ளார்.

# இரு புலிகள் பலி!

அக்கரைப்பற்று- ஆலையடி வேம்புப் பகுதியில் புலிகளின் குழு ஒன்று நடமாடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அரசாங்க விசேட அதிரடிப்படையினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்தனர். இச்சம்பவத்தின் போது தப்பியோட எத்தனித்த புலிகளின் உள்ளூர்ப் பொறுப்பாளர்களான தீபன் மற்றும் காந்தன் என்போர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆயினும் சுற்றி வளைப்பில் அகப்பட்டிருந்த மேலும் மூன்று புலிகள் சமயோசிதமாகத் தப்பி விட்டனர். இச்சம்பவம் ஒக்டோபர் 05ஆம் திகதி காலை இடம் பெற்றது. ●

# ஈழத் தமிழருக்கு நீதி வழங்கு!

## 50 அமைப்புக்கள் போராட்டம்

செம்மணி விவகாரம் உட்பட இலங்கை அரசின் அலட்சியப் போக்கை கண்டித்து தமிழ்நாட்டில் 50ற்கு மேற்பட்ட கட்சிகளின் போராட்டம் தொடர்பாக நெடுமாறன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவிக்கவே இலங்கையின் உயர் அரச தலைமையில் இருப்பவரின் உருவப் பொம்மையை எரிக்க முடிவு செய்ததாக நெடுமாறன் கூறியுள்ளார். சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவற்றின் கண்டனங்களையும் இலங்கை அரசு புறக்கணித்து வருவதாகவும் அவர் புகார் கூறினார். ●

# வேண்டுமென்றே இழைக்கப்படும் கொடுமை!

## அடுத்தடுத்து சோதனை அரண்கள்!

தமிழ் பேசும் பகுதிகளில் வேண்டுமென்றே திட்டமிட்டு இழைக்கப்படும் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நெருக்கடிகளும், கெடுபிடிகளும், தீவிரங்களும் அப்பாவி மக்களை வெறுப்பேற்றுகின்றன.

மட்டக்களப்பு-செங்கலடி பொலிஸ் சாவடிக்கு (முன்னாள் நீதி-உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகத்தின் வீட்டில் உள்ளது) முன்னால் புதிய சோதனைச் சாவடி முளைத்துள்ளது. 350 யார் தூரமளவிற்கு பயணிகள் இறக்கி நடக்க வைக்கப்படுகிறார்கள். கொதிக்கும் வெய்யிலில் பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள், நோயாளிகள் என்று பலரையும் இறக்கி நடந்து செல்வதைப் பார்க்க அத்தனை மகிழ்ச்சி சீருடையினருக்கு.

இத்தனைக்கும் மத்தியில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட செங்கலடி சோதனைச் சாவடியில் இருந்து கண்ணுக்குத் தெரிந்த சற்றுத் தூரத்திலேயே ஏறாவூர் சோதனைச் சாவடி உள்ளது.

வாகனங்கள் சோதனை முடித்து முதல் கியர் (GEAR) போட்டு மூன்றாவது கியர் மாற்றுவதற்கிடையில் செங்கலடி சோதனைச் சாவடி வந்து சேர்ந்துவிடும். இடைப்பட்ட தூரத்தில் இரவு பகலாக அரச படையினர் காவல் புரிகின்றபோது எங்ஙனம் புலிகள் வந்து ஏறிக்கொள்வர் என்பது புரியாத புதிராக உள்ளது.

எந்தவித பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டும் இந்தப் புதிய சோதனைச் சாவடி திறக்கப்பட்டதாக அறியமுடியவில்லை. பொது மக்களை வருத்துவதற்கும் வேறு பல ஆதாயங்களுக்காகவுமே இக்காரியம் நடைபெறுகிறதென்று விசயமறிந்தோர் விசனம் தெரிவிக்கிறார்கள். ■

# புலிகளென மிரட்டி வீட்டில் கொள்ளை!

## மலையக இளைஞர்களை மாட்டிவிடும் முயற்சி!

பண்டாரவளை-லியங்கஹவெல பகுதியில் கடந்த 17.09.98 அன்று புஸ்பசிறி எனும் பெரும்பான்மை இன சமூகத்தவரின் வீட்டில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணமும் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டோர் தங்களை தமிழ்ப் புலிகள் என நம்பும்படியாகவே நடந்து கொண்டனராம். ஆறுபேர் கொண்ட இந்த பெரும்பான்மை இனக்கொள்ளைக் கோஷ்டியில் பிக்கு ஒருவரும், பாடசாலை மாணவர் இருவரும்கூட சம்பந்தப்பட்டிருந்தனராம் என்று பண்டாரவளைப் பகுதி மக்கள் 'முரசு'க்குத் தெரிவித்தார்கள்.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து இந்தத் திருட்டுக் கும்பலைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர்கள்- பிடிக்கப்படாமல் இருந்திருந்தால், தோட்டப்புற தமிழ் இளைஞர்கள் மீது பழிசுமத்தி மாட்டிவிட்டிருப்பார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நடைபெற்ற வீட்டில் தண்ணீரை அருந்திய அந்த வீட்டுக்காரருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், இது கொள்ளையில் ஈடுபட்ட திருட்டுக் கும்பலின் நாச வேலையாக இருக்கக்கூடும் என்றும் மேலும் கூறப்படுகிறது. பண்டாரவளைப் பொலிஸார் விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

இனங்களுக்கிடையில் உறவினைச் சீர்குலைக்கும் சதி முயற்சியாகவே இது இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுவதாக தேசிய தொழிலாளர் காங்கிரஸ் பிரதேச பணிப்பாளர் திரு. வி.எஸ். தயானந்த 'முரசு'க்குத் தெரிவித்தார். ●

# தென்னிலங்கை எங்கும் மரண ஓலங்கள்

## நகரங்களில் வெள்ளைக் கொடிகள்!

மாங்குளத்திலும், கிளிநொச்சியிலும் சமீபத்தில் நடந்த சமரின் விளைவாக, தென்னிலங்கையிலும் மலையகத்திலும் மரண ஓலங்கள் எதிரொலிக்கின்றன.

நகரங்களில் வெள்ளைக் கொடிகளும் தோரணங்களும், சோக வசனங்களைத் தாங்கிய பதாகைகளும் காணப்படுகின்றன.

தணிக்கை ஒருபுறமிருந்தாலும் உறவினர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை சமரின் உக்கிரத்தையும் அதன் இழப்புக்களையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

பதுளை மாநகரெங்கும் சோகம் ததும்பிய வெள்ளைக் கொடிகள் நிறைந்து காணப்படுகின்றன. சகல வாகனங்களிலும், கடைகளிலும்கூட வெள்ளைக் கொடிகளும், தோரணங்களும், பாதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

60க்கும் மேற்பட்ட சடலங்கள் பதுளை நகரப்பகுதிக்கு மட்டும் அவர்களது உறவினர்களின் கைக்குக் கிட்டியுள்ளதாக அறியப்படுகிறது. ஒரு மாவட்டத்தில் மாத்திரம் இழப்பின் எண்ணிக்கை இத்தகையது என்றால் தணிக்கையையும் தாண்டி சாதாரண மக்கள் கூட முழு இழப்பையும் கணக்கிட முடியும். ஒரே சமயத்தில் இருவரைப்பலி கொடுத்த மரண வீடுகளும் உள்ளன.

மலையகத்திலும் தென்பகுதிகளிலும் பரவலாகக் காணப்படும் பதாகைகளில் 'யுத்த களத்தில் நாட்டுக்காக உயிர் நீத்த வீர புருஷர்களை நாம் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்' என்று காணப்படுகிறது. ஆனால் எந்தவிதமான இன எதிர்ப்புக் கோஷங்களையும் பதாகைகளில் காணமுடியவில்லை. ●



படிப்பகம்

www.padippakam.com

# பொருந்தாத இடத்தில் மருந்தகம்
## இடம்மாற்றுமாறு கோரிக்கை

மூதூர் ஆயுள்வேத மத்திய மருந்தகம் பொருத்தமற்ற இடத்தில் அமைந்துள்ளதாகவும் ஜனசஞ்சாரமற்ற இடத்திலிருக்கும் மருந்தகத்தை மக்கள் சென்று வரக்கூடிய பகுதிக்கு மாற்றித் தருமாறும் மூதூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

வெற்று நிலத்தையொட்டி அமைந்திருக்கும் இந்த மருந்தகச் சுற்றாடல் மழைக்காலத்தில் வெள்ளத்தில் மூழ்கி விடுகிறது. நோயாளிகள் இடுப்பளவு வெள்ளத்தில் சுமார் நூறுயாருக்கும் அதிகமான தூரத்தை நடந்து கடந்தே மருந்தகத்துக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அதேபோல் வெயிற் காலத்திலும் நிழல்களற்ற நிலப் பரப்பினூடாகச் செல்ல வேண்டியிருக்கிறது.

97ம் ஆண்டு இறுதியில் மருந்தகத்தை இடம்மாற்றும் கோரிக்கை வலுப்பெற்றதையடுத்து மாகாண ஆயுள்வேத நிர்வாகம் அதற்குரிய நடவடிக்கையை எடுத்து வந்தது. எனினும் அரசியல்வாதியொருவரின் தலையீட்டால் இந் நடவடிக்கை இடைநடுவில் கைவிடப்பட்டது.

மீண்டும் பொதுமக்கள், பள்ளிவாசல்கள் சம்மேளனம், வேறு அமைப்புக்கள் என்பவை மத்திய மருந்தகத்தை வசதியான இடத்துக்கு மாற்றித் தருமாறு மேற்படி அரசியல்வாதிக்கும் மாகாண ஆயுள்வேத நிர்வாகத்துக்கும் அழுத்தத்தைக் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

வாடகைக் கட்டடத்தில் இயங்கும் இம் மருந்தகத்தையொட்டி காவலரண் ஒன்றும் அமைந்துள்ளதால் நோயாளர்களும் ஊழியர்களும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மே மாத இறுதியில் ஆகஸ்ட் மாத நடுப் பகுதியிலும் இவ்விடத்தில் துப்பாக்கிச் சமர் இடம் பெற்றன என்பதும் குறிப்பிடத் தக்கது.

அரசியல்வாதி தலையிடாமல் இருந்திருந்தால் செப்டெம்பர் 1ந் திகதி தொடக்கம் மருந்தகம் வசதியான இடத்துக்கு மாற்றப்பட்டிருக்கும் என ஆயுள்வேத நிர்வாகம் தெரிவிக்கிறது.

# மரண தண்டனை

மட்டக்களப்பில் புலிகள் தமது அங்கத்தவர்களின் நடவடிக்கைகள் பற்றிக் கவனம் செலுத்தி வருகின்றனர். தமது அணியில் இடம் பெறும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் பற்றி தமது கவனத்தை ஈர்க்கத் தொடங்கியுள்ளனர்.

சில பொறுப்பாளர்கள் மோசடிகளில் ஈடுபட்டு மாட்டிக்கொண்டுள்ளனர் என்று தெரியவருகிறது. இவ்வாறு மாட்டிக் கொள்பவர்களுக்கு சில காலம் தண்டனை வழங்கப்பட்டு மீண்டும் தமது அணியில் சேர்த்துக் கொள்வதும் உண்டு. இதனை 'பணிஸ்மன்ட்' என்பர்.

கடந்த 18.09.98 அன்று நிதிப்பொறுப்பாளர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர் மட்டக்களப்புப் பகுதியில் நிதிப் பொறுப்பாளராகக் கடமை புரிந்தவர் ஆவார்.

இவருடைய உண்மைப் பெயர் தில்லைநாயகம். இயக்கப்பெயர்-வெற்றிமாறன். இவர் சிலகாலம் தடுத்துவைக்கப்பட்டவர். சமீபத்தில் இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை முதலைக்குடாவை பிறப்பிடமாகக் கொண்ட இவருக்கு அவரது ஊர்ச் சந்தியில் வைத்து மரண தண்டனை வழங்கப்பட்டது.

# சமருக்கு முன்னால்





வன்னியில் அண்மையில் நடைபெற்ற சிறுவர் இல்ல நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் பிரபாகரன். கிளிநொச்சி-பரந்தன் சமருக்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடந்து கொண்டிருந்தபோது, இடையே இந் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டாராம்.

# வருடாந்த இறுதிப் பரீட்சைகள்

(காரைதீவு நிருபர்)

தொழில் நுட்பக் கல்லூரிகளின் இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாத மூன்றாம் வாரத்தில் நடைபெற ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருவதாக தொழில் நுட்பக் கல்வி, தொழில் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர்நாயகம் திரு.களுவாராச்சி அவர்கள் எமக்கு அறியத் தந்துள்ளார். இப் பரீட்சைகள் தொழில் நுட்பக் கல்வி, தொழில் பயிற்சித் திணைக்களத்தினாலேயே நடாத்தப்படும். இனிமேலும் தொழில் நுட்பக் கல்லூரிகளின் பரீட்சைகள் எதனையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்தமாட்டாது என சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ஜனாப்.எம்.எச்.முகம்மட் ஆதம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், சம்மாந்துறைத் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற சகல மாணவர்களும் உடனடியாகத் தங்கள் விண்ணப்பங்களைக் கல்லூரிக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும் படியும், இதற்கு முன்னர் பரீட்சை எழுதி சித்தியடையாத அல்லது, நூன சித்தி பெற்ற மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம் என்பதையும், மேலும் தேவையான விளக்கங்களுக்கு கல்லூரி அதிபரை அல்லது பதிவாளரை அல்லது பகுதித் தலைவர்களைச் சந்திக்குமாறும் கேட்டுள்ளார்.

# தமிழைக் கொல்லும் கிராமசேவகர்

மூதூரைச் சேர்ந்த பின்தங்கிய கிராமங்களான உப்பூறல், சின்னன்வெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 120 குடும்பங்கள் சேருவிலை பிரதேசச் செயலகத்தின் கீழ்-நிர்வாக ரீதியாக இணைக்கப்பட்டிருப்பதால் சொல்லொணாத் துயரங்களை அனுபவிப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இவர்களது கிராமங்களிலிருந்து பிரதேசச் செயலகம் 15.கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. பின்தங்கிய மக்களான இவர்கள் போக்குவரத்து வசதிகளற்ற பாதைகளுடாக நடந்து சென்றே பிரதேசச் செயலகத்தை அடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறு நடந்து சென்றாலும் மொழி புரியாத காரணததால் இலகுவாகச் செய்யக் கூடிய விடயங்கள்கூட இவர்கள் விடயத்தில் கஷ்டமாகிவிடுகிறது.

இப் பகுதிப் பிறப்பு இறப்புப் பதிவாளருக்கு சற்றேனும் தமிழ் தெரியாது. இந்த நிலையில இவர்கள் ஒன்று சொல்ல அவர் வேறொன்றைப் பதிந்து விடுகிறார். இது அந்த மக்களின் வாழ்க்கை முறையையே சிக்கலடையச் செய்து விடுகிறது. தமிழர் அல்லாத ஒருவரே அப்பகுதிக் கிராம சேவகராக இருக்கிறார்.

இத்தனைக்கும் ஈச்சிலம்பற்றுப் பிரதேசச் செயலகம் உப்பூறல் சின்னன் வெளிக் கிராமங்களிலிருந்து நான்கு கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளது. இப் பிரதேசச் செயலகத்துடன் இணைக்கப்படுவதையே இம் மக்களும் விரும்புகிறார்கள். அவ்வாறு இணைக்கப்பட்டால் மொழிப் பிரச்சனை, போக்குவரத்துப் பிரச்சனை என்பன இல்லாதொழியும்.

இப்பகுதி மக்களின் கஷ்டநிலையை விளக்கி சமாதான நீதவான் எஸ்.குணநாயகம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மகஜரொன்றைச் சமர்ப்பித்துள்ளார். அம்மகஜரில் இக் கிராமங்களை ஈச்சிலம்பற்று பிரதேசச் செயலகத்துடன் இணைக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.


எச்சரிக்கை

T.P:- 594492

STUDIO CHHAYA
40 1/1, GALLE ROAD,
(NEXT TO ALEXANDRA ROAD,)
WELLAWATTA, COLOMBO-06

உங்கள் உணவுத் தேவைக்கும்
உங்கள் மருத்துவத் தேவைக்கும்
உகந்த நல்லெண்ணெய்!
உள்ளூரிலேயே உற்பத்தியான–சுத்தமான
TRUE TRADITIONAL TASTE
முதல் தர
VAKMIN GINGELY OIL
வாக்மின் நல்லெண்ணெய்
அழகிய வண்ண 500 கிராம் (Stand up Pouches) பொதிகளில்
உள்ளூர், வெளிநாட்டு விற்பனை முகவர்கள் தொடர்பு கொள்க~
GURANTEED PURE
VAKMIN INTERNATIONAL
258/3 DAM STREET, COLOMBO-12,
T.P.- 421987 FAX: 075-332414
VAKMIN THE SYMBOL OF TASTE & QUALITY

NISACO STEEL FURNITURE



Open on Every Sunday 8.am to 8.pm
நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்
FACTORY & SHOW ROOM
Tel: 074-201727 Fax: 581367

மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய மந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

G.C.E (A/L)-2000

மேற்படி பரீட்சையுடன் நடாத்தப்படவிருக்கின்ற பொது அறிவுப் பரீட்சை சார்பான விளக்கமும் உதாரணங்களும் விடைகளுடன் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது. இப்பரீட்சை எழுதும் சகல மாணவர்களுக்கும் இது மிகப் பிரயோசனமாயிருக்கும். இதனைத் தபால்மூலம் பெற விரும்பினால் ஒரு ரூபாய் பெறுமதியான புதிய எட்டு முத்திரைகளையும் உங்கள் பெயர் முகவரியையும் தெளிவாக எழுதி-
M.I.Abdul Jaleel B.S.C. 'Riffa Nest' Sammanthurai-02. இற்கு உடன் அனுப்பிவைக்கவும்.

New Victors



பழுது பார்க்கும் இடம்
நியூ விக்ரஸ்
40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ற்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

விளம்பரப் பகுதி

மனோதத்துவ வைத்தியம்
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். என்பதை 90 நிமிடத்தில், நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கொழும்பில் அக்டோபர் 21 முதல் 31 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

வவுனியாவில் அக்டோபர் 10,11,12 திகதிகளில்

(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை வவுனியாவில் சந்திக்கலாம். T.P.024-22074

கல்முனையில் நவம்பர் 7.8.9 திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329
கடிதத் தொடர்பு:
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa
RESIDENT T.P:- 065-24019

கணிதம்
G.C.E (O/L)
துரித மீட்டல் (2ம் பதிப்பு–98)
பகுதி I-100 . பகுதி II-30 வினாக்கள்
செய்கை முறையுடன் விடைகள் ,விலை 42/-
ஆசிரியர்:
எஸ்.திலீபன்
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தொடர்பு: S.Thileephan
Denuma Institute
43 , Old Negombo Road, Wattala

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

அஸ்மா நோய்க்கு வைத்தியம்

- தொய்வு
- இளைப்பு
- மூச்சுத்தட்டல்
- சளி
- தலைவலி
- இழுப்பு
- மாய்ச்சல்
- இருமல்
- மூக்கடைப்பு
- தும்மல்
- பீனிசம்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

30.10.97 வீரகேசரி - திலக்குரல் பேப்பரில் வெளிவந்தது.
அஸ்மா நோயைக் குணப்படுத்திய டாக்டருக்கு நன்றி

பலவருடங்களாக இரவு பகலாக நித்திரையின்றி அமைதியின்றி அஸ்மாவால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த நான் தற்சமயம் இல.25. செயின்ட் சில்வெஸ்டர் றோட். கல்கிசையிலுள்ள அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களிடம் சிகிச்சை பெற்ற பின்னர் பூரண சுகமடைந்து மறுபிறவி எடுத்துள்ளேன் என்பதனை இந்நோயால் கஸ்டப்படும் பிறருக்கு தெரிவிப்பதன் மூலம் டாக்டருக்கு எனது நன்றிக்கடனைச் செலுத்துகின்றேன். இப்படிக்கு ராஜ் பொன்னன்டோ 156/44, ஜிந்துப்பிட்டி வீதி. கொழும்பு-13.

டாக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
Ph.DH(Ind); M.B.B.SCH (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)
தினமும் மாலையில் 4மணிமுதல் 7மணிவரை

02.05.98 வீரகேசரி பேப்பரில் வெளிவந்தது.
அஸ்மா நோயைக் குணப்படுத்திய டொக்டருக்கு நன்றி

பலவருடங்களாக அஸ்மா நோயினால் மிகவும் கஷ்டபட்டு மூன்று நேரமும் மருந்துகள் பாவித்தும் நேர காலமின்றி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்து நடக்கவும் முடியாத நிலையில் சென்ற என்னை 25, சில்வெஸ்டர் வீதி, மவுண்ட்லேவினியா (கல்கிசை) இல் வைத்தியம் செய்யும் அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்கள் சிகிச்சை அளித்து முழுக்குணமடைய வைத்துள்ளார். பல மாதங்களாக மருந்தே பாவிக்காமல் ஒருகாலத்தில் இப்படியான நோயாளியாக இருந்தேனா என்ற நினைப்புக்கூட இல்லாமல் சந்தோஷமா இருக்கிறேன் என்பதை இந்நோயால் கஷ்டப்படும் பிற நோயாளர்களுக்கு அறிவிப்பதன் மூலம் என் கண் கண்ட தெய்வமான டொக்டருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். சு. மகேஸ்வரி 221/6. நாயக்ககந்த வீதி. ஹெந்தலை, வத்தளை. T.P 933912

தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு. விடுமுறைநாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பெற்று வரவும்.

074-201582

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எதிர்பாராத தருணத்தில் எதிர்பாராத முனையில்!

நாரதர்

**27.09.1998ல்** புலிகள் நடத்திய ஊடறுப்பு முற்றுகைச் சமருக்கு ஓயாத அலைகள்-02 என்று பெயரிட்டுள்ளனர்.

18.07.96ல் முல்லைத்தீவு முகாம்மீது புலிகள் நடத்திய அழித்தொழிப்பு தாக்குதலுக்கு ஓயாத அலைகள் எனப் பெயரிடப்பட்டிருந்தது.

ஈழப்போரின் மூன்று கட்டங்களில் மிகப் பாரிய அழிவை படைத்தரப்புக்கு ஏற்படுத்திய தாக்குதலாக முல்லைச்சமர் மாறியிருந்தது.

அச்சமரின் பரிமாணத்தையும் விளைவுகளையும்விட பன்மடங்கு பெரிய சமராக இடம்பெற்றுவிட்டது ஓயாத அலைகள்-02.

ஓயாத அலைகள்-01 எட்டடி பாய்ந்தது என்றால், ஓயாத அலைகள்-02 பதினாறடி பாய்ந்துள்ளது என்று கூறுவது எவ்வகையிலும் மிகையானதல்ல.

ஓயாத அலைகள் ஒன்றுக்கும் இரண்டுக்கும் இடையிலான காலத்தில் புலிகளின் இராணுவத் திறனும் பன்மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது.

ஜூலை 18ம் திகதி 96ம் ஆண்டு ஓயாத அலைகள் ஒன்று நடத்தப்பட்டது கிட்டத்தட்ட இரண்டு வருடங்களின் பின்னர் 27.09.98 அன்று ஓயாத அலைகள் இரண்டு உக்கிரமாக, பேய்ச்சமராக நடந்தேறியுள்ளது.

ஓயாத அலைகள்-01, முற்று முழுதாக கெரில்லாப் பாணியிலேயே நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலாகும்.

ஓயாத அலைகள்-02, கெரில்லாப் போர் முறையும் மரபுப் போர் முறையும் இரண்டறக் கலந்த உத்திகளோடும், திறனோடும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மரபுப் போர் முறையில் எதிர்கொள்ளக்கூடிய கனரக படைக்கலம், ஆட்பலம், களநிலை போன்றவை சாதகமாக இல்லாமையால் புலிகள் குடாநாட்டில் இருந்து பின்வாங்கினர்.

யாழ் குடாநாட்டில் படையினர் மேற்கொண்ட முன்னேறிப் பாய்ச்சலுக்கு எதிரான புலிப்பாய்ச்சல் நடவடிக்கையும் கெரில்லா உத்தியாக நடத்தப்பட்ட தாக்குதலேயாகும்.

சூரியக்கதிரின் பின்னர் யாழ் குடாநாட்டுக்கு பதிலாக வன்னியை தளமாக மாற்றிய பின்னரே மரபுப்போர் முறைக்கு தம்மை தயார்படுத்த தொடங்கினார்கள்.

முல்லைத்தீவு முகாமில் கைப்பற்றிய கனரக ஆயுதங்கள், குறிப்பாக இரண்டு ஆட்டிலெறிகள் உட்பட கனரக மோட்டார்கள் புலிகளின் மரபுப்படை பலத்துக்கு அடிப்படையாக அமைந்தன.

முல்லைத்தீவு முகாமை புலிகள் தகர்த்த பாரிய வெற்றியை மறைக்க 'சத்ஜய' படை நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டது.

ஜூலை 26ம் திகதி, அதாவது முல்லை முகாம் வீழ்ந்த செய்தியின் பரபரப்பு தணியாத ஆறாம்நாள் சத்ஜய நடவடிக்கை ஆனையிறவுத் தளத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஆரம்பமானது.

ஆனையிறவு தளத்தை பின்புலமாக கொண்டு கிளிநொச்சி நகரில் உள்ள டிப்போச் சந்திவரை படை நடவடிக்கை தொடர்ந்தது. மூன்று கட்டங்களாக 70 நாட்கள் நடந்த சத்ஜய சமரின் பின்னர் 12 கிலோமீட்டர் நீளமானதும், 60 சதுரகிலோமீட்டர் பரப்பளவு கொண்டதுமான பிரதேசம் படையினரால் கைப்பற்றப்பட்டது.

'சத்ஜய'வை முறியடிக்கும் சமரில்தான் முதன்முதலாக பாரிய மரபுச்சமர் அனுபவம் புலிகளுக்கு ஏற்பட்டது. மரபுச் சமரும், கெரில்லா உத்திகளும் கலந்த பல சண்டைகளை சத்ஜய படையினருடன் நடத்தினர் புலிகள்.

'சத்ஜய' சமரில் மொத்தம் 254 புலிகள் பலியாகினர். ஆயிரம் புலிகள் வரை பலியானதாக படைத்தரப்பு கூறியது. படைத்தரப்பில் 700 பேர் வரை பலியானதுடன் இரண்டாயிரம் பேர் வரை காயமடைந்தனர்.

'சத்ஜய' நடந்து கொண்டிருக்கையிலும் திலீபன் நினைவு நாளை முன்னிட்டு பாரிய ஊடறுப்பு தாக்குதல் ஒன்றையும் 26.10.96 அன்று கிளிநொச்சி உருத்திரபுரத்தில் நடத்தினர். அதில் பெருமளவான படையினர் வரை பலியாகினர்.

'சத்ஜய'வில் படையினர் கிளிநொச்சியை கைப்பற்றியபோதும், மரபுப்போரில் ஈடுபடத்தக்க போர் அனுபவத்தையும் புலிகளுக்கு வழங்கினர். அந்த அனுபவம் தமக்கே பாதகமாக அமையப்போவதை படையினர் அப்போது அறியவில்லை.




ஓயாத அலைகளில் கிடைத்த மரபுப் படை ஆயுதங்களும் சத்ஜயவில் கிடைத்த மரபுப்போர் அனுபவமும் வன்னியில் ஜயசிக்குறுய் நடவடிக்கைக்கு எதிரான முறியடிப்பு சமரில் புலிகளுக்கு கைகொடுத்தன.

'ஜயசிக்குறுய்' களத்தில் நடத்தப்பட்ட ஊடறுப்பு சமர்களில் மேலும் பெறப்பட்ட ஆயுத தளபாடங்கள் மூலம் தமது மரபுச் சண்டைப் பலத்தை புலிகள் மேம்படுத்திக் கொண்டதுடன், மரபுச் சமருக்கு ஏற்ற படையணிகளான பீரங்கிப் படையணிகள், டாங்கி எதிர்ப்பு படையணிகள் போன்றவற்றையும் உருவாக்கினர்.

அதேசமயம் கெரில்லா முறையிலான அதிரடி தாக்குதலுக்கு ஏற்ப படுவேகமாக ஊடுருவும் அணிகளான 'சிறுத்தைப் புலிகள்' அணி போன்றவற்றையும் பிரபாகரன் உருவாக்கினார்.

'ஜயசிக்குறுய்' படையினர்மீதான அழித்தொழிப்பு மற்றும் தாக்குதல் யுத்தத்தின் முதுகெலும்பாக கெரில்லா அணிகளும், கெரில்லா உத்திகளுமே விளங்கும்.

கெரில்லா அணிகளின் அதிரடி தாக்குதல் மூலம் கைப்பற்றப்படும் நிலப்பகுதிகளில் நிலை கொள்ளவும், முன்னேறும் படையினரை தடுத்து நிற்கும் தற்காப்பு சமரிலும் மரபுப் படையணிகளும், அதற்கான போர்முறைகளும் முக்கிய பாத்திரம் வகிக்கும்.

கெரில்லா போர்முறைக்கும் மரபுப்போர் முறைக்கும் இடையிலான பிரதான வித்தியாசம் என்ன?

எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத முனையில் தாக்குதல் நடத்துவதே கெரில்லா போர் முறையின் அடிப்படையாகும்.

எதிர்பார்க்கும் தருணத்தில், எதிர்பார்க்கும் களத்தில் நடைபெறும் சண்டையே மரபுப் போர் சண்டைகளாகும்.

ஓயாத அலைகள்-01 எதிர்பாராத தருணத்தில் எதிர்பாராத முனையில் நடத்தப்பட்ட கெரில்லா முறையிலான அதிரடித் தாக்குதல்.

ஓயாத அலைகள்-02 எதிர்பார்த்த முனையில், எதிர்பார்த்த தருணத்தில் நடத்தப்பட்ட தாக்குதலாகும். மரபுப் போர்பலமும் கெரில்லா உத்திகளையும் கச்சிதமாக கலந்து நடத்தப்பட்ட சமராகும்.

திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு புலிகள் தாக்கக்கூடும் என்று படைநிலைகள் 24 மணிநேரமும் உஷார் நிலையில் இருந்தன.

'ஜயசிக்குறுய்' மீண்டும் ஆரம்பமாக இருப்பதால் புலிகள் முந்திக்கொண்டு தாக்கலாம் என்பதால் மாங்குளம் முனையிலும், கிளிநொச்சி முனையிலும் இருந்த முன்னணிக் காப்பரண்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

எனவே எதிர்பார்த்த தருணத்திலேயே தாக்குதல் நடந்திருக்கிறது.

தாக்குதலின் முதலடி கெரில்லாப் பாணியில்தான் நடத்தப்பட்டது. கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஊடறுத்த புலிகளது அணிகள் படை அணிகளை இரு கூறாகப் பிளந்தன.

இத்தனைக்கும் கிளிநொச்சி நகரில் இருந்து பரந்தன் சந்தி வரை 20 முதல் 25 அடிவரை உயரமான பலமான 'பண்ட்' அமைத்து, அதன்மேல் கம்பி வேலி போட்டிருந்தனர் படையினர்.

அதனைவிட கரடிப்போக்கில் மினி முகாமை அண்டியிருந்த பங்கர்கள் மிகக் காத்திரமானவை. கொங்கிரீட் போட்டு பலமாக வடிவமைக்கப்பட்டவை.

மிக உயரமான பண்ட்டுகளை உடைத்து தள்ளிக்கொண்டு அலையாக புலியணிகள் புகுந்ததுதான் முதல் ஆச்சரியம்.

அடுத்த ஆச்சரியம் மிக உரமான பங்கர்களுக்குள் இருந்த படையினரின் தாக்குதலை சமாளித்து பங்கர்களை கைப்பற்றியது.

கெரில்லாப்பாணியில் புலியணிகள் தாக்கிக் கொண்டிருக்க, பரந்தன் சந்தியில் இருந்து கிளிநொச்சி நோக்கி உதவிக்கு நகர முற்பட்ட படையினரை மரபுப்போர் முறையில் எதிர்கொண்டனர் புலிகள்.

டாங்கிகள் இரண்டு தாக்கியழிக்கப்பட்டன. மேலும் ஒரு டாங்கியை கைப்பற்ற முனைந்தபோது இராணுவவீரர் ஒருவர் அந்த டாங்கியை அழித்து புலிகளிடம் போய்ச் சேராமல் தடுத்தார்.

பரந்தன் சந்தியில் இருந்து கிளிநொச்சி நோக்கி படையினர் உதவிக்கு வராமல் தடுத்து நிறுத்தியவுடன், கிளிநொச்சியில் சுமார் 21 சதுரகிலோமீட்டர் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் முற்றுகைக்கு உள்ளாகினர்.

ஆனையிறவு முதல் கிளிநொச்சி வைத்திய சாலை வரை நீண்டிருந்த இராணுவ தொடர் சங்கிலி பரந்தன் சந்தியில் துண்டிக்கப்பட்டது.

துண்டிக்கப்பட்டதை இணைக்க முடியாமல், குறுக்கே வேலியாக நின்றன புலியணிகள்.

ஊடறுப்பு முற்றுகைச்சமர் என்பதற்கான முழு அர்த்தம் களத்தில் விரிந்தது.

இதே நேரம் புலிகளின் ஆட்டிலெறிகள் முல்லைத்தளத்தில் இருந்து முழங்கிக்கொண்டிருந்தன. பரந்தன், ஆனையிறவுத் தளம் நோக்கி ஷெல்கள் பறந்து சென்றுகொண்டிருந்தன.

அதேநேரம் புலிகளின் பாய்ந்து ஊடுருவும் அணியான சிறுத்தைப் புலிகள் படைப்பிரிவின் ஒரு அணி பூநகரி ஊடாக இயக்கச்சிப் பகுதிக்குள் ஊடுருவியது.

ஆனையிறவு தளத்தில் வட முனையான இயக்கச்சியிலும் மோதல் மூண்டது. யாழ் குடாநாட்டில் தென்மராட்சியில் இருந்து படைப் பிரிவுகள் உடனடியாக உதவிக்கு வராமல் தடுப்பதற்கே இயக்கச்சிக்கு அனுப்பப்பட்டது.

கட்டுவன்கொட்டி, கட்டைக்காடு பகுதியிலும் சிறுத்தை அணிகள் தாக்குதல் நடத்தின.

முன்னர் கிளிநொச்சியை படையினர் கைப்பற்றியபோது பூநகரியில் இருந்து படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டது தெரிந்த செய்தி.

60 சதுரகிலோமீட்டர் பகுதியை அன்று புதிதாக கைப்பற்றுவதற்காக 30 சதுரகிலோமீட்டர் பரப்பளவு கொண்ட பூநகரியை புடையினர் கைவிட்டிருந்தனர்.

இப்போது பூநகரி புலிகளின் கெரில்லா தளமாக மாறியுள்ளது. அங்கிருந்து கடல்வழியாக ஊடுருவிய சிறுத்தைப் படையினர்தான் இயக்கச்சியில் தாக்குதல் நடத்தினர்.

விமானங்கள் உதவிக்கு வந்தால் தாக்குதல் நடத்துவதற்காக விமான எதிர்ப்பு படையணியினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

கடற்புலிப்படகுகளும், கடற் கரும்புலிப் படகுகளும் கடற்பகுதியால் உதவி வந்தால் தாக்குவதற்கு தயாராக நிறுத்தப்பட்டிருந்தன.

இதற்கிடையே கிளிநொச்சி மினி முகாம் பகுதியின் பாதுகாப்பு வலயத்தை கரும்புலிகள் அணிதான் உடைத்து உட்புகுந்தது. அதன் காரணமாகவே களஞ்சிய பகுதியிலும் தீப்பற்றியது.

ஓயாத அலைகள்-02 சமரில் முக்கியமான ஒரு விடயம் யாதெனில், புலிகளின் மகளிர் படையணிதான் முக்கிய பாத்திரம் வகித்திருக்கிறது.

அணித் தளபதிகளின் கட்டளைகளுக்கும் கட்டுப்படாமல் பெண் புலிகள் சிலர் படையரண்களை நோக்கி ஆவேசமாக பாய்ந்து சென்றபோது, படையினரின் தாக்குதலுக்கு பலியாகினர். அவ்வாறு பலியானதும் புலிகள் தரப்பு இழப்பு உயர்வதற்கு ஒரு காரணம்.

அதுதவிர 'பண்ட்' உடைத்த புலியணிகளில் பலர் படையினர் வைத்திருந்த மிதிவெடிகளிலும் சிக்கிக்கொண்டனர்.

பெண்கள் அணியினர் பெரும் குரல் கொடுத்தபடியும், ஆவேசமாகவும் தாக்குதலில் ஈடுபட்டதுடன், முற்றுகைச் சமரையும் திறம்பட நடத்தியுள்ளனர். தளபதி விதுஷா பெண்கள் படையணிக்கு தலைமை தாங்கினார்.

240 புலிகள் பலியானதாக பெயர் விபரங்கள் புலிகளால் உடன் கூறப்பட்டன. அதில் பெண் புலிகள் எண்ணிக்கை அதிகம். 150 பெண் புலிகள்வரை பலியாகியுள்ளதாக தெரிகிறது.

புலிகள் தரப்பில் 500 பேர் பலி என்று படையினர் கூறுகின்றனர். முதலில் 240 பேரும் காயமடைந்த பின் பலியானவர்களுமாக 280 பேர்வரை பலியானதாக புலிகள் கூறுகின்றனர்.

படையினரின் 600 சடலங்கள் முதற்கட்டமாக ஒப்படைக்கப்பட்ட பின்னரே புலிகள் தரப்பு இழப்பு 500 என்று படைத்தரப்பு கூறியது. அதற்கு முன்னர் தமது தரப்பில் 200 பேர் பலியானதாகவும், புலிகள் தரப்பில் 400 பேர் பலியானதாகவும் படையினர் கூறினர்.

மூன்று கட்டமாக புலிகள் சடலங்களை ஒப்படைத்துள்ளனர். முதல் கட்டம் மட்டும் 600 சடலங்கள். அதில் 400 சடலங்கள் தம்முடையது என்றும் மீதி 200 சடலங்களை அடையாளம் காணும் முயற்சி நடப்பதாகவும் படையினர் கூறினர். பின்னர் அது பற்றி எதுவும் கூறவில்லை. சடலங்கள் தகனம் செய்யப்பட்டுவிட்டன.

இரண்டாவது கட்டத்திலும், மூன்றாவது கட்டத்திலும் ஒப்படைக்கப்பட்ட சடலங்களின் விபரம் தணிக்கை செய்யப்பட்டது.

கட்டட இடிபாடுகள் மத்தியில் இருந்து எடுக்கப்பட்ட, மற்றும் சிதைவடைந்த சடலங்களை புலிகள் தகனம் செய்தனர். கிராம அதிகாரிகளும் மக்களின் துணையுடன் சடலங்கள் பலவற்றை எரித்தனர்.

அவைதவிர நான்காவது தொகுதியாக மேலும் 250 சடலங்களை கையளிக்க புலிகள் முன்வந்தனர். ஏற்கப்படவில்லை.

எரிக்கப்பட்ட மற்றும் மேலும் புலிகள் கொடுக்க நினைத்த சடலங்கள் தங்களுடையவை அல்ல என்று கூறுகின்றது படைத்தரப்பு.

ஈழப்போரின் மூன்று கட்டங்களிலும் மிக பாரிய சமராக முடிந்திருக்கிறது ஓயாத அலைகள் -02.

ஓயாத அலைகள் ஒன்றில் பலியான படையினரைவிட ஓயாத அலைகள் இரண்டில் பலியான படையினர் எண்ணிக்கை பன்மடங்கு அதிகம். இராணுவப் பேச்சாளரே மோசமான பின்னடைவு என்று கூறியுள்ளார்.

ஓயாத அலைகள் ஒன்றும் பிரபாகரனாலேயே நேரடியாக தலைமை தாங்கி நடத்தப்பட்டது. ஓயாத அலைகள் இரண்டும் பிரபாகரனால்தான் தலைமை தாங்கப்பட்டது.

சமர் தொடங்கி முடியும்வரை வோக்கி டோக்கியில் பிரபாகரனின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அணித் தளபதிகளுக்கு கள நிலைக்கு ஏற்ப உடனுக்குடன் உத்தரவுகள் பிறப்பித்தல், அணிகளை உரிய இலக்குகளை கூறி ஆங்காங்கே செல்லப் பணித்தல் என்று பிரபாகரனின் குரல் ஓயாது கேட்டுக் கொண்டிருந்தது.

படையினர் கண்டுபிடிக்க முடியாத சங்கேத வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டன.

உதாரணமாக; கரடிப்போக்குக்கு வேறு ஒரு பெயரை கூறி அங்கு செல்லுமாறு கூறப்படும். முன்கூட்டியே மாற்றுப் பெயர்கள், மற்றும் பயன்படுத்தப்படும் சொற்களின் அர்த்தங்கள் சகலருக்கும் விளக்கப்பட்டுவிடும். எனவே வோக்கி டோக்கியில் புலிகள் கதைப்பதை வைத்தோ, பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை வைத்தோ படையினர் தகவல் அறிய முடியாது.

சமரின் முடிவில் பரந்தன் சந்திவரை மொத்தம் 21 சதுர கிலோ மீட்டர் பகுதியை புலிகள் கைப்பற்றி நிலை கொண்டுள்ளனர்.

கைப்பற்றிய நிலத்தில் நிலை கொள்வதை இதுவரை அரச படையினரே செய்து வந்தனர். ஆனால் கடந்த பெப்பரவரி முதலாம் திகதி கிளிநொச்சி சமரின் பின்னர் நகரின் 5 சதுர கிலோமீட்டர் பகுதியை புலிகள் கைப்பற்றி நிலைகொண்டனர்.

அதுதான் படையினரிடம் கைப்பற்றிய பகுதியை தக்கவைக்கக்கூடிய மரபுப் படை பலத்தை புலிகள் காண்பித்த முதல் நிகழ்வாகும்.

இப்போது ஓயாத அலைகள்-02ல் மேலும் பல பகுதிகளை கைப்பற்றி அதனையும் தக்கவைத்து நிலைகொண்டுள்ளனர்.

பாரிய பின் தளமான ஆனையிறவு தளம் இருந்தும், புலிகள் கைப்பற்றிய பகுதிகளை உடன் மீளப்பெறுவதற்கு படையினரால் இயலவில்லை.

காலமறிந்து, களமறிந்து, தமது அணிகளை கெரில்லா முறையிலும், மரபுப் போர் முறையிலும் வழிநடத்தியுள்ள பிரபாகரனின் அனுபவமும், சமரின் உக்கிரமும், எப்படியாகிலும் ஜயசிக்குறுய் தொடரும் என்ற அரசின் பிடிவாதமும் அடுத்து வரப்போகும் விபரீத நிகழ்வுகளுக்கு கட்டியம் கூறுகின்றன.

கிளிநொச்சி நகர் உட்பட பரந்தன் சந்திவரை புலிகளிடம் வீழ்ந்த பின்னர், யாழ் வன்னி சாலையில் படையினர் மேலும் முன்னேற வேண்டிய தூரம் 35 கிலோமீட்டர்களாக உயர்ந்துள்ளது. பரந்தன் வரை சாலையின் மொத்த நீளம் சுமார் 80 கிலோ மீட்டர். ஆக, 'ஜயசிக்குறுய்' முடிவது எப்போது?!

**அதிஷ்ட எண்-09**
**ஓயாத அலைகள்-01**
**18 ஜூலை**
**ஓயாத அலைகள்-02**
**27 செப்டம்பர்**
**திகதிகள் இரண்டின் கூட்டுத்தொகையும்-09**
**எண்கணித ஜோதிடத்தில் பிரபாவுக்கு நம்பிக்கையோ?**

**அதிர்ச்சித் தகவல்**
**இருதரப்பிலுமாக 2000ற்கு மேற்பட்ட மனித உயிர்கள் உதிர்ந்துபோயின!**

**மகளிர் படையணியின் முக்கிய பாத்திரம் காரணமாக கிளிநொச்சியில் புலிக்கொடி ஏற்றும் பொறுப்பை தளபதி விதுஷாவிடம் கொடுத்தார் பிரபாகரன்.**

## அதிரடி அய்யாத்துரை



***சிறுவர்களைப் பேட்டி*** எடுத்துக் காட்டுகினம். இப்படியான ஆட்களைத்தான் இரண்டு எழுத்தார் பயன்படுத்துகினம் என்றும் கூறுகினம். எங்கு மாட்டினரோ? எப்படி மாட்டினரோ? யாமறியோம். ஆனால் ஒரு விஷயம் பாருங்கோ, உப்பிடியான சிறுசுகள்தான் ரெண்டு எழுத்தாரில் இருக்கினம் என்றால், உவையை வெல்லத்தான் ஒரு பெரிய கவர்மெண்ட் கோடி கோடியாகக் கொட்டி சண்டை பிடிக்க வேண்டி இருக்கோ.... என்ற கேள்வியும் எழுகிறதல்லோ? அப்படியானால் உது யாருக்கு மரியாதை?!

***மீசையே முளைக்காத*** வாலிப வட்டங்கள் சீருடைத்தரப்பிலும் இருக்கினம். வீதிகளில் நிற்போரில் பலர் அந்த ரகத்தினராகத்தான் இருக்கினம். பூசாரி செய்தால் குற்றமில்லையாக்கும்!

***'கிளி' ஒட்டுமொத்தமாக*** ரெண்டு எழுத்தாரின் கையில் போனதை மறைக்க முடியாமல்தான், உண்மையை ஒப்புக் கொண்டலவையாம். ரெண்டு எழுத்தாரின் சற்றலைற் தொலைபேசி ஊடாக சர்வதேசமெங்கும் கடச் கடச் செய்திகள் பரவிவிட்டனவாம். இன்டர்நெட்டிலும் உடனுக்குடன் தகவல்கள் சர்சர்ரென்று பரவிக் கொண்டிருந்ததாம். புகைப்பட ஆதாரங்களும் வரப்போவதை ஊகித்துத்தான் சுற்றி வளைத்து உண்மைகள் சில உரைக்கப்பட்டனவாம்!

***சண்டையின் விபரம்*** அறிய தலைநகர தூதரக வட்டாரங்கள் படு சுறுசுறுப்புக் காட்டினவையாம். "ரெண்டு எழுத்தாருடன் முரண்டு பிடிப்பதால் பயனில்லை. மூன்றாம் தரப்பாக நாம் உதவத்தயார். நீங்களும் உங்கள் பங்குக்கு எடுத்துக்கூறுங்கள். மேடம் ஏற்கச் செய்யுங்கள்" என்று தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவரிடம் மேற்கு நாட்டுத் தூதர் ஒருவர் கூறினாராம்.

***ரெண்டு எழுத்தார்*** ஒப்படைத்ததை எல்லாம் ஊருக்கு அனுப்பாமல் தகனம் நடந்துமுடிந்ததாம். காணாமல்போனோர் கணக்கில்தான் சேர்க்கப்படவுள்ளதோ? காணாமல் போனோர் பட்டியல் மக்களுக்கு மட்டும்தான் என்று யார் சொன்னது?

***வவுனியாவில்*** தாண்டிக்குளத்தில் கிளைமோர் வெடித்த பின்னர் அங்குள்ள தமிழ் இயக்கங்களிலும் சந்தேகமாம். போகப் போக எல்லோர் மீதும் சந்தேகம் வரத்தான் செய்யும். இயக்க அடையாள அட்டைகளைக் கண்டால் முறைப்பு நடக்குதாம்.

***விமானம் வீழ்ந்ததுதான்*** செம்மணியை ஆராய்வதைக் கெடுத்துப் போட்டுதாம். எத்தனை பெரிய கண்டுபிடிப்பு பார்த்தியளோ? சீருடை விமானம் தினமும்தானே போய்வருகிறது. அதுகூட தெரியாதமாதிரி விளக்கம் சொல்லி மழுப்பல் நடத்துகினம். தமிழ்க் கட்சி ஒன்றும் அதுக்கு தாளம் போட்டிருக்குது.

***கொழும்பில் 'குடுக்காரர்'*** தொல்லை தாங்க முடியவில்லை. தோய்த்துக் காயப்போடும் துணிகளையும் உருவிக்கொண்டு போகினம். கத்தி காட்டி வழிப்பறிகளும் நடக்குது. தெகிவளையில் ஒரு தமிழ்ப் பெண் நடந்துபோக பின்னால் சைக்கிளில் வந்தவன் சங்கிலியை தங்கம் என்று நினைத்து உருவிப்போட்டான். மனுசிக்கு கோபம் பாதி, சிரிப்பு மீதி. "கொண்டு போ... கொண்டு போ. பதினைந்து ரூபாவுக்கு விற்கலாம்!" என்று சொல்லியிருக்கிறா. காதில் விழுந்ததும் சைக்கிளை திருப்பிக்கொண்டு வந்து சங்கிலியை வீசிப்போட்டு கன்னத்தில் விட்டானாம் ஒரு அறை. மனுசிக்கு பொறி கலங்கிப்போச்சு! ரோசக்கார கள்ளன்போல கிடக்கு!

***பெரும் துலாக்களையும்*** தூக்கிக்கொண்டு போய்விட்டார்களாம். பனம் பழம் பொத்துப் பொத்து என்று போடும் பெரும் துலாக்களாம். மூன்று துலாக்கள் என்று கேள்வி. ரெண்டு எழுத்தார் படு குஷியில் இருக்கினமாம்.

***ரெண்டு எழுத்தாருக்கு*** கூடமாட ஒத்தாசையாக இருந்தவைதான் கைக்குள் மாட்டினவையாம். 'ஹெல்ப்பர்' என்று அழைக்கப்படுபவர்கள். நிரந்தர உறுப்பினர்கள் அல்லவாம். நிரந்தரமானவர்கள் குப்பி வைத்திருப்பார்கள்.

***'இந்த மண் சொந்தமண் அல்ல'*** என்று அதிகாரச் சக்தி பேசியபின்னரும் டமில் கட்சிகள் மூச்! தப்பித் தவறி எதிரணித் தலைவர் இதைக் கூறியிருந்தால் அறிக்கை மேல் அறிக்கை விட்டுக் கிழித்துப்போட்டு. அதில் ஒரு பிரதியை மேலிடத்துக்கும் அனுப்பியிருப்பினமல்லோ!

***'ஸ்கோர்' என்ன?*** ஆயிரத்தைத் தாண்டி எங்கேயோ போய்விட்டது! புதுச்சாதனை! நான் தம்பி டெண்டுல்கரைத்தான் சொல்லுகிறேன்.

***இடையே விட்டுப்போன*** சீருடையினர் பற்றி உடனடியாக விவரம் திரட்டுமாறு அந்தந்தப் பகுதி அரச அதிபர்களுக்கு அறிவுறுத்தல் பறந்துள்ளதாம். வடக்கு அரச அதிபர்களுக்கும் தவறுதலாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டதாம். பின்னர் "தவறுதலாக உங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டது" என்று கூறப்பட்டதாம். பற்றாக்குறை கடுமையாக ஏற்பட்டிருக்குது போல கிடக்கு.

இவ்வாரப் பொன்மொழி. உபயம்: **ஆபிரகாம் லிங்கன்.**

"எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து! ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து!"


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




வீரமுனை கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு, அங்குள்ள வீட்டுக் கிணறுகள் பலவற்றில் நஞ்சு கலக்கப்பட்டது.

கிணறுகளுக்குள் மீன்கள் செத்துக் கிடந்ததை பார்த்த மக்கள் உஷாராகினர். கிராமம் முழுக்க தகவல் பரவிவிட்டது. அதனால் பெரும் விபரீதம் தவிர்க்கப்பட்டது.

ஒரே நாளில் மூன்று தடவைகள் வீரமுனை கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது.

அக்கிராமத்தில் கைதான 200ற்கு மேற்பட்ட இளைஞர்கள் சம்மாந்துறை பலநோக்கு கூட்டுறவுச்சங்க லொறிகளில் ஏற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர்.

இச்சம்பவங்கள் நடைபெற்ற காலகட்டத்தில் சம்மாந்துறை அல்-மர்ஜான் வித்தியாலயத்துக்கு மஜீட் எம்.பி, திவ்வியநாதன் எம்.பி, தயாரத்ன எம்.பி. ஆகியோருடன் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன சென்றிருந்தார்.

வீரமுனையில் கைதானவர்களது உறவினர்கள் அங்கு சென்று கண்ணீரும் கம்பலையுமாக முறையிட்டனர். அவர்களுக்கு ரஞ்சன் கூறிய பதில்: "புலிகளிடம் போய்க் கேளுங்கள்!". அருகிலிருந்த எம்.பி திவ்வியநாதனுக்கும் ரஞ்சன் கூறியது காதில் விழுந்தது. அவர் வாய்திறக்கவில்லை.

## ஆலயத்துக்குள் இரத்தப் பலிகள்

வீரமுனையில் வாழ்வது ஆபத்தானது என்று அஞ்சிய தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து ஓடினார்கள்.

### சுட்டு எரித்தனர்

சொறிக்கல்முனை ஊடாக மண்டூர் சென்ற தமிழர்களை சவளக்கடையில் முஸ்லிம் ஊர்க்காவற் படையினர் வழி மறித்தனர். பலரைச் சுட்டுக்கொன்றனர்.

முஸ்லிம் ஊர்காவற்படையிடம் தப்பிய மக்களில் சிலர் அன்னமலை கோவிலடியில் நின்றிருந்த படையினராலும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களை அருகில் உள்ள வீடொன்றில் போட்டு எரித்தார்கள்.

சொறிக்கல் முனையில் இருந்து சவளக்கடை ஊடாக கல்முனை சென்ற பாதிரியார் ஒருவரும் கொலைக்கரங்களில் இருந்து தப்பவில்லை.

வீரமுனை மக்கள் தங்கள் வீடுகளை விட்டு உயிரைக் காக்க இடம்பெயர்ந்த பின்னர், அக் கிராமத்திற்குள் லொறிகள் பல புகுந்தன.

பூட்டிக் கிடந்த வீடுகளை உடைத்து அங்கிருந்த பொருட்களை லொறிகளில் ஏற்றிச் சென்றனர். அம்பாறையில் இருந்து வந்த சிங்களவர்களே பொருட்களை ஏற்றிச் சென்றனர். இராணுவத்தினரின் உதவியுடன் தான் சூறையாடல் நடந்தது.

கிராமத்தைவிட்டு வெளியேறியவர்கள் தவிர ஏனையோர் வீரமுனை கோவிலிலும், பாடசாலைகளிலும் தங்கியிருந்தனர்.

காலை பத்து மணியளவில் கோவிலுக்குள் புகுந்த முஸ்லிம் தீவிரவாதக் குழு தமிழர்கள் மீது கோரமான தாக்குதலைத் தொடுத்தது.

## மருத்துவமனைக்குள்ளும் புகுந்து கடத்தினர்



சம்மாந்துறையைச் சேர்ந்த அலியார் (கறுப்புறா), புதுக்காடு வட்டானை ஆகியோர் தலைமையில் கத்தி, வாள் சகிதம் கோவிலுக்குள் புகுந்து தாக்கினார்கள்.

பட்டதாரி ஆசிரியையான பரமேஸ்வரி உட்பட பலர் கொல்லப்பட்டனர்.

இங்கு நடந்த கொடூரம் வார்த்தைகளில் அடங்கக்கூடியதல்ல.

சிறு குழந்தைகளைக் கோவிலில் தேங்காய் உடைக்கும் கல்லில் தூக்கி அடித்தனர்.

இரண்டு கைக்குண்டுகளும் கோவிலுக்குள் வீசப்பட்டன. அவை வெடிக்காத காரணத்தால் பலத்த உயிரழிவுகள் தவிர்க்கப்பட்டன.

### வைத்தியசாலையில்

இச்சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது படையினர் தலையிடவில்லை. எல்லாம் நடந்து முடிந்து ஒருமணி நேரத்தின் பின்னரே படையினர் அங்கு வந்தனர்.

காயப்பட்டு கிடந்தவர்களை அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும்போதும் பலர் அடித்துக் கொல்லப்பட்டனர்.

அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரும் அங்கும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

வைத்தியசாலைக்குள் புகுந்த முஸ்லிம் தீவிரவாதிகள் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தவர்களை இரவோடு இரவாக கடத்திச் சென்றனர்.

அவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்களில் வெள்ளைக்குட்டி என்பவர் மட்டும் தப்பினார். அவர்மூலம்தான் வைத்தியசாலைக்குள் நடந்த கொடூரம் தெரிய வந்தது.

மண்டூர் சென்ற மக்களுக்கு அங்கு தங்கியிருப்பதில் பல சிரமங்கள் தோன்றின. அதனால் திருக்கோவில் பகுதிக்குச் சென்றனர்.

அவ்வாறு சென்றவர்களில் நடராஜா ஆசிரியர், இலங்கேஸ்வரன் ஆசிரியர், தர்மலிங்கம் ஆசிரியர் உட்பட பலர் அக்கரைப்பற்றில் வைத்து முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் அரசரெட்ணம் கருணன் என்பவர் தப்பிக் கொண்டதால் அக் கொலைச் சம்பவம் தெரியவந்தது.

மல்வத்தை கிராமத்தைச் சேர்ந்த மூன்று தமிழ்ப் பெண்களும் வயது முதிர்ந்த சிலரும் பதற்றம் சற்று ஓய்ந்த பின்னர் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற னர்.

தங்கள் வீடுகளில் புதைத்து வைத்து விட்டு வந்த நகைகளை எடுத்து வருவதே அவர்களின் பிரதானமான நோக்கமாக இருந்தது. அவர்களை ஊர்காவற் படை கொலை செய்தது.

அதேபோல தன் வீட்டைப் பார்வையிட சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை யான ராசா (35) என்பவரை வெட்டிக் கொன்றுவிட்டு அவரது வீட்டுக் கிணற்றுக் குள்ளேயே போட்டு விட்டனர். இக் கொலைக்கும் ஊர்காவற் படையினரே காரணமாக இருந்தனர்.

### அக்கரைப்பற்றில்

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் இந்த வெறியாட்டங்கள் நடப்பதற்கு முன்னர், அதே மாவட்டத்தில் அக்கரைப் பற்றிலும் மனித வேட்டை கட்டவிழ்த்து விடப்பட்டது.

23.06.90ல் அக்கரைப்பற்றுக்கு இராணுவம் சென்றது. மக்கள் அச்சத்தில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி மாதா கோவிலிலும், ஆலையடி வேம்பு பாடசாலையிலும் தஞ்சம் புகுந்தனர். ஒருபகுதியினர் திருக்கோயில் பகுதிக்கு ஓடினார்கள்.

24.06.90ல் மாதா கோவில் அகதி முகாமில் தேடுதல் வேட்டை நடைபெற்றது.

அகதிகளாக தங்கியிருந்த ஆண்கள் கைது செய்யப்பட்டனர். பங்குத் தந்தை நோயல் அடிகளாரின் உதவியுடன் மாதா கோவிலில் தங்கி படித்துவந்தவர் கனேசரட்ணம். அவரையும் இராணுவம் கைது செய்தது.

நோயல் அடிகளார் எடுத்துக் கூறியபோது, அவரையும் இராணுவம் மிரட்டியது.

தமிழ்ப் பகுதிகளுக்குள் புகுந்த இராணுவத்தினரால் ஆளில்லாத வீடுகள் உடைத்துத் திறக்கப்பட்டன. சில வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

ஆலையடி வேம்பு பாடசாலையில் தங்கியிருந்த அகதிகளில் ஆண்கள் கைதுசெய்யப்பட்டனர்.

24ம் 25ம் திகதிகளில் கைதானவர்களை முஸ்லிம் பகுதி பாடசாலை ஒன்றில் தடுத்து வைத்திருந்தனர். 26ம்திகதி கைதானவர்கள் உட்பட சிலர் விடுவிக்கப்பட்டனர்.

மேலதிக விசாரணைக்கு என்று கூறி 38 பேர் கல்முனை வழியாக அம்பாறை கொண்ட வட்டுவான் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அதன்பின்னர் இன்றுவரை அவர்கள் கதி தெரியவில்லை.

முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவர்களில் மாணவர்கள், அரச உத்தியோகஸ்தர்கள், கிராம சேவகர், தபாலதிபர், ஆசிரியர்கள் போன்ற சகல பிரிவினரும் இருந்தனர்.

அக்கரைப்பற்று வேட்டையிலும் கப்டன் முனாஸ் முக்கிய பங்கு வகித்தார்.

தபாலதிபர் ரி.பேரின்பம், கிராம அதிகாரி வி. தெய்வநாயகம், கே. கனேசரட்ணம், எம்.வினாயகேஸ்வரன், கே. லோகிதன், என். கிருபாகரன் ஆகிய மாணவர்கள் உட்பட 38 பேரே கைதுசெய்யப்பட்டு காணாமல் போனார்கள்.



கிழக்கில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் கரிகாலன்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இராணுவமும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இணைந்து நடத்திய மனித வேட்டைகளை அடுத்து பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் இணைந்தனர்.

மட்டக்களப்பு, அம்பாறையில் புலிகளைவிட ஏனைய இயக்கங்களில்தான் உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் ஒரு கட்டத்தில் இருந்தனர்.

இந்தியப்படை காலத்தின் பின்னர் புலிகளின் பக்கம் அதிக எண்ணிக்கையான உறுப்பினர்கள் சேரத் தொடங்கினர்.

எனினும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடைபெற்ற மனித வேட்டைகளே பெரும் எண்ணிக்கையில் இளைஞர்களையும், மாணவர்களையும் புலிகளில் சேர்த்து விட்டது. பெண்களும் பெருமளவில் புலிகளில் இணைந்தனர்.

மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் புலிகளின் அணிகளை விரிவாக்கி அங்கு புலிகளின் பலத்தை உயர்த்தியது இராணுவத்தினரின் நடவடிக்கைகளே.

அதன் பின்னர் கிழக்கில் நடைபெற்ற புலிகளது பாரிய தாக்குதல்களில் படையினர் தரப்பில் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

### ரணில் பேச்சு

கிழக்கில் படுகொலைகள் ஒருபுறமும், அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையேயான மோதல்கள் மறுபுறமும் நடந்து கொண்டிருந்தபோது இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் அன்றைய அமைச்சருமான ரணில் பங்களாதேஷ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் ரணில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

"விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தவும், அரசியல் ரீதியல் தனிமைப் படுத்தவுமே அரசு திட்டமிட்டுள்ளது.

நாம் பேச்சுவார்த்தைக்கு எதிரானவர்கள் அல்ல. புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கும் போது பேச்சு நடத்த முடியாது. நாட்டில் முன்றில் ஒரு பங்கை தனி நாடாக அமைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று ரணில் கூறியிருந்தார்.

ரணில் கூறியது 1990ல். இன்று எட்டு ஆண்டுகள் சென்று விட்டன. சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த இன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களது பேட்டிகளும் ரணில் கூறிய பாணியிலேயே அமைந்துள்ளன அல்லவா?

ஆனால் இன்று ரணில் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த வேண்டும் என்று கூறிவருகிறார். நாளை அதிகாரம் கைக்கு வருமானால் 90ல் பேசியதையே அவரும் திரும்ப பேசமாட்டார் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது.

### ஜெயலலிதா முழக்கம்

இலங்கையில் பிரேமதாசா அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் தொடர்பாக தமிழ் நாட்டில் பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டார் ஜெயலலிதா.

"விடுதலைப் புலிகளுக்கு கிடைக்கும் வெற்றி தமிழ் மக்களுக்கு கிடைக்கும் வெற்றியாகும்.

இன்று இலங்கை இராணுவத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் வீராவேசமாக போர் புரிந்து வருகின்றனர். அவர்களுக்கு மத்திய அரசு பூரண ஆதரவை கொடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால், இலங்கையில் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டு விடுவார்கள்" என்று ஜெயலலிதா கூறினார்.

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு புலிகளுக்கு செய்யும் உதவிகள் போதுமானவையல்ல என்றும் அப்போது ஜெயலலிதா கூறிவந்தார்.

### கிட்டு கோரிக்கை

புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளராக கிட்டுவை பிரபாகரன் நியமித்தார். அதன் பின்னர் புலிகளின் சர்வதேசப் பிரசாரம் முன்பைவிட சுறுசுறுப்பானது.

யாழ்ப்பாணத்தில் எப்படி நடமாடினாரோ அப்படியே வெளிநாடுகளிலும் தன்னைச் சுற்றி ஒரு அணியுடன்தான் கிட்டு நடமாடினார்.

வெளிநாடுகளில் உள்ள புலிகள் மத்தியில் கிட்டுவுக்கு பெரும் செல்வாக்கு இருந்தது.

இந்திய 'றோ' அதிகாரிகள் சிலரும் கிட்டுவுடன் நட்பை தொடர விரும்பினார்கள்.

புலிகளுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு வைத்திருக்க விரும்பியது இந்திய உளவுப்பிரிவான 'றோ'.

நடந்தது நடந்ததாக இருக்கட்டும். நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற ரீதியில் நட்பை தொடரலாம் என்று கூறியது 'றோ'.

கிட்டுவும் தலைமைபீட அனுமதியோடு தந்திரமான உறவொன்றை 'றோ'வுடன் வைத்திருந்தார்.

இக்கட்டத்தில்தான் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் பணியாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார் கிட்டு.

"கிழக்கு மாகாணத்தல் சிறீலங்கா அரசு இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் இலங்கைக்கு விஜயம் செய்யும் போது கிழக்கு மாகாணத்துக்கும் செல்ல வேண்டும். அங்குள்ள அவல நிலைகளை நேரில் காணவேண்டும்" என்றும் கிட்டு கோரினார்.

இந்தியாவின் முன்னணிப் பத்திரிகையான 'இந்து' கிட்டுவின் கருத்தை வெளியிட்டிருந்தது.

### புலிகளின் அணி

கிழக்கு மாகாணத்தில் சத்துருக் கொண்டான் படுகொலைகளை அடுத்து புலிகளின் அணி ஒன்று கிழக்குக்கு அனுப்பப்பட்டது.

கிழக்கில் பதிலடி நடவடிக்கை களை மேற்கொள்ளுவதற்கு உதவியாக யாழில் இருந்து புலிகளின் அணி கிழக்குக்கு சென்றது. அதன் பின்னர் மாத்தையாவும் கிழக்குக்குச் சென்றார்.

அதன் பின்னர் காத்தான்குடி, ஏறாவூர் பகுதியில் முஸ்லிம்கள் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர். அது தொடர்பாக முன்னரே விபரித்திருக்கிறேன்.

### காவலரண்கள் அழிப்பு

அம்பாறை மாவட்டத்தில் படையினருக்கு எதிரான தாக்குதல்களும் தீவிரமாக்கப்பட்டன.

அம்பாறை சென்ரல் கேம்ப் பகுதி யில் இருந்த ஐந்து காவலரண்கள் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டன.

அதிகாலை 2.30 மணியளவில் இக் காவலரண்களை சுற்றிவளைத்த புலிகள் பலத்த தாக்குதலை மேற் கொண்டனர்.

மூன்று இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் அரணை விட்டு பின்வாங்கினர்.

50 எம்.எம். மோட்டார் உட்பட துப்பாக்கிகள் சில புலிகளால் கைப்பற்றப்பட்டன.

"படையினர் மீதும், ஊர்காவற் படையினர் மீதும் தாக்குதல்கள் தொடரும். தீவிரமாகும்" என்று இதன் பின்னர் அறிவித்தனர் புலிகள்.

### வட பகுதி முஸ்லிம்கள்

இக்கால கட்டத்திலேயே வடக்கில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றும் முடிவையும் புலிகள் எடுத்தனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகளின் பொறுப்பாளர்கள் மேற்படி முடிவை எடுக்க முக்கிய காரணமாக இருந்தனர்.

முஸ்லிம் காங்கிரசும், ஜிகாத் இயக்கமும் அரசுடன் இணைந்து ஆக்கிரமிப்பு திட்டத்துக்கு துணைபோவதாக புலிகள் கூறினர்.

"அம்பாறையை மையமாக வைத்து வட பகுதியில் உள்ள முஸ்லிம் பகுதிகளையும் இணைத்து தனியான மாகாண சபை அமைக்கும் திட்டம் உருவாகியுள்ளது.

இவ்வாறு மாகாண சபை ஒன்றை அமைத்து தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடத்த திட்டமிடப்படுகிறது.

இந்த அடிப்படையிலேயே அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இவ்வளவு படுகொலைகள் கிழக்கில் நடந்தபோதும் வடக்கில் ஒரு முஸ்லிம்கூட தாக்கப்படவில்லை.

கிழக்குப் படுகொலைகளால் வடக்குப் பகுதியில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே வளர்ந்து வந்த ஒற்றுமையும் நல்லெண்ணமும் சீர்குலைந்து வருகிறது" என்று புலிகள் கூறினார்கள்.

இக்கூற்று வடபகுதி முஸ்லிம்களை வெளியேற்ற முன்னர் கூறப்பட்டதாகும். வெளியேற்றப் போவதற்கான அறிகுறி என்றும் கூறலாம்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# இனப்போராக மாறிவரும் கொடும் போர்

பாதுகாப்புச் செலவுக்கு மேலதிகமாக கிட்டத்தட்ட ஆயிரத்தி இருநூறுகோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ்வருடத்திற்கான பாதுகாப்புச் செலவாக 5 ஆயிரத்தி 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

மேலதிக ஒதுக்கீட்டுடன் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 6 ஆயிரத்தி நானூறு கோடி ரூபாய்கள் பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை போன்ற வறிய நாட்டுக்கு இது விரலுக்கு மீறிய வீக்கமேயாகும். குருவியின் தலையில் பனங்காயை வைத்தது போன்ற சுமை என்றும் கூறலாம்.

நாற்புறமும் கடல் சூழ்ந்த முத்து என்று அழைக்கப்பட்ட இலங்கைத்தீவானது இன்று நாற்புறமும் கடன் சூழ்ந்த, யுத்த பூமியாக மாறியிருக்கிறது.

அரசியல் தீர்வொன்றை காண்பதற்காக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாடுவதற்கு மறுத்துவரும் அரசாங்கம், போரைத் தொடர்வதற்கு வெளியுலக இராணுவ, பொருளாதார உதவிகளிலேயே தங்கி நிற்கிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை இந்தியாவும் தனது நாட்டில் மறுத்துள்ளது என்பதை தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக சந்திரிக்கா அரசு சுட்டிக்காட்டி வருகிறது.

காஷ்மீர் பிரச்சனையானது இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையிலான பிரச்சனையாகும்.

காஷ்மீர் தனக்குத்தான் சொந்தம் என்று பாகிஸ்தான் கூறி வருகிறது. அதனை இந்தியா மறுத்துவருகிறது.

ஒரு பிரதேசம் யாருக்கு சொந்தம் என்பதில் இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனைதான் இந்திய-பாகிஸ்தான் பிரச்சனையாகும்.

"காஷ்மீரை விட்டுக்கொடுப்பதற்கு என்றுமே தயாராக இல்லை. அப்படியிருக்க அதில் இன்னொரு தரப்பு வந்து மத்தியஸ்தம் செய்ய என்ன இருக்கிறது?" என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அதுமட்டுமன்றி, காஷ்மீர் பிரச்சனையை அடக்குவதற்காக உலகநாடுகளிடம் இராணுவ, பொருளாதார உதவிகளை இந்தியா நாடியதும் இல்லை.

இலங்கை இனப்பிரச்சனையில் அரசியல் தீர்வொன்றை வழங்கத் தயார் என்று இலங்கை அரசு கூறிவருகிறது. தீர்வுப் பொதி ஒன்றையும் முன்வைத்துள்ளது.

அப்பொதி அரைகுறையானதாகவும், தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை கூறுபோட்டு, தனித்துவத்தை இல்லாதொழிக்கக்கூடிய பொதியாகவும் விளங்குகின்றது.

சிங்களப் பேரினவாதிகள் அப்பொதியையும் நிராகரிக்கிறார்கள் என்பதால் அது நியாயமான பொதி என்று அர்த்தமாகிவிடாது.

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வீடு கொடுத்தால்கூட நாடு கொடுத்துவிட்டதாக ஒப்பாரிவைப்பதுதான் பேரினவாதத்தின் பாரம்பரிய வழக்கமாகும்.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான அபிலாசைகளை நிறைவு செய்கிறதா? இல்லையா? என்பதுதான் தீர்வு ஏற்கத்தகுந்ததா என்று அறிவதற்கான அளவுகோலாகும். அத்தகைய தீர்வை சிங்களப் பேரினவாதம் ஏற்கிறதா இல்லையா? என்பது முக்கியமானதல்ல. ஏனெனில் சிங்கள மக்களின் உரிமைகளில் ஒரு பகுதியை பிடுங்கித் தருமாறு தமிழ் பேசும் மக்கள் கோரவில்லை.

வடக்கு-கிழக்கில் 'தமிழ் பேசும் மக்கள் தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி அதிகாரங்கள் கொண்ட தீர்வொன்றையே நாடி நிற்கின்றனர். ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள தேசமும், தமிழ்த் தேசமும் சமஷ்டிக் கூட்டாட்சியாக வாழக்கூடிய வழிவகைகளை உருவாக்குவதே தனி ஈழக் கோரிக்கைக்கு ஓரளவு ஈடான மாற்றுத் தீர்வாக அமையமுடியும். வடக்கு-கிழக்கில் பாதுகாப்பு, காணி அதிகாரம், கல்வி, பொருளாதாரம் ஆகியவை தமிழ் பேசும் மக்களின் கைகளில் இருக்கக்கூடிய அதிகாரப் பகிர்வுதான் அவசியமானதாகும்.

தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்துடன், தனித்துவமான மக்களாக வடக்கு-கிழக்கில் வாழ அனுமதிக்க வேண்டும். அது முடியாது எனில் தனியாக பிரிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையே கடந்த காலத்தில் தமிழ் மக்கள் தங்கள் அபிலாசையாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர்.

அதனை தென்னிலங்கை அரசுகள் மறுத்த காரணத்தால்தான் பல்லாயிரம் மனித உயிர்களை காவுகொள்ளக் காரணமான யுத்தம் வெடித்தது.

சர்வதேச அரங்கில் நடைபெற்ற, நடைபெற்றுவருகின்ற தேசிய விடுதலைப் போராட்டங்கள் எதற்கும் குறைவற்ற வகையில், இங்கு தமிழ் பேசும் மக்களும், அவர்களது புதல்வர், புதல்விகளும் தம் உன்னத தியாகங்களால் உரிமைப் போராட்டத்தை உரமேற்றியுள்ளனர்.



அதேசமயம் இப்போராட்டத்தை ஒடுக்குவதற்கான முயற்சியில் படை பலம் பிரயோகிக்கப்பட்டதால் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களும் இரத்தம் சிந்தியுள்ளனர்.

இதுவரைகால இழப்புக்களுக்கு ஈடான நிறைவான, நீதியான தீர்வொன்றையே தமிழ் பேசும் மக்கள் விரும்பி நிற்கின்றனர்.

ஆனால், சிங்களப் பேரினவாதமோ, இதுவரை பலியான சிங்கள இளைஞர்கள் வடக்கு-கிழக்கை பிரிக்கும் இலட்சியத்துக்காகவும், தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்று கூறப்படுவதை இல்லாதொழிக்கவுமே இரத்தம் சிந்தினார்கள் என்று கூறிவருகிறது. எனவே பலியான சிங்கள இளைஞர்களின் ஆத்மாவின் பெயரால் நீதியான அரசியல் தீர்வொன்றை வழங்காது தடுக்கக்கூடிய வாதங்களையே பேரினவாத சக்திகள் கூறிவருகின்றன.

இவ்வாறான வாதங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, நடைபெறும் போரானது இனப்போர் என்ற கண்ணோட்டமே மேலோங்கி வருகிறது என்பது தெளிவாகிறது.

ஆனால், சர்வதேச சமூகத்தின் கண்டனக் கணைகளில் இருந்து தப்பிக்கொள்வதற்காகவும், தமது இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுக்கவும் சமாதானத்துக்கான போர் என்று சந்திரிக்கா அரசு கூறுவதை பேரினவாத சக்திகளும் திரும்ப உச்சரித்து வருகின்றனர்.

பெயர் எதுவாக இருந்தாலும் போரின் குணாம்சம் என்ன, அது அடையப்போகும் இலக்கு எது என்பவற்றை நன்கு அறிந்துதான் பௌத்த மத பீடங்கள் தோள்தட்டி நின்று ஆட்சியாளரின் முதுகில் தட்டிக்கொடுத்து வருகின்றன.

முக்கிய அமைச்சர் அவர்களே போர் உடைதரித்து காட்சி தருகிறார். இதுவரை பாதுகாப்பு அமைச்சர்கள், பிரதி பாதுகாப்பு அமைச்சர்கள் பலர் இருந்துள்ளனர்.

லலித் அத்துலத் முதலி ஒருதடவை இயந்திரத் துப்பாக்கியுடன் காட்சியளித்தார். செல்வச் சந்நிதி தேர் எரித்த காட்சியையும் விமானத்தில் பறந்தபடி அவர் கண்டு களித்ததாக கூறப்பட்டது.

எனினும் இராணுவ சீருடை தரித்து அவர் போர்முனைகளில் நின்றதில்லை.

பிரேமதாசா அரசில் ரஞ்சன் விஜயரத்தின கடும் போக்கான பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்தபோதும் போருடை தரித்து நின்றதில்லை.

சந்திரிக்கா அரசின் பிரதிபாதுகாப்பு அமைச்சரான ஜெனரல் ரத்வத்தைதான் போருடை தரித்து புறப்பட்ட முதலாவது அமைச்சராவார்.

பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுவதாக அவர் கூறினாலும், சிங்களப் பேரினவாதிகள் 'துட்டகைமுனு' என்று அழைப்பதையும் அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டே இருக்கிறார்.

துட்டகைமுனு பயங்கரவாதத்தை எதிர்த்து போராடிய மன்னனல்ல. எல்லாளன் என்னும் தமிழ் மன்னனை எதிர்த்தே அவர் யுத்தம் புரிந்தார்.

எல்லாளன், துட்டகைமுனு யுத்தம் என்பது இனப்போராகவும், சிங்கள இனத்தின் பெருமிதமான வரலாறாகவும் பிரசாரப்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருபுறம் கடலும், மறுபுறம் தமிழர்களும் இருக்கும்போது தன்னால் நீட்டி நிமிர்ந்து படுத்துத் தூங்க முடியவில்லை என்று துட்டகைமுனு வருந்தியதாக சிங்கள பாடப்புத்தகங்களில்கூட இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்கள மன்னர்கள் பலர் உள்ளனர். வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் போன்றோரும் உள்ளனர்.

ஜெனரல் அநுருத்த ரத்வத்தை கண்டியைச் சேர்ந்தவர். அவரை அன்பு காரணமாக புகழ்வதாயிருந்தால் கண்டி மன்னனின் வாரிசு என்றுதான் கூறியிருப்பர். இன்னொரு ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் என்று புகழ்ந்திருப்பர்.

எனவே, துட்டகைமுனு என்று புகழப்பட்டதின் உள்ளார்ந்த அர்த்தம் எதுவென்பது ஊகிக்கக்கூடியதே.

இன்னொரு விடயத்தையும் இங்கு உற்று நோக்கவேண்டியது இன்றியமையாததாகிறது.

லலித் அத்துலத் முதலிக்கு தென்னிலங்கையில் உள்ள செல்வாக்கு ரஞ்சன் விஜயரத்தினாவுக்கு இருந்ததில்லை.

லலித் அத்துலத் முதலி வடக்குப்போர்முனையில் தீவிரம் காட்டும் ஒருவராக மாறியபின்னரே தென்னிலங்கையில் அவரது செல்வாக்கு மேலும் உயர்ந்திருந்தது. அவரது மறைவை முன்னிட்டு கணிசமான சிங்கள மக்கள் கவலையடைந்தனர்.

ரஞ்சன் விஜயரத்தினாவும் புலிகளுக்கு எதிரான கடும்போக்காளராக இருந்தும்கூட அவர் மறைந்தபோது சிங்கள மக்களில் கணிசமானோர் மகிழ்ச்சியடைந்தனர்.

ஜே.வி.பிக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் சிங்கள இளைஞர்கள் பலரது அநியாயச்சாவுகளுக்கு ரஞ்சனும் முக்கிய காரணம் என்று கருதியதாலேயே அவர்மீது சிங்கள மக்கள் வெறுப்புக் கொண்டிருந்தனர்.

லலித் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோதும் வடக்கு-கிழக்கில் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். குண்டுவீச்சுக்களால் பல நகரங்கள் நாசமாகின.

'ஒப்பரேஷன் லிபரேசன்' நடவடிக்கைதான் லலித் புகழை உயர்த்த காரணமாக இருந்தது. அந்த நடவடிக்கையின்போது ஆலயங்களில் புகலிடம் தேடிய மக்கள்கூட படுகொலை செய்யப்பட்டனர். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைதாகி பூசா முகாமில் அடைக்கப்பட்டனர்.

அவ்வாறு இருந்தும் லலித் பெருமைக்குரிய ஒருவராகவே சாதாரண சிங்கள மக்களாலும் நோக்கப்பட்டார்.

இந்த மனோநிலையானது பயங்கரவாதத்திற்கு எதிரான மனோநிலை என்று கூறுவது தவறானதாகும்.

அவ்வாறு கூறுவதானால் ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கையையும் அவ்வாறுதான் நோக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஜே.வி.பி.க்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் தமது அரசியல் எதிரிகளையும் வேட்டையாடியது ஐ.தே.கட்சி அரசாங்கம்.

அதே போல புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அப்பாவித்தமிழ் மக்கள் அன்றும், இன்றும் துன்பச் சகதியில் தள்ளப்பட்டு வருகின்றனர். அப்பாவி உயிர்கள் பலியாகி வருகின்றன.

ஆனால், வடக்கு-கிழக்குப் போரில் நடைபெற்ற அத்துமீறல்களை தெற்கில் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாத போக்கே நிலவி வருகிறது. அதற்கு காரணமானவர்களுக்கு அதீத செல்வாக்கும் கிடைத்திருக்கிறது.

யாழ் நூலகத்தை எரித்த காமினி பொன்சேகாவுக்கும் அடுத்து வந்த தேர்தல்களில் பெருவாரியான வாக்குகள் கிடைத்தன.

இதே காரியத்தை ஜே.வி.பி.க்கு எதிரான நடவடிக்கையில் தென்னிலங்கையில் அவர் செய்திருப்பாரேயானால் படுதோல்வியே கண்டிப்பார்.

எனவே, தம் இனத்தினர் மத்தியில் மனித உரிமை மீறல்களை நடத்தியவர்களை நிராகரித்த சிங்கள வாக்காளர்கள், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியவர்களை அங்கீகரித்து வந்துள்ளனர் என்பது கசப்பான ஒரு உண்மையாகும்.

ஜே.வி.பி.க்கு எதிரான நடவடிக்கைக் காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டதையும், புதை குழி விவகாரங்களையும் தார்மீக ஆவேசத்துடன் சிங்களப் பத்திரிகையாளர்கள் அம்பலப்படுத்தினார்கள். அவர்களது எழுச்சிதான் சந்திரிக்கா அம்மையாருக்கும் பெரும் சாதகங்களை உருவாக்கித் தந்திருந்தது.

ஆனால் இன்று செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாகவோ, தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் குறித்தோ சிங்களப் பத்திரிகையாளர்கள் அலட்சியம் காட்டிவருகின்றனர்.

பிரேமதாசா அரசில் சிங்களப் பத்திரிகையாளரான ரிச்சார்ட் டி சொய்ஸா கொல்லப்பட்டதை எதிர்த்து சிங்களப் பத்திரிகையாளர்கள் போர்க்கோலம் பூண்டிருந்தனர்.

இன்று தமிழ்ப் பத்திரிகையாளர்களை திருடர்களைப் பிடிப்பதைப்போல கடத்திச் சென்று தடுத்துவைப்பதை சிங்கள பத்திரிகையாளர்கள் கண்டிக்க முன்வராதது மட்டுமன்றி, அவர்கள் புலிகளாக இருக்கலாம் என்ற அபிப்பிராயத்தையும் உருவாக்கி விடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

ஆக, சாதாரண சிங்கள மக்கள் முதற்கொண்டு சிங்களப் புத்தி ஜீவிகள்வரை வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெல்லுவதை இனப் பெருமையாகவே உள்ளூர எண்ணுகின்றனர்.

யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் தென்னிலங்கையில் கேட்ட பட்டாசு முழக்கங்கள் அந்த உணர்வின் பிரதிபலிப்பேயாகும்.

இந்த உணர்வை மறைமுகமாக ஊக்குவித்தாக வேண்டிய நிலையில்தான் சந்திரிக்கா அரசு இன்றுள்ளது.

அவ்வாறில்லையெனில் போர்முனையில் பலியாகும் மாபெரும் மனித உயிர்க் கணக்குகளுக்கு அரசினால் பதில் சொல்ல முடியாதுபோகும்.

உடல்கள் தொடராக வந்திறங்கும்போது தென்னிலங்கையில் எழும் அவலக்குரல்களும், மாபெரும் சோகங்களும் ஆட்சியாளருக்கு எதிராக திரும்பாது பார்த்துக் கொள்வதாயின்,படையினரை துட்டகைமுனுவின் படை வீரர்களுக்கு ஒப்பானவர்களாக போற்றியாக வேண்டும்.

பௌத்த மத பீடங்கள் மூலம் இந்த மரணங்கள் நியாயமானவை என்ற சிந்தனையை எங்கும் விதைத்தாகவும் வேண்டும்.

பௌத்த மத குரு போர் முனைக்கு சென்று ஆசி வழங்கவும் அரசே ஏற்பாடு செய்து கொடுக்கிறது. வேறு எந்த மதத்தின் குருவும் போர்முனைக்கு அனுமதிக்கப்படுவதில்லை.

ஜயசிக்குறுய் படையினருக்கு ஆசிவழங்கி படை நகர்வை ஆரம்பித்து வைக்க கிளிநொச்சிக்கு சென்ற பௌத்த பிக்கு ஒருவர் சமீபத்திய சமரில் காணாமல் போய்விட்டதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசின் நிலை புலிவால் பிடித்த கதைதான். இனி முன்வைத்த காலை பின்வைக்க முடியாது. பின்வைத்தால் பேரினவாதம் விழுங்கிவிடும்.

ஆனால் போரில் அரசு நினைக்கும் இலக்குகளை எட்டுவதும் சுரபமல்ல. துட்டகைமுனு சந்தித்தது எல்லாளனை. ஜெனரல் அநுருத்த ரத்வத்தை சந்திப்பது வேலுப்பிள்ளை பிரபாகரனை.

இது முடியக்கூடிய யுத்தமல்ல. ஆனால் அரசும் அதனை ஒத்துக்கொள்ள போவதில்லை.

யுத்தத்தை தொடர ஒதுக்கப்பட்டுள்ள மேலதிகமான நிதி, அரசு பேச்சுவார்த்தையை நாட விரும்பவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாக காண்பித்துள்ளது.

இனப்போர் என்ற கண்ணோட்டம் வளர்ந்து, போர் வெற்றி என்பதை தமிழ் பேசும் தரப்பின் பேரம் பேசும் பலத்தை முறித்தல் என்று பேரினவாதம் கருதி நிற்கிறது.

எனவே, இந்த நாட்டுக்குள் பிரச்சனை தீரக்கூடிய சாத்தியக்கூறுகள் முன்னெப்போதையும்கூட இப்போதுதான் இல்லாதொழிந்து வருகின்றன.

ஆகவே, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுதான் இன்றியமையாததாகின்றது. அநியாயமான உயிரிழப்புக்களை தவிர்க்க விரும்பும் சக்திகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை உருவாக்க நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த வேண்டும்.

மேலதிக நிதி ஒதுக்கீடுகள் மனித இரத்த நதியில் இத்தீவு மிதக்கவே வழிவகுக்கும். ■

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

### செம்மணியை சிறிதாகக்காட்ட.....

கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி இடம்கொடுக்கமாட்டார். இலங்கை துருப்புக்கள், இலங்கை அரசின் வானொலி, தொலைக்காட்சி. இவற்றில் யார் கடவுள்? யார் பூசாரி?

'கிளிநொச்சி பிரதேசம் தொடர்ந்து படை வசமே உள்ளது' என்று 1.10.98 அன்று மாலை ஆறுமணிச் செய்தியில் அரச வானொலி அடித்துக் கூறியது.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, இத்தனை பெரிய பொய்யை சொல்லும் தைரியத்தையும் செய்தி கேட்ட பலர்பாராட்டினர்.

இச் செய்தி கூறுவதற்கு பலமணிநேரம் முன்பாக கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடந்தது. அதில் இராணுவப் பேச்சாளரே கிளிநொச்சியில் படை இல்லை என்பதை ஒப்புக் கொண்டுவிட்டார்.

அந்த மாநாட்டுக்குக்கூட ஒலிபரப்புக்கூட்டுத் தாபன செய்தியாளர் செல்லவில்லையோ?

போர்முனைச் செய்திகளில் உண்மைகளை கூறுவதில்லை என்ற பொதுவிதி ஒன்றை ஒலிபரப் புக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கிறதா? அந்த விதி காரணமாகத்தான் இராணுவப் பேச்சாளர் கூறியதைக்கூட ஏற்கமுடியாமல் போனதோ?

●●●

வட்டுக்கோட்டைக்கு போகும் வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்று கூறினானாம். அதுபோல சிலர் புறப்பட்டிருக் கிறார்கள்.

செம்மணி புதைகுழியை தோண்டாமல் காலம் கடத்துகிறது அரசாங்கம். அங்கு தீயும், புகையும் தெரிகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

செய்ய வேண்டிய காரியம் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு உலகில் உள்ள மனித உரிமை குழுக்களையெல்லாம் அழைத்துச் சென்று 'பாரு பாரு செம்மணி பாரு. ராஜபக்ஷ சொன்ன தெல்லாம் பொய் பாரு!' என்று காட்டினால்...?

அறு நூறுக்கு மேற்பட்டோர் பலி. பாலியல் வல்லுறவுகள் உட்பட மேலும் பல அநியாயங்கள் நடந்துள்ளன. குழியை உடன் தோண்டி எலும்பு களை மீட்டிருந்தால், ராஜபக்ஷ மேலும் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டிருக்கலாம்.

இத்தனைக்கும் மத்தியில் செம்மணி புதைகுழி விவகாரத்தின் தாக்கத்தை குறைக்க சிலர் புறப்பட்டிருக்கிறார்கள். செம்மணி மட்டும்தான் புதைகுழியோ? புலிகள் வெட்டிய குழிகளும் உள்ளன என்று கூறுகின்றனர்.

புலிகளின் தவறுகளையும், சக போராளிகள் மீதான பாய்ச்சல்களையும் செம்மணி விவகாரத் துடன் ஒப்பிட முடியாது.

இந்தியப்படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெட்டிய குழிகள், தட்டிய தலைகளையும்கூட செம்மணியுடன் ஒப்பிட முடியாது.

செம்மணியில் பலியானவர்கள் இன ஒடுக்கு முறையின் இன சங்காரத்தின் ஒரு கட்டமாக கொல் லப்பட்டவர்கள். பாலியல் வல்லுறவு போன்ற கொடுமைகளுக்கு உள்ளான பலரும் குழிகளுக்குள் இருக்கின்றனர்.

ரஜினி திரணகம கொலை கண்டிக்கத் தக்கது. பாரதூரமானது. அதற்காக அதனையும் கிரிஷாந்தி கொலையையும் ஒப்பிட முடியாது. பின்னது இனவாத வக்கிரம் கலந்த கொலை!

ஒரு கோட்டுக்கு அருகே பெரிய கோடாக கீறிக்காட்டினால் முதல் கோடு சிறிதாகிவிடும். செம்மணியில் அரசின் முகத்தை பாதுகாக்க நினைக்கும் சிலரும் அதனைத்தான் செய்கின்றனர்.

இதே விமர்சகர்களிடம் ஒரு கேள்வி கேட்க ஆசை.

சூரியகந்தை புதை குழிகளை சந்திரிக்கா தோண்டியபோது ஆஹா ஓஹோ என்று புகழ்ந்தீர்கள். "சிறிமா அம்மையார் ஆட்சியிலும் களனி கங்கையில் இளைஞர் பிணங்கள் மிதந்தன. அழகி மன்னம்பேரி நிர்வாணமாக்கப்பட்டார். எனவே சூரிய கந்தை மட்டும்தான் மனித உரிமை மீறல்விடயம் என்று நினைக்கக்கூடாது" என்று அப்போது மட்டும் ஏன் சொல்ல மறந்தீர்கள்?

புலிகளின் தவறுகளை சுட்டிக்காட்டுவது தவறில்லை. அதற்காக அரசின் தவறுகளையும், மாபெரும் அநீதிகளையும் முடிமறைப்பதற்கான உத்தியாக புலிகளின் தவறுகளை சுட்டிக்காட்டு வது சரியல்ல.

★★

வவுனியாவில் சகல இயக்கங்களும் இனிமேல் இராணுவ பாஸ் பெற்றாக வேண்டும். வவுனியா நகரைவிட்டு வெளியேற வேண்டுமானால் இராணுவ பாஸ் பெறவேண்டும்.

வவுனியாவில் கைதான புலி என்று சந்தேகிக் கப்படும் மாணவர் ஒருவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அடையாள அட்டை வைத்திருந்தாராம். படை யினர்தான் அதனைக் கூறியுள்ளனர்.

அதனை சாட்டாக வைத்தே சகல இயக்கங் களும் பாஸ் பெற வேண்டும் என்று கூறியுள்ளனர்.

பாஸில் மோசடி செய்ய முடியாதா? பாஸ் பெற எத்தனையோ வழிகள் உள்ளதே! கையிலே காசு, பையிலே பாஸ்.

தமிழ்க்கட்சிகளை மேலும் மேலும் கட்டிப் போட்டு வைத்திருக்க இதெல்லாம் ஒரு சாக்குப் போக்கு அவ்வளவுதான்.

தமது உறுப்பினர்களும் இனிமேல் கியூவில் நின்று பாஸ் பெறுவதைப் பற்றி தலைவர்களுக்கு கவலையில்லை. பணிந்து நடக்க உறுப்பினர்கள் கற்றுக் கொள்வதையே அவர்களும் விரும்பு கின்றனர். ■



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 30

**கடந்தவாரம்**

**பிரிட்டிஷ்காரர்கள் உட்பட ஆசிய நாட்டவர்கள் அனைவரையும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு போடுகிறான் இடி அமீன். நூ டொலர்கள் மட்டுமே எடுத்துச் செல்லலாம் என்றும் முதலில் அறிவிக்கப்படுகிறது.**

**இனி....**

# இடி அமீன்

**நூறு** டொலர்களை மட்டுமே எடுத்துச் செல்லலாம் என்று முதலில் உத்தர விட்ட அமீன் பின்னர் விடுத்த அறிவித்தல் ஆசிய நாட்டவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

'தங்கள் தேவைக்குரிய பொருட்களை ஒரு குறிப்பிட்டளவில் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வாறு எடுத்துச் செல்லும் பெட்டிகளில் தெளிவாக பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருக்க வேண்டும்' என்று உகண்டா வானொலி அறிவித்தது.

இடி அமீனின் மனம் சற்று இரங்கி விட்டது என்றே உகண்டாவில் உள்ள ஆசிய நாட்டவர்கள் நினைத்தனர்.

பெறுமதியான பொருட்களை மட்டும் பெட்டிகளில் எடுத்துக்கொண்டு ஆசியர்கள் விமான நிலையம் சென்றனர். கம்பாலா விமான நிலையத்தின் முன்புறமாக ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

அம்மண்டபத்தில் இருந்த இராணுவத்தினரிடம் பெட்டிகளையும், பொதிகளையும் ஒப்படைக்கவேண்டும். எந்த விமான நிலையத்துக்கு அவை போய்ச் சேரவேண்டுமோ அங்கு அவற்றை அனுப்பிவைக்கிறோம் என்று கூறப்பட்டது.

அனைவரும் தமது பொதிகளை ஒப்படைத்துவிட்டு விமானத்தில் ஏறினர். ஆனால் அவர்களது பொதிகள் மட்டும் விமானத்தில் ஏறவில்லை. மண்டபத்தில் மலைபோல குவிந்து கிடந்தன.

ஒவ்வொரு விமானம் புறப்படும்வரையும் பொதிகள் அங்கேயே கிடக்கும். விமானம் புறப்பட்டதும் அதில் ஏற்றுவதாக கூறி வாங்கிவைக்கப்பட்ட பொதிகள் தனியான ட்ரக் ஒன்றில் ஏற்றப்பட்டன.

அந்த ட்ரக் வண்டிகள் நேராக அமீனின் இருப்பிடத்திற்கு விரைந்தன.

ஆசிய நாட்டவர்கள் அனைவரும் வெளியேறிய பின்னர் அமீனின் மாளிகை முன்றலில் மலை மலையாக பெட்டிகளும், பொதிகளும் குவிந்துகிடந்தன.

அமீன் முன்பாகவே அத்தனை பொதிகளும் பிரித்துப் பார்க்கப்பட்டன.

தங்க நகைகள் போன்ற பெறுமதியான உடமைகள் இருந்த பொதிகளை அமீன் பொறுப்பு ஏற்றுக்கொண்டான்.

ஏனையவை அமீனின் பாதுகாப்புக்காக நின்ற படையினருக்கும், படை உயரதிகாரிகளுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

அமீனின் மனைவியர் வீடுகளுக்கும், உறவினர்கள் வீடுகளுக்கும் பொதிகள் பிரித்து அனுப்பப்பட்டன. காதலிகள் வீட்டுக்கும் மறக்காமல் பொதிகளை அனுப்பிவைத்தான் அமீன்.

"வாவ்!" என்றாள் இல்மா.

**"முதலில் நீ வா!"** என்று அவளது தொடையில் கிள்ளினான் அமீன்.

அவள் வலியில் துடித்து நடிக்க, கிள்ளிய இடத்தை வருடிவிடும் சாக்கில் அமீனின் கைகள் விஷமம் புரிந்தன.

"தேவையான பொருட்களை கொண்டு செல்லுமாறு ஏன் கூறினீர்கள்?" என்றாள் இல்மா.

அவளை ஆராய்ந்து கொண்டே விஷமமாகச் சிரித்த அமீன், **"அப்படிச் சொன்னதால்தான் எங்கேயும் புதைத்து வைத்துவிட்டுப் போகாமல் தாமாகவே கொண்டுவந்து தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆசியர்களை முட்டாள்களாக்கிவிட்டேன் பார்த்தாயா?"** என்றான்.

உண்மையாகவே வியந்தாள் இல்மா. அவனது தலையை தடவி, நெற்றியில் முத்தமிட்டாள்.

"தங்க மூளை!" என்றாள் கண்களை கிறக்கமாக வைத்துக்கொண்டு.

ஆசிய நாட்டவர்களை அமீன் வெளியேற்றியதற்கு உகண்டாவில் வரவேற்பு இருந்தது.

ஆசியர்கள்மீது பொறாமை கொண்டிருந்த உகண்டாவாசிகள் 'அமீன் புகட்டிய பாடம் பொருத்தமானது' என்று கூறினார்கள்.

ஆனாலும் ஆசியர்கள் விட்டுச்சென்ற செல்வத்தை அமீனும், அவனது படைகளும் மட்டுமே பங்குபோட்டு அனுபவித்ததையும் உகண்டாவாசிகள் பொறுமையோடுதான் பார்த்தார்கள்.

'எங்களுக்கும் பகிர்ந்து கொடுத்திருக்கலாம்!' என்பது பலரது அபிப்பிராயமாக இருந்தது. ஆனாலும் வாய்விட்டு கூறினால், உயிர்விட்டுப் போய்விடும் என்று யாரும் மூச்சுக்காட்டவில்லை.

மக்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை மோப்பம் பிடித்து அமீனுக்கு கூறியது உளவுப் பிரிவு.

**"ஆள்பவன் கொஞ்சம் அனுபவிக்கக் கூட விடமாட்டார்கள். போலிருக்கிறதே!"** என்று சிரித்தான் அமீன். ஆனாலும் உள்ளூர கொஞ்சம் யோசித்தான்.

மக்களின் அதிருப்தி வளருவது ஆபத்தானது என்பதால், அதற்கு மாற்று மருந்து கொடுத்தாக வேண்டும் என்று நினைத்தான்.

அதற்கான வாய்ப்பும் கைக்கெட்டியது.



மீண்டும் எப்படியாவது உகண்டாவுக்கு திரும்ப வேண்டும். அமீனை பதவியில் இருந்து விரட்ட வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார் ஒபேடே.

தான்ஸானியாவின் உதவியுடன் கிளர்ச்சிப் படை ஒன்றை ஒபேடே உருவாக்கினார்.

உகண்டாவில் இருந்து தப்பியோடிய படையினர் பலர் ஒபேடேயின் கிளர்ச்சிப் படையில் இருந்தனர்.

"அமீன் ஒரு நம்பிக்கைத் துரோகி! வளர்ந்த கடாவாக இருந்து, வளர்த்தவனான என்மீதே பாய்ந்த துரோகி! உகண்டாவை வெறும் காலி டப்பாவாக மாற்றப்போகிறான். அவனை ஒழித்துக்கட்டுவதே என் இலட்சியம்!" என்று கிளர்ச்சிப் படைகள் மத்தியில் உரையாற்றினார் ஒபேடே.

ஆயிரம்பேர்வரை கிளர்ச்சிப் படையில் இருந்தனர்.

ஒபேடேக்கு அவசரம். இழந்த அதிபர் பதவியை விரைவாகப்பெறும் அவசரம்.



விமான நிலையத்தில் குவிந்த பொதிகள்

அவசரக்காரருக்கும் புத்தி மட்டுத்தான். பொறுமை இல்லாமல், அமீனின் பலம், பலவீனம் ஆராயாமல் தன் கிளர்ச்சிப் படையை உகண்டாவுக்குள் ஏவினார் ஒபேடே.

இரவோடு இரவாக தான்ஸானியா எல்லையூடாக உகண்டாவுக்குள் புகுந்தது கிளர்ச்சிப்படை.

**தருவது ரசிகன்**

ஒரு பகுதியினர் ஊடுருவும்போது உகண்டா படைவீரர்கள் கண்டுவிட்டனர். துப்பாக்கிகள் முழங்கின. அமீனுக்கு தகவல் பறந்தது.

அந்த நள்ளிரவில் இல்மாவை வதைத்துக் கொண்டிருந்தான் அமீன். அவள் தனது வக்கிரத்தால் துடிப்பதை கொடூர இரசனையுடன் அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அந்த இரசனையை கெடுக்கும் ':'போன் ஒலியை சபித்தபடியே எடுத்த அமீனை, மறுமுனைத் தகவல் தூக்கிவாரிப்போட்டது.

"மூன்றுபேரை பிடித்து வைத்திருக்கிறோம். இருபதுபேர் கொல்லப்பட்டுவிட்டனர். நமது தரப்பில் பத்துப்பேர் செத்துப்போனார்கள்!"

**"நீங்களும் செத்துப்போயிருக்கலாம். எல்லையில் காவல் காக்கச் சொன்னால், எவளோடு... கொண்டிருக்கிறீர்கள்?"** என்று ஒரு வார்த்தையை பிரயோகித்துவிட்டு, **"எத்தனைபேர் உள்ளே புகுந்திருக்கிறார்கள்?"** என்று கேட்டான்.

"குறைந்தது ஆயிரம் பேர் என்று..." கூறித் திணறிய அதிகாரியை குறுக்காக வெட்டி; **"குறைந்தது நிறைந்தது என்றெல்லாம் கணக்கு தேவையில்லை. அத்தனைபேரும் இறந்ததாக அடுத்து எனக்கு தகவல் வரவேண்டும்!"** என்று உரத்த குரலில் இடியாக முழங்கினான் அமீன்.

':'போனை அமீன் அடித்து வைத்த வேகத்தில், மிரண்டுபோன இல்மா, தன் அழகான உடம்பை ஒரு துவாலைக்குள் திணித்துக்கொண்டு, அமீனின் அருகே வந்து, "என்ன பிரச்சனை? இடி அமீனுக்கே இடியா?" என்றாள் கேலியாக.

அடுத்து நிகழ்ந்தது அவள் எதிர்பாராத ஒன்று. அவள் வாய்மூட முன்னரே அமீனின் கை ஒன்று ஓங்கி அறைந்தது.

இல்மாவுக்கு கண்களுக்குள், காதுகளுக்குள் பொறிகள் பறந்தன.

**"பேசாதே! கட்டிலில் மட்டும் உன் உடல் பேசினால் போதும்!"** என்றான் அமீன். தன் உடைகளை வேகமாக அணிந்து புறப்பட்டான்.

'இராட்சதன்' என்று அவன்முதுகை முறைத்தபடி மனதுக்குள் திட்டினாள் இல்மா.

அடுத்தநாள் காலையில் வானொலியில் உரையாற்றினான் இடி அமீன்:

**"உகண்டாவை பெரும் அபாயம் சூழ்ந்துவிட்டது. ஆசிய நாட்டவர்களை மீண்டும் உகண்டாவுக்குள் கொண்டு வந்து எங்கள் செல்வத்தை கொள்ளையிட சதி நடக்கிறது.**

**முன்னாள் ஜனாதிபதி ஒபேடே இந்தச் சதியின் சூத்திரதாரியாக இருக்கிறார் என்பதை முதலில் நான் நம்ப மறுத்தேன். கைது செய்யப்பட்டவர்கள் கூறும் தகவல்களும், கிடைத்துவரும் ஆதாரங்களும் நம்புமாறு என்னை வற்புறுத்துகின்றன.**

**ஒபேடே தனது தவறுகளை சுத்தமாக களைந்துவிட்டு, பதவியை கேட்டிருந்தால் உடனே தூக்கி கொடுத்துவிட்டு, இராணுவத் தளபதியாக இருந்து நாட்டைக் காக்க நான் சித்தமாயிருந்தேன்.**

**ஒபேடே நல்லதை நாடாமல் தீயதை நாடிவிட்டார். நாட்டின் எதிரிகளுடன் சேர்ந்து உகண்டாவை தின்ன படை அனுப்புகிறார்.**

**உகண்டாவின் சுதந்திரம், உகண்டாவின் கௌரவம் கருதி கிளர்ச்சிப் படையை அடக்க இரக்கம் காட்டாமல் செயற்படுமாறு உகண்டாவின் வீர இராணுவத்துக்கு கட்டளை இட்டுள்ளேன்!"** என்று உரையாற்றினான் அமீன்.

கைதானவர்கள் மூன்றுபேர்தான். நூறு பேர் கைதானதாக உகண்டா வானொலி பிரசாரம் செய்தது.

தான்ஸானியா எல்லையில் தாம் சந்தேகப்பட்ட பலரை கைது செய்து அவர்களை கிளர்ச் சிக்காரர்கள் என்று படம்பிடித்து பத்திரிகைகளுக்கு கொடுத்தனர்.

உகண்டா இராணுவம் அமீனுக்கும் தண்ணி காட்டியது.

உகண்டாவுக்குள் ஊடுருவிய கிளர்ச்சிக்காரர்கள் எங்கோ பதுங்கிக் கொண்டனர்.

கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னால் அமீன் சீறுவான். அதிகாரிகளை பதவியில் இருந்து தூக்கியடிப்பான்.

அதனால் தாம் சந்தேகிக்கப்படும் ஆட்களை எல்லைகளில் சுட்டுப்போட்டுவிட்டு, "கிளர்ச்சிப் படைகளை தேடியழிக்கும் வேட்டை வெற்றிக்கரமாக நடக்கிறது" என்று அமீனுக்கு கூறிக்கொண்டிருந்தனர்.

(இடி தொடரும்)

## அப்பாவுக்கு அனுமதி



**பி**ரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்சுக்கும், அவரது காதலி கமீலாவுக்கும் இந்த ஆண்டு மறக்க முடியாத ஆண்டு.

அவர்களது தீராக் காதல் ஆரம்பமாகி 25 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. வெள்ளிவிழாக் காதலர்களான இருவரும் தற்போது பொது நிகழ்ச்சிகளில் ஜோடியாகக் காணப்படுகின்றனர்.

கடந்த ஜூலை மாதம் கமீலாவின் 50 வது பிறந்தநாள் கொண்டாட்டம் சாள்ஸ்சின் அரண்மனையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அன்று மாலையில் அரண்மனைக்கு வந்த கமீலா மறுநாள் காலையில்தான் தனது இல்லம் திரும்பினார்.

1996ல் சாள்ஸ், டயானா நிரந்தரமாக பிரிந்தனர். அதே ஆண்டில் கமீலாவும் தனது கணவர் பார்க்கரை விவாகரத்து செய்துவிட்டார்.

கமீலாவுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். 23 வயதான டாம் சினிமாப்பட விநியோகஸ்தராக உள்ளார். மகள் லூரா ஒக்ஸ்ஃபோட்டில் படித்துவருகிறார்.

டயானா இறந்த தகவல் கிடைத்ததும் வில்லியம், ஹரி ஆகியோருக்கும் கமீலாவுக்கும் உடன் தெரிவித்தாராம் சாள்ஸ்.

டயானாவின் மறைவின் பின்னர் கமீலாவின் வீட்டு நிர்வாகத்தை சாள்ஸ் பொறுப்பேற்றுள்ளார்.

கமீலா வீட்டுக்கான செலவைப் பொதுப் பணத்தில் இருந்து செய்யாமல், தன் சொந்தப் பணத்தில் இருந்து செய்கிறார் சாள்ஸ்.

இளவரசர் வில்லியம் மன்னராக முடிசூட்டிக்கொள்ளட்டும். கமீலாவை மணந்துகொண்டு தான் வாழலாம் என்று நினைக்கிறாராம் சாள்ஸ்.

சாள்ஸ்சின் துணைவியாக கமீலா வருவதை இளவரசர் வில்லியம் ஏற்றுக் கொண்டுள்ளார்.

தாயாரான டயானா தனக்கான நல்ல துணையைத் தேடச; சம்மதித்தவர் வில்லியம். டோடி ஃபயட்டை டயானா மணம் முடிப்பதற்கு வில்லியமும் சம்மதம் கூறியிருந்தார்.

இப்போது தனது தந்தையார் தனக்கான துணையைத் தேடிக்கொள்வதற்கும் வில்லியம் சம்மதம் கூறியுள்ளார்.

அரச குடும்பத்தினரும் கமீலாவை தங்களுக்குள் ஒருத்தியாக்க சம்மதித்துள்ளதாக தெரிகிறது.

வெள்ளிவிழா காதல் திருமணத்தில் முடியக்கூடிய சாத்தியக்கூறுகள் தெரிகின்றன.

## அதிபரின் காதலிகள்



**அ**ரசியல் தலைவர்களுக்கு அழகிகள் மேல் எப்போதும் ஒரு கண் தான் போலும். அமெரிக்க அதிபரின் ஜொள்ளுகள் வெளியான சூட்டோடு ஃபிரான்ஸ் நாட்டு முன்னாள் அதிபரின் லீலைகள் அம்பலமாகியுள்ளன.

ஃபிரான்ஸ் நாட்டின் புகழ் பெற்ற அதிபர் பிரான்சுவாஸ் மித்ராண்ட். மறைந்துவிட்ட இந்த முன்னாள் அதிபர் நாட்டை ஆள்வதில் மட்டுமன்றி, அழகிகளை கவர்வதிலும் கில்லாடி. ஆனால் அவர் மறையும்வரை இந்த கில்லாடித்தனம் வெளியே தெரியவே இல்லை.

மித்ராண்டின் மரணச் சடங்கில்தான் அவருக்கு ஒரு காதலியும் பிள்ளையும் இருப்பது தெரியவந்தது. அவர்களுக்கும் அவரது மரணச் சடங்கில் கலந்து கொள்ள அனுமதியளிக்கப் பட்டது.

அந்தக் காதலியுடன் மட்டுமல்லாமல் பலருடன் மித்ராண்ட் காதல் லீலைகள் புரிந்திருக்கிறார். அந்த லீலைகள் அடங்கிய புத்தகம் ஒன்று வெளியாகி ஃபிரான்ஸ்சில் பரபரப்பு ஏற்படுத்தி வருகிறது.

புத்தகத்தை வெளியிட்டுள்ள நிறுவனம் அதனை எழுதியவர் பெயரை இரகசியமாக வைத்திருக்கிறது.

## கவுன்கள் விற்பனை



**ஒ**ஸ்கார் விருது பெறும் நடிகைகள் ஒரு நல்ல காரியத்துக்கு தங்கள் உடைகளைத் தரப்போகிறார்கள்.

கவர்ச்சிகாட்டி இரசிகர்களை மயக்க ஆடைகளை இழக்கத் துணியும் நடிகைகள், எய்ட்ஸ் நோயாளிகளுக்காக தங்கள் ஆடைகளை இழக்கச் சம்மதித்துள்ளனர். அதாகப்பட்டது தங்கள் 'கவுன்'கள் சிலவற்றை ஏலம்விட சம்மதித்துள்ளனர்.

ஒஸ்கார் விருது வாங்க செல்லும்போது புதிய வடிவங்களில் ஆடை அணிந்து செல்லுவது நடிகைகளது வழக்கம். நடிகைகள் எவ்வாறான ஆடைகளில் வருகின்றனர் என்பதைக் காணவே தொலைக்காட்சி முன்னால் பலர் தவம் கிடப்பார்கள்.

அந்த ஆடைகளைத்தான் ஏல நிறுவனம் ஒன்றுக்கு தரப் போகின்றனர். அதனை விற்றுக் கிடைக்கும் பணம் எய்ட்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சை செய்யப் பயன்படுத்தப்படும்.

நடிகைகளின் உடைகளை வாங்கி தங்கள் படுக்கை அறைகளில் வைத்திருக்க பல கோடீஸ்வரர்கள் போட்டி போடுகின்றனர். இது ஒருவிதமான செக்ஸ் வியாதி என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

எப்படியோ ஒரு வியாதியால் இன்னொரு வியாதியை குணமாக்க நிதி கிடைக்கிறது.

## பிணத்தோடு வாழ்ந்தவர்

**மூ**ட நம்பிக்கைகளுக்கு எல்லையே இல்லாமல் போய்விடுகிறது. இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் சண்டிகார் பகுதியைச் சேர்ந்தவர் ஹர்பிரித்சிங். இவர் சீக்கியர்.

இவரது தாயார் இந்த ஆண்டு மே மாதம் 29ம் திகதி இறந்துவிட்டார். ஆனால் ஹரிபிரித்சிங் அதனை யாரிடமும் கூறவில்லை.

தாயாரின் உடலை வீட்டிற்குள்ளேயே வைத்திருந்தார். என்றாவது ஒருநாள் உயிர்த்து எழுவார் என்ற நம்பிக்கையில் தாயாரின் பிணத்தை அப்படியே வைத்திருந்தாராம்.

நான்கு மாதங்களாக பிணத்தோடு வாழ்ந்திருக்கிறார். பின்னர் அயலவர்கள் மூலம் தகவல் பொலிசுக்கு போயிருக்கிறது. அதன்பின்னரே பிணத்தை எரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இத்தனைக்கும் ஹரிபிரித்சிங் ஒரு பொறியியலாளர். படித்தவர்கள்தான் மூட நம்பிக்கையை பற்றிப் பிடித்துக் கொள்கிறார்களோ?

## வயாக்ராவுக்கு போட்டி



**அ**மெரிக்காவின் உற்பத்தியான வயாக்ரா மாத்திரை பற்றிய சங்கதிகள் பழையதாகிவிட்டன. இப்போது அதற்கு போட்டியான மாத்திரை தயாரிப்பதில் பல நாடுகளில் உள்ள மருந்துக் கம்பனிகள் ஈடுபட்டுள்ளன.

இந்தியாவில் வயாக்ராவுக்கு போட்டியாக மாத்திரை தயாராகி வருகிறது.

நோர்வே நாட்டில் புதிய மாத்திரை சூடாக சந்தைக்கு வந்தேவிட்டது. 'அர்போர்' என்று மாத்திரைக்கு பெயரிட்டுள்ளனர்.

'வயாக்ரா' ஆண்களுக்கு மட்டும்தான். 'அர்போர்' ஆண், பெண் இருபாலாரும் பாவிக்கக் கூடியதாம். முட்டை சாப்பிட்டால் அலர்ஜி ஏற்படாத அனைவரும் இதனை சாப்பிடலாம்.


வேலைக்கு செல்லும் தம்பதிகளுக்கு ஏற்றது. தாம்பத்தியத்தில் சோர்வை போக்கி உற்சாகமளிக்கிறது. விலையும் குறைவு என்று விளம்பரம் வெளியாகியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com





## பயமறியாத பாலகன்

பாம்பு என்றால் படையே நடுங்கலாம். இந்தப் பாலகன் நடுங்கமாட்டான். இளம் கன்று பயமறியாது. பயமறியாமல் வளர்ப்பதும் அவசியம்தான்.

## முடியழகி



எந்த நாட்டு ராணி இவர்? என்றா கேட்கிறீர்கள்? யாருடைய இதயத்தில் ராணியாக இருக்கிறாரோ தெரியாது. ஆனால் நாடு எதற்கும் ராணியல்ல. ஜெர்மனியில் நடந்த கூந்தல் அலங்காரப் போட்டியில்தான் இப்படியொரு அசத்தலான கோபுர அலங்காரத்துடன் தோன்றினார். கப்பல் ஒன்று செல்வதுபோல தலை முடியை அலங்கரித்துள்ளார். இந்த தலை அலங்காரத்திற்கு ஒரு விசேஷ மரியாதை இருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஃபிரான்ஸ் அரசி மேரி ஆன்டோனிட் மிகவும் விரும்பிச் செய்யும் அலங்காரம் இதுதானாம். ராணிக்கு வேறு என்ன பொழுது போக்கு?!

## காதுக்குள் பேசலாம்



காது கேளாத கருவி போலத் தெரிகிறதா? தப்பு! இது மிக மிகக் குட்டியான நவீன தொலைபேசி.

கையில் கொண்டு திரிந்தது பழைய பாஷன். இனிக் காதுக்குள்ளேயே கொண்டு திரியலாம். வோக்மேன்னின் மைக்ரோ ஃபோனைப் போன்று இதனை காதில் பொருத்தி வைத்திருக்கலாம்.

ஃபோன் வந்ததும் காதுக்குள் சிணுங்கும். உடனே கழுத்துப்பட்டியில் இணைக்கப்பட்டிருக்கும் சிறிய மைக்ரோஃபோன் மூலம் பேசிக்கொள்ளலாம். இதனை இயர் ஃபோன் என்று அழைக்கிறார்கள். ஜப்பானிலுள்ள பிரபல நிப்போன டெலிஃபோன் கம்பனியின் தயாரிப்பு.

"காதோடுதான் நான் பேசுவேன்" என்பது பழைய பாடல். இனி காதுக்குள்ளேயே நீங்கள் பேசலாம்.

## இதுதான் மூக்குக் கண்ணாடி

மூக்குக் கண்ணாடி என்று கூறினாலும் அதனைத் தாங்கி நிற்பது நாங்கள்தானே என்று காதுகள் இனிமேல் கர்வப்பட்டுக்கொள்ள முடியாது.

படத்தில் உள்ள பெண்மணி அணிந்துள்ள மூக்குக் கண்ணாடியைப் பாருங்கள். காதில் அணியும் பிரேம் கிடையவே கிடையாது. மூக்கில் மட்டும் பசைபோல் ஒட்டி நிற்கக்கூடியது.



ஜப்பானில் தான் இதுவும் தயாரானது. கொசுறுத் தகவல்: இதே போன்ற கண்ணாடியைத் தான் 'பாட்ஷா' படத்தில் ரஜினி அணிந்து நடித்தார்.




## சிரிப்பூ

மனிதருக்கு மட்டுமே உரியதா சிரிப்பு. பாருங்கள், டொல்பின் என்ன ஜோராகச் சிரிக்கிறது? இதுதான் ஆனந்தச் சிரிப்பு.

டொல்பினுக்கு பயிற்சி கொடுக்கும் அழகிதான் அருகில் இருக்கிறார். "நீ குரு நான் டொல்பின். நீ சிரிக்கச் சொன்னால் நான் சிரிப்பேன்" என்று கூறுகிறதோ இந்த டொல்பின்.

## கையடக்க துப்பாக்கி



பார்வைக்கு சாவிக்கொத்து மாதிரித் தெரியும். ஆனால் மரணத்தின் வாசலையே திறக்கக்கூடிய துப்பாக்கி இது.

பல்கேரிய நாட்டைச் சேர்ந்த விக்டோர் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. நீளம் மூன்று அங்குலம். அகலம் ஒரு அங்குலம்.

பாதுகாப்பு சோதனைகளில்கூட சுலபமாக மாட்டிக்கொள்ளாது. இந்த சாவிவடிவ துப்பாக்கிக்கு பெண்களிடம் பலத்த வரவேற்பாம். பாதுகாப்பாக கொண்டு திரியலாம். யாராவது வாலாட்டினால் டப்பு டப்பு.



## உயிரின்றி உயிராக

கடற்கரையில் நடந்து செல்லும் இவர்களைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது? படை அதிகாரிகள் போலத் தெரிகிறது என்பீர்கள். உண்மைதான் ஆனால், உயிருள்ள மனிதர்களல்ல. அத்தனையும் சிலைகள்! என்ன ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! அத்தனை கச்சிதமாக சிலை வடித்துள்ளனர்.

அமெரிக்காவுக்கும் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கும் இடையே நடந்த யுத்தம் ஒன்றில் பிலிப்பைன்ஸ் ஜெனரல் டியுலக்ஸ் மேக் ஆர்தர் (கண்ணாடியுடன் உயரமாக நிற்பவர்) விரட்டியடிக்கப்பட்டார்.

'நான் நிச்சயம் திரும்ப வருவேன்' என்று சூளுரைத்த ஜெனரல், இரண்டு வருஷத்தில் ஒன்றரை இலட்சம் வீரர்களுடன் திரும்பி வந்தார்.

தீவின் கரையில் அவர்கள் வந்திறங்கிய காட்சியை படம்பிடித்து, அதே போஸில் செம்பில் சிலைவடித்து கடற்கரையில் வைத்துள்ளனர். ஜெனரலின் சிலையை சுத்தம் செய்கிறான் ஒரு சிறுவன். ஜெனரல் இறந்து நூறு வருசமாகிறது. அவரது சிலை உயிர்போல் உள்ளது!

## சீ...ப்...பு



படத்தில் இருப்பது பழைய சீப்பு. ரொம்ப ரொம்ப பழசு. ஈராக் நாட்டு ஆதிவாசிகள் உபயோகித்த சீப்பு.

பல்லுப்போன பாட்டி மாதிரி இந்தச் சீப்புக்கும் பல்லுகள் சில போய்விட்டன.

மரத்தால் செய்யப்பட்ட சீப்பில் மிருகங்கள் பறவைகள் போன்றவற்றின் உருவங்களை செதுக்கி வைத்திருக்கிறார்கள். சீப்பில்கூட கலை நயம் பார்த்திருக்கிறார்கள் அந்தக் காலத்தில்.



படிப்பகம்

www.padippakam.com



ரமேஷ்கண்ணா-அனுஷா
படம்: உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்

திரையுலக மறுபக்கம் 72

# மறுபடி ஒட்டிக்கொண்ட காதல்

## மனநோயில் சிக்கிய நடிகை

அஜித்குமார்-ஹீரா காதல் விவகாரம் முறிவதும் தொடர்வதுமாக இருக்கிறது.

அண்மையில் இருவரும் பகிரங்கமாகவே மோதிப் பிரிந்தனர். பத்திரிகையாளர்களை அழைத்து காதல் முறிவை பிரகடனம் செய்தார் ஹீரா. போதாக்குறைக்கு தாரைதாரையாக கண்ணீரும் கொட்டினார்.

அஜித்துடன் இனிக் காதல் இல்லை என்ற அதே ஹீராதான், அஜித்துக்கு இனிக்க இனிக்க முத்தம் கொடுத்திருக்கிறார்.

எங்கே? எப்போது?

அந்தக் கதையைக் கேளுங்கள். அஜித்குமார் நடிக்கும் படம் ஒன்றின் படப்பிடிப்பு ஊட்டியில் நடந்து கொண்டிருந்தது.

ஊட்டியில் படப்பிடிப்பு என்றாலே நடிகர்களுக்கு குஷி. அதிலும் குளு குளு ஊட்டிக்குளிரில், கிளு கிளு ஜோடிகளுடன் காதல் காட்சிகளில் நடிப்பது என்றால் கேட்கவா வேண்டும்.

ஊட்டியில் படப்பிடிப்பு என்றாலே சில நடிகைகள் நடுங்குவார்கள். அந்தளவுக்கு நடிகர்களின் தொல்லை அங்கு தாங்க முடியாது.

அப்படியாகப்பட்ட குளு குளு ஊட்டியில் அஜித் நடித்துக்கொண்டிருக்கிறார். அப்போது கார் ஒன்றில் சடுதியாக வந்து இறங்கினார் ஹீரா.

### பகிரங்க சரசம்

ஹீராவுக்குத்தான் அஜித்மேல் கோபம். அஜித்துக்கு ஹீராமீது கோபம் கிடையாது, தாபம்தான்.

ஹீராவைக் கண்டதும் படப்பிடிப்பையும் மறந்து அஜித் அவரை நோக்கி ஒடியிருக்கிறார். நீண்டநாளின் பின்னர் அஜித்தைக் கண்ட சந்தோசத்தில் ஹீராவும் உணர்ச்சிவசப்பட்டும் போனார்.

படப்பிடிப்புக் குழுவினர் பார்க்கிறார்களே என்பதையும் மறந்து, இருவரும் ஒருவரை நோக்கி ஒருவர் பாய்ந்தனர். இருவரும் நெஞ்சோடு நெஞ்சு மோத இன்ப அதிர்வுகள் பாய, இருவரும் கட்டியணைத்துக் கொண்டனர். இதழ்களை கவ்வி, இருவரும் மெய்மறந்து நிற்க, படப்பிடிப்பு குழுவினர் வெட்கப்பட்டு முகத்தை திருப்பிக்கொண்டனர்.

ஆவேசமான முத்தம் ஹீராவை அழவைத்து விட்டது. அஜித்தின் அரவணைப்பில் அவரது உடல் குலுங்கியது.

பகிரங்க முத்தத்தின் பின்வரும் அஜித்குமாருக்கு திருப்தியில்லை. படப்பிடிப்பை இரத்து செய்யுமாறு கூறி விட்டு ஹீராவையும் இழுத்து தன் காருக்குள் போட்டுக் கொண்டு காற்றாய் பறந்துபோனார்.

அஜித் தங்கியிருந்த ஹொட்டலுக்கு சென்று, அறைக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டனர். பூட்டிய அறைக் கதவையும் தாண்டி ஹீராவின் ஆவேசக்குரலும், அவரைச் சமாதானப் படுத்தும் அஜித்தின் குரலும் வெளியே கேட்டன.

சிறிது நேரத்தில் திடீர் அமைதி. உள்ளே அஜித் ஹீராவை எப்படி சமாதானப்படுத்தினாரோ தெரியவில்லை. ஹீராவின் ஆவேசம் அடங்கிவிட்டது.

இந்த நேரம் படப்பிடிப்பு குழுவினர் தமாஷாக ஒரு திட்டம் திட்டினர். சுவலட்சுமியைவிட்டு அஜித்துக்கு ஃபோன் பண்ணினார்கள்.

"ஹலோ அஜித் சார், நான் உங்ககிட்ட கொஞ்சம் தனியா பேசணும். உங்க ரூமுக்கு வரட்டுமா?" என்று சுவலட்சுமி கொஞ்சலாய் கேட்க, மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கிக் கொண்டிருந்த அஜித் "அய்யோ... இப்ப வேண்டாம். நாளைக்கு நானே வர்றேன்" என்று ஃபோனைக் கவிழ்த்திருக்கிறார்.

அன்று இரவும், அடுத்த இரண்டு நாட்களும் அஜித், ஹீரா இருவரதும் ஜொள்ளும், லொள்ளும் தாங்காமல் ஊட்டியே ஹீட்டாகி விட்டது.

### அஜித் பாய்ச்சல்

இந்த விடயம் சென்னை திரும்பி படப்பிடிப்புக்





விஜய
படம்: வீரம்

## மினி சினி

* 'புள்ளக்குட்டிக்காரன்' படத்தின் பின், நீண்ட இடைவெளி விட்டு பார்த்திபன் இயக்கி நடிக்கும் படம் 'ஹவுஸ்ஃபுல்'. இப்படத்தில் திரையரங்கில் பிளாக் டிக்கெட் விற்கும் பாத்திரத்தில் நடிக்கிறார் பார்த்திபன்.

* 'அனந்த கிருஷ்ணா' படத்தில் பிரகாஷ்ராஜிற்கு ஜோடியாக நடித்துள்ள செண்பகா, மறுபடி பிரகாஷ்ராஜிற்கு ஜோடியாக புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். தமிழில் அல்ல, 'ஜோடி சிம்மகளு' என்ற கன்னடப் படத்தில்.

* 'மாயா' இராம நாராயணன் இயக்கத்தில் நெப்போலியன்-நக்மா இணைந்து நடித்து வரும் புதிய படம். இந்தப்படத்தில்தான் இயக்குநர் சுந்தர். சி. கதாநாயகனாக நடிப்பதாக முதலில் அறிவிக்கப்பட்டது.

* 'பெண் ஒன்று கண்டேன்' படத்தில் சத்யராஜிற்கு ஜோடியாக சுவலட்சுமி நடிப்பதாக இருந்தது. பிறகு அவரை நீக்கிவிட்டு, கன்னட நடிகை பிரேமாவைப் போட்டனர். இப்போது பிரேமாவுக்கும் கல்தா கொடுத்துவிட்டு கௌசல்யாவை நடிக்க வைத்திருக்கின்றனர்.

* 'விரணய வர்ணங்கள்' என்ற படம் மூலம் மலையாளப் படவுலகில் காலடி வைத்த இசையமைப்பாளர் வித்யாசாகருக்கு, அந்தப்படம் சூப்பர் ஹிட்டாக ஓட, பலமலையாளப் படங்களில் இசையமைக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

* 'புண்ணியவதி' படத்தின் மூலம் அறிமுகமாகும் புதுமுகத்தின் பெயர் காரைக்குடி சிட்டு. இவரது சொந்தப் பெயர் சித்ரா. இதே பெயரில் ஏற்கனவே ஒரு நடிகை தமிழில் இருப்பதால்தான் இந்தப் பெயர்மாற்றமாம்.

* 'விசித்ரம்' என்ற பெயரில் தெலுங்கில் ஒரு படம் தயாராகி வருகிறது. இப்படத்தின் விசித்ரம் என்னவென்றால், தெலுங்கில் உள்ள அத்தனை நகைச்சுவை நடிகர்களும் இதில் நடித்து வருகிறார்கள்.

* 'கள்ளழகர்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக லைலா நடிக்கிறார். இதைவிட மேலும் இரு புதுமுகங்கள் இப்படத்தில் நடிக்கிறார்கள். ஒருவர் ஆந்திராவைச் சேர்ந்த மேனகா. மற்றவர் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த மௌலிகா.

## ராதிகாவின் கதை

'ஒரு நடிகையின் கதை' என்று குமுதத்தில் வந்த கதையை எதிர்த்துக் குரல் கொடுத்தார் ராதிகா அதற்கு பதிலாக 'கதையின் கதை' என்று ஒரு ரி.வி.நாடகம் எடுத்தார் ரேவதி.

இப்போது ராதிகாவைப் பற்றி கதை கதையாக எழுதுகின்றன பத்திரிகைகள்.

'நிறம் மாறாத பூக்கள்' படத்தின் நாயகன் சுதாகருடன் ஆரம்பித்த காதல் கூத்துகளில் தொடங்கி விஜயகாந்துடன் நெருக்கமாகி நடத்திய காதல் யாத்திரைவரை விலாவாரியாக அலசப்படுகிறது.

இதற்கிடையே ராதிகாவின் அமெரிக்க கணவர், பெருந்தொகையான பணத்துடன் அமெரிக்காவுக்கு கம்பி நீட்டிவிட்டதாக பரவலான கதை அடிபடுகிறது. ராதிகா அதனை மறுக்கிறார்.

"வியாபார விஷயமாக அமெரிக்கா போயிருக்கிறார். விரைவில் வந்துவிடுவார்" என்கிறார்.

ராதிகாவுக்கும் அவரது ஆண் நண்பர்களுக்கும் இடையேயான நட்புகள் சற்றும் தளராத கோபத்தில்தான் அமெரிக்கக் கணவர் ஒரு மிரட்டலுக்காக பணத்துடன் போயுள்ளார் என்கிறது இன்னொரு தகவல்.



பவித்ரா லோகேஷ்
படம்: புலனாய்வுத்துறை

## ரோஜாவின் காதல் முறி[...] இடம்பிடிக்கத் திட்ட[...]

நடிகை ரோஜாவும் செல்வமணியும் பிரிந்துவிட்டனர். செல்வமணி பற்றிய கேள்விகளுக்கு ஏனோதானோ என்று பதிலளிக்கிறார் ரோஜா." இது சமீபத்திய கிசுகிசு.

உண்மையாகவே காதல் முறிந்து விட்டதா? என்று துருவியபோது ருசியான தகவல்கள் கிடைத்தன.

செல்வமணியை காதலிக்கத் தொடங்கிய பின்னர்தான் ரோஜா மார்க்கெட் சரிந்தது.

நம்பர் வன் இடத்திற்கு வர இருந்தவரை, செல்வமணியின் காதலி என்றதும் இரசிகர்கள் கைவிட்டு விட்டனர்.

ரோஜாவின் சொந்தத் தயாரிப்பு படங்களும் எடுபடவில்லை. மீண்டும் இரசிகர்களின் மனதில் இடம்[...] தால்தான் இளமை இருக்கும்பே[...] அதனைக் காட்டி சம்பாதிக்க[...] ஆகவே செல்வமணியுடன் ஒட்டு இ[...] என்று காண்பித்துக் கொள்வது ந[...] என்று முடிவுக்கு வந்தாராம் ரே[...]

செல்வமணிக்கும் பிரமாண்ட[...] படம் தயாரிக்க பணம் தேவை. ரே[...] சம்பாதித்தால் கடன் வாங்க[...] ஆகவே காதல் முறிவு நாடகம் ஆட[...] தயாராக இருந்தாராம்.

முறிவு என்று முழுக்கவும் வேண்டாம். நெருக்கம் என்றும் [...] வேண்டாம். இரசிகர்களின் மன[...] எப்படியிருக்கிறது என்று பார்த்து மேற்கொண்டு தீர்மானிக்கலாம் [...] கூறியுள்ளாராம் ரோஜா.

### யார் வந்தால் என்ன?

"எத்தனை புதுமுகங்கள் வளப்பமாக வந்தாலும் இப் போதைக்கு என் காட்டில்தான் மழை" என்கிறார் சிம்ரான்.

அதுவும் உண்மைதான். படப்பிடிப்புக்களுக்கு ஒழுங்காக வருவதில்லை. அடிக்கடி 'கட்' அடிக்கிறார் என்று பல புகார்கள் இருந்தும் சிம்ரான் கையில் பல படங்கள் இருக்கின்றன.

### ரஜினி வேல்

'மருதநாயகம்' படப்பெயரை கமலுக்கு எழுதிக்கொடுத்த ஓவியர்தான் ரஜினிக்கு 'படையப்பா'வையும் எழுதிக் கொடுத்திருக்கிறார். பதினொரு ரகத்தில் அவர் எழுதிக் காட்ட, அதில் ஒன்றை தேர்வு செய்தாராம் ரஜினி.

அத்தோடு ரஜினியே ஒரு யோசனையும் கூறினாராம்.

'படையப்பா'வில் நான்காவது எழுத்தான 'ப்'ப்பில் புள்ளிக்குப் பதிலாக வேல் ஒன்றை போடச் சொல்லி, தன் கைப்படவே பென்சிலால் 'வேல்' கீறிக் கொடுத்தாராம் ரஜினி. ஓவியரே சிலிர்த்துப் போனாராம்.

www.padippakam.com

ழுவினர் மூலமாக கோடம்பாக்கம் சினிமா வட்டாரத்தில் தீவிரமாக ரவிவிட்டது.

இவ்விடயத்தை அறிந்த பத்திரிகையாளர் ஒருவர் அஜித்திடமே நேரடியாக ட்க, "அது எங்கள் சொந்த விஷயம். நடிகன், நடிகை என்ற முறையில் த்தில் எங்கள் நடிப்பை விமர்சியுங்கள். தனிப்பட்ட வாழ்க்கையில் லையை நுழைக்காதீர்கள்" என்றிருக்கிறார்.

பத்திரிகையாளரும் விடவில்லை; "அறைக்குள் நீங்கள் என்ன ண்ணினாலும் எங்களுக்கு என்ன? பட்டப்பகலில் பலர் முன்னிலையில் டிப்பிடித்து முத்தம் கொடுத்தீர்களே அதற்கு என்ன அர்த்தம்? காதல் றிந்துவிட்டது என்று சொன்னதெல்லாம் நாடகம்தானா? என்று ட்டிருக்கிறார்.

அஜித் ரொம்பவும் சூடாகி: "வயசிருக்கிறது, வாய்ப்புக் கிடைக்கிறது. ளையாடுகிறோம். உங்களுக்கு இப்படி ஒரு சான்ஸ் கிடைத்தால் ட்டுவிடுவீர்களாக்கும்?" என்று எதிர்க் கேள்வி தொடுத்தாராம்.

## திடீர் அலங்காரம்

சில ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ்த்திரையுலகை கட்டியாண்ட ரண்டெழுத்து நடிகை அவர்.

அவருக்கு ஒரு விதமான மனநோய். தன் படுக்கை அறையை திடீரென்று நம் விதமாக அலங்கரிப்பார். புது மணப்பெண்போல அலங்காரம் ய்துகொண்டு கட்டிலில் புரளுவார்.

சில சமயங்களில் தனக்கு பிடித்த நடிகர்கள் சிலரை அழைத்து ன்றிரவை அவர்களுடன் கழிப்பார். சில நடிகர்கள் அவரின் வடிக்கைகளால் மிரண்டுபோய் பின்னர் அவர் அழைத்தால் தலைதெறிக்க ஆரம்பித்தனர்.

அவளுக்குள்ள மனநோய் வித்தியாசமானது. பல ஆண்களால் ஏமாற்றப் டதால் படிப்படியாக வளர்ந்தது. அவருக்கு மருத்துவம் செய்த நல மருத்துவர் ஒருவரையே ஒருநாள் தன் படுக்கை அறைக்கு ழக்க, தப்பினால்போதும் என்று ஓடிவந்துவிட்டார் க்டர்.

'ஒரு உதவி இயக்குநர் தவிர வேறுயாருமே க்கு ஏற்றவிதத்தில் நடக்கவில்லை. சந்தோ தரவில்லை' என்று மனநல டாக்டரி கூறியிருக்கிறார் அந்த நடிகை. சினிமா உலக வக்கிரங் இவ்வாறான மன ாய்களுக்கும் மளிக் றவ.





"ஆசை நதியில் நீந்த வராமல் அல்லிப் பூவில் மணம் பெறாமல்"

சிம்ரான்

## பிரபுதேவாவின் ப்ரியன்

பிரபு தேவாவுக்கு இடையில் தமிழில் சிறு ஓய்வு. 'ஹலோ', 'மழை வரப்போகுது' இரண்டு படங்களும் கைவிடப்பட்ட நிலையில், தெலுங்கில் 'லவ் 99' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இப்போது தமிழில் ஒருபடம் கிடைத்திருக்கிறது. 'ப்ரியன்' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதாநாயகி புதுமுகம். மும்பாய் இறக்குமதி. பெயர்: வர்ஷா.

இயக்கம் கே.சுபாஷ். 'உத்தம புருஷன்', 'கலியுகம்', 'சத்திரியன்', 'அபிமன்யு' போன்ற பல படங்களை இயக்கியவர் சுபாஷ். இசை: தேவா. தயாரிப்பு: ஆர்.சந்துரு. அவர் தற்போது ரம்பா முரளி நடிக்கும் 'தேசியகீதம்' படத்தினை தயாரித்து வருகிறார்.

## சத்யராஜ்-பூனம்

மும்பை மொடல் அழகியுடன் டூயட் பாடி ஆடப்போகிறார் சத்யராஜ். விளம்பரப் படங்களில் அசத்தல் போஸ் பல கொடுத்த சிங்காரி பூனம். அந்தச் சிங்காரியின் படத்தைக் காட்டி, உங்கள் ஜோடியாக்கலாமா? என்று கேட்டார் இயக்குநர் குருதனபால். ஓ.கே. சொன்னார் சத்யராஜ்.

இளையராஜா இசையில் இரு பாடல்கள் பதிவாகியுள்ளன. கவுண்டமணி, விஜயகுமார், ராஜன் பி.தேவ், சித்தாரா உட்பட பலர் நடிக்கின்றனர்.

## காதோடு சொல்லுகிறோம்

சுவிற்ஸர்லாந்துக்கு படப்பிடிப்புக்காக சென்றார் காதல் கோட்டை அமைத்த 'தேவ' நடிகை. அங்கு அகோரமான குளிர் தாங்கமுடியவில்லை. உடனே தாய்க்குலம் மாற்று ஏற்பாடாக 'அது' வரவழைத்து கொடுத்தாராம். உள்ளே போனதும் குளிர் பறந்துபோனது. தெம்பாக நடித்தாராம் நடிகை.

சிம்ம நடிகையின் சுந்தரமான காதலர் நடிகையை பாடாய் படுத்துகிறார். பாவம் நடிகை, தூக்க கலக்கத்துடன் படப்பிடிப்பில் கலந்துகொண்டு தூங்கி வழிகிறார். நடிகைதான் காதலரை பாடாய் படுத்துகிறார் என்று கூறுகிறது இன்னொரு வட்டாரம். கரும்பு தின்ன கூலி வேண்டுமோ? சுந்தரமான காதலருக்கு சிம்ம நடிகைதான் கரும்பு.

ஆக்ஷன்கிங் திலக நடிகருடன் நடிக்கும் படத்தின் படப்பிடிப்புகள் நடந்துவருகின்றன. ஜோடியாக நடிப்பவர் சூப்பர் ஸ்டாரின் கடாச்சம் பெற்ற நடிகை. ஆக்ஷன்கிங் தன் வழக்கமான லீலைகளை அரங்கேற்ற நடிகை சூடாகிவிட்டாராம். அதன்பின்னர் நடிகர் கொஞ்சம் அடக்கியே வாசிக்கிறாராம்.

ஐஸ் நடிகையை ஒப்பந்தம் செய்யுமாறு தனது பினாமியான தயாரிப்பாளரை அனுப்பினாராம் தமிழகத்தின் பிரபல தொழிலதிபர் ஒருவர். அந்த தொழிலதிபருடன் நட்பாக இருப்பதற்கும் சேர்த்தே பேரம் பேசப்பட்டதாம். 'ஐஸ்' கூறிய தொகையைக் கேட்டு தயாரிப்பாளர் மட்டுமல்ல, குறிப்பிட்ட தொழிலதிபரே மயக்கம் போட்டு விழாத குறையாம்.

மூன்றெழுத்து 'பூ' நடிகையின் காதல் இயக்குநர் மறுபடி மூன்றெழுத்து ரம்பத்துடன் ராசியாகிவிட்டார். "அவர் இருந்தால்தான் என் படம் ஓடுகிறது. நான் என்ன செய்வது?" என்று பூ நடிகையிடம் கேட்டாராம் இயக்குநர். வருமானம் கருதி பூ நடிகையும் வாயை மூடிக்கொண்டிருக்கிறார்.

சூப்பரின் படத்தில் நடிக்க ஆசைப்பட்ட 'சிம்ம' நடிகையும், மீன் நடிகையும் கண்ணை கசக்கிக்கொண்டிருக்கிறார்கள். 'ஒரே ஒரு முறை அவரை நேரில் சந்திக்க மட்டும் வாய்ப்புக் கிடைத்திருந்தால், ஜோடி நானாகத்தான் இருந்திருக்கும் 'நோ டவுட்' என்று அடித்துக் கூறுகிறார் சிம்ம நடிகை. அந்தளவு தன்னம்பிக்கையாக்கும்.

## படையப்பாவும்-ரகுமானும்

'படையப்பா' படத்திற்கு இசையமைக்க ஏ.ஆர்.ரகுமான் வீட்டிற்கு ரஜினி தேடிப்போனார். அங்கு பல மணிநேரம் காக்கவைக்கப்பட்டார். பந்தா காட்டுகிறார் ரகுமான் என்றெல்லாம் சிண்டுமுடியும் செய்திகள் வெளியாகின. அதெல்லாம் கலப்படமில்லாத புரளிகள்.

ரஜினிதான் ரகுமான் வீட்டிற்கு தானாகச் சென்றார். அங்கு ரகுமானுக்கு கையும் ஓட வில்லை. காலும் ஓடவில்லை. திக்குமுக்காடிப் போனார். ராஜ உபசாரம் ரஜினிக்கு.

ஏற்கனவே ரஜினியின் 'முத்து' படத்திற்கு இசையமைத்தவர் ரகுமான். இப்போது 'படையப்பா' கிடைத்த சந்தோசத்தில் கவிஞர் வைரமுத்துவுக்கு தங்கப் பேனா பரிசளித்துள்ளாராம்.

'படையப்பாவின் பாடல்களை எழுத அப்பேனாவால்தான் என்றும் வைர வேண்டும்' முத்துவுக்கு அன்புக் கட்டளை போட்டுள்ளாராம் ரகுமான்.

## அவதாரம் தொடரும்

'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் கார்த்திக்கின் நண்பராக வந்து பகபகவென்று சிரிக்கவைத்தவர் ரமேஷ் கண்ணா.

இப்பக்கத்தில் அனுஷாவுடன் ஜொலிக் கொண்டிருப்பதும் அவர்தான்.

இப்போது ரமேஷ் கண்ணாவுக்கு பதவி உயர்வு. இயக்குநராகி, அஜித்குமார், தேவயாணி, ஹீரா ஆகியோரை இயக்கிக் கொண்டிருக்கிறார். படத்தின் பெயர்: தொடரும். இப்படம் வெற்றி பெற்றால் ரமேஷ் கண்ணாவின் இயக்குநர் அவதாரமும் தொடரும்.



விஜயகாந்த்-குஷ்பு
படம்: வீரம் வெளைஞ்ச மண்ணு



ராதிகா
படம்: செந்தூரம்

## முகப்பில் கார்த்திக்-ரோஜா சங்கீதா

ஸ்ரீ தேவியின் கணவர் போனிகபூர் இயக்கும் படம் ஒன்றில் நடிக்கிறார் லதா மங்கேஷ்கர். இருபத்தி ஏழு வருடங்களுக்குப் பின்னர் அவர் நடிக்கும் இரண்டாவது படம் இது.

## நடிகைகள் வெட்டுவது

சினிமா நடிகைகள் சிலருக்கு பிடித்த சாப்பாட்டு அயிட்டங்களின் டியல். நாட்டு நலன் கருதி படித்துப் நங்கள்.

ரம்பாவுக்கு ரசம் பிடிக்குமாம். அதுவும் காளி ரசம் என்றால் உள்ளங்கையில் ஊற்றி 'ரென்று ஒரே உறிஞ்.

மீனாவுக்குப் பிடித்தது வாழைக்காய் வறு . எண்ணெய் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது பதால் அம்மா கண்ணில் காட்டுவதில்லை ம் வறுவலை.

சிம்ரானுக்கு இட்லி என்றால் உயிர். தொட் கொள்ள மிளகாய் பொடி தேவை.

ப்ரீதா விஜயகுமாருக்கு தயிர்ச்சாதம் மிகவும் க்கும். உடம்பில் கொழுப்பு சேராமல் க்க மதியம் தயிர்ச்சாதம் மட்டும் உள்ளே ளுவாராம்.

## அப்பா–மகன்

'வீரம் வெளஞ்ச மண்ணு' படத்தில் குஷ்பு சற்று தாராளமாகவே விஜயகாந்த் துடன் நடிக்கிறாராம். இறுக்கி அணைச் சுக்கொள்ளும் காட்சிகளில் விஜயகாந்தே 'ம்...பார்த்து...நம்ம உடம்பு தாங்காதம்மா' என்று கிண்டலடித்தாராம்.

விஜயகாந்த்துக்கு தாயாகவும், ஜோடியாகவும் நடிக்கிறார் குஷ்பு. அதாவது அப்பா, மகன் என்று இரு பாத்திரங்களில் தோன்றுகிறார் விஜய்காந்த்.

படத்தை இயக்குவது கஸ்தூரிராஜா. அதென்னவோ குஷ்பு என்றால் கஸ்தூரி ராஜாவுக்கு அலாதிப்பிரியம். தொடர்ந்து குஷ்புவுக்கு பல படங்களில் வாய்ப்புக் கொடுத்து வருகிறார்.

## புதுத் தொழில்

சென்னையில் பட வாய்ப்புக்களுக்கு தேடி அலைந்தபோது பல ஹொட்டல்களில் அறை எடுத்து தங்கியவர் தேவயாணி.

இப்போது ஹொட்டல் ஒன்றை ஐந்து நட்சத்திர வசதிகளுடன் கட்டத் தீர்மானித்துள்ளார்.

நடிகர், நடிகைகள் தன் ஹொட்டலுக்குத் தான் வருவார்கள் என்ற நம்பிக்கையாகவும் இருக்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com

## ஒரு மீசையின் கதை

எனக்கும் பல கனவு-சிறுவயதில்
பாரதி மீசை- கட்டபொம்மன் மீசை
படங்களில் வரும் மன்னவர் மீசை போல்
நானும் வைக்க வேண்டுமென...!
***
அரும்பு மீசை வளர்ந்தபோது
அன்புடன் தடவி அழகு பார்ப்பேன்!
இன்னும் வளர்ந்த பின்- முறுக்கி
நன்றாய் முறுக்கி
நெஞ்சு நிமிர்த்தி நடக்க வேண்டுமென
நினைவு விதைப்பேன்!
***
தொண்ணூறுகளின் இறுதியில்-
மீசை மீசையாக வளர்ந்தபின்-
முறுக்கிவிட எண்ணும் போதெல்லாம்
காக்கியுடையும் கையாலாகா எங்கள்
தமிழ்ச் சூழலும் கண்முன்னே வர
பாரதி மீசை- பாதி மீசையாகி
பாரதிராஜா மீசையாகும்!
***
இன்று அம்மணியின் முழக்கமும்
எம்மவரின் அடங்குதலும்
செம்மணியின் அவலமும் கண்டபின்
மீசை இருந்த இடத்தின்
தடயமே காணவில்லை!

இணுவை புலிகேசி, கொழும்பு-06.

## செம்மணி விவகாரம்

படையினரிடம்
அனுமதி பெறும்படி
அரசு அனுமதிக்கும்!
•
நீதவானிடம்
அனுமதி பெறும்படி
படை அனுமதிக்கும்!
•
மண்வெட்டிகளிடம்
அனுமதி பெறும்படி
நீதவான் அனுமதிப்பார்!
•
செம்மணி மண்ணிடம்
சம்மதம் பெறும்படி
மண்வெட்டிகள் அனுமதிக்கும்!
•
அதற்குள்-
செம்மணியையே
புதைத்துவிடுவார்கள்!
•
புதைக்காததைத் தோண்டும்போது
எதிர்பார்ப்பு உண்டாகும்!
புதைத்ததைத் தோண்டினால்
சலிப்புதான் ஏற்படுமென்று
சங்கடப்படுகிறார்கள்!
•
இதுவரை வெட்டிய
கிணறுகளிலிருந்து
பூதங்களே கிளம்பின...!
•
நிஜமாகவே
பூதங்கள் கிளம்புமென்று
தெரிந்துவிட்டது!
இவர்கள்-
செம்மணியைத் தோண்ட
சம்மதிப்பார்களா??

ஹரன்ஷங்கர்-பதுளை.

தேன் கிண்ணம்



## கைப்பற்றும் யுத்தம்

வியட்நாமின் முக்கிய நகரம் ஒன்றில் நடந்த சண்டையின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. நகரைச் சின்னாபின்னமாக்கிய அமெரிக்கத் துருப்புக்கள், முன்னேற முனைகின்றன. மறுபுறம் வியட்நாம் போராளிகள் பதுங்கி இருக்கின்றனர். சில நகர்களைப் பிடித்தாலும்கூட இறுதியில் அமெரிக்கத் துருப்புக்கள் வியட்நாம் படைகளிடம் மண்டியிட்டன. அந்த மண்ணைவிட்டு வெளியேறின.

நகரங்களையும் மக்களையும் அழித்த அமெரிக்கத் துருப்புக்கள் இறுதியில் தாமும் அழிவுக்கு உள்ளாகி வெளியேறின.

## பாலை வனத்து ரோஜா

கொதிக்கும்
அரேபியப் பாலை வனத்தில்
நீ கருகி விழுந்த
ரோஜா!
•••
துணையிழந்த பறவையாய்
வெகு தூரத்தில் நின்று நீ
ஏகாந்தமாய் அழுவது
தெரியும் எனக்கு!
•••
வறுமையின்
முட்கரங்கள் உன்
வாழ்க்கைக் காவியத்தை
கிழித்து வீசியதில்
வந்த வினை இது!
•••
நொடிக்கு
நூறு முறை
அந்நிய மண்ணில்
வதை பட்டுச் சாகும்
உன் பொல்லாத விதியை
யாரிடம் சொல்லி அழ?
•••
நிர்வாண விளம்பரத்தில்
சேலை வாங்க விரும்பாத
கலிகாலச் சீதையடி நீ!
•••
நிராகரிக்கப்பட்ட
உன் கனவுகளை
எண்ணி-நீ
கலங்காதே கண்மணி!
•••
நம்பிக்கையோடு இரு!
உன் தெருவிலும்
நிச்சயம் ஒரு நாள்
வசந்தம் வரும்!

திலோதேசன்-தோப்பூர் கே.எம்.மார்க்.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஜி. பாலமுருகன்,
வயது: 18
முகவரி: 42/5, சிதம்பரபுரம், வவுனியா.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: வி. சஷாசினி,
வயது: 19
முகவரி: அம்பலமான, கலஹா.
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(11.10.1998 தொடக்கம் 17.10.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

சிம்மம் — செவ்வாய், ராகு.
கன்னி — சூரியன், சுக்கிரன்.
மீனம் — சனி. (வக்கிரம்)
துலாம் — புதன்.
கும்பம் — குரு, கேது.
சந்திரன்- மிதுனம், கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், இனசன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன நிம்மதி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனப்பயம். | மாலை | 6 மணி |
| புதன்- வீண் செலவு, கடன்படல். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், நிம்மதி. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் | 11 மணி |
| சனி- தொழில் மந்தம், பொருள் இழப்பு. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் | 11 மணி |
| செவ்வாய்-பெரியோர் நட்பு, முன்னேற்றம். | மு.ப. | 10 மணி |
| புதன்- மனக்கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த எண்ணம். | மாலை | 6 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக்குழப்பம். | மு.ப. | 9 மணி |
| சனி- காரியானுகூலம், பணவரவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குழப்பம். | காலை | 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, பணவரவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 3 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், கௌரவக்குறைவு. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், தெய்வானுகூலம். | பகல் | 12 மணி |
| வெள்ளி- தெய்வ தரிசனம், மன நிம்மதி. | பி.ப. | 3 மணி |
| சனி- இனசன வருகை, ஆடம்பரச் செலவு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | காலை | 8 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| புதன்- வீண் செலவு, மனச் சோர்வு. | மாலை | 4 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், சுபசெய்தி. | கலை | 6 மணி |
| வெள்ளி- மறைமுக எதிர்ப்பு, இனசன விரோதம். | கலை | 7 மணி |
| சனி- உயர்ந்த எண்ணம், கௌரவம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உறவினர் வருகை, மகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| திங்கள்- பழைய நினைவுகள், நிம்மதியின்மை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- தேகசுகம் பாதிப்பு, பணச் செலவு. | பகல் | 11 மணி |
| புதன்- வீண் முயற்சி, பண விரயம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- காரியக்கேடு, மனக்கிலேசம். | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- விருந்துபசாரம், சோர்வு. | பி.ப. | 2 மணி |
| சனி- அந்நியர் உறவு, மன நிம்மதி. | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உறவு, பணச் செலவு. | பகல் | 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக்குழப்பம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், பொருள் விரயம். | பி.ப. | 2 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், குடும்பசுகம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பகல் | 12 மணி |
| சனி- அந்நியர் உதவி, உயர்ந்த நட்பு. | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் பேறு. | காலை | 6 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், வருவாய் குறைவு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- முன்னேற்றம், பண வரவு. | பி.ப. | 3 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- தெய்வீக சிந்தனை, உயர்ந்த நோக்கம். | பகல் | 12 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக்கிலேசம். | பி.ப. | 3 மணி |
| சனி- பயனற்ற செயல், கௌரவக் கேடு. | மாலை | 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பொருள் வரவு. | காலை | 7 மணி |
| திங்கள்- மனக்குழப்பம், காரியத்தடை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- முன்னேற்றம், மனக்கவலை நீங்கும். | பி.ப. | 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த எண்ணம். | பகல் | 11 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், மன நிம்மதி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | மு.ப. | 10 மணி |
| சனி- தொழில் மந்தம், உறவினர் கலகம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- புதிய சிந்தனை, உற்சாகம். | பகல் | 12 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, கௌரவம். | பி.ப. | 3 மணி |
| செவ்வாய்- தெய்வானுகூலம், புதியமுயற்சி. | மு.ப. | 10 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பகல் | 11 மணி |
| வியாழன்- தெய்வ தரிசனம், மன நிம்மதி. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், தேகநிலை பாதிப்பு. | பி.ப. | 2 மணி |
| சனி- அந்நியர் நட்பு, உயர்ந்த நோக்கம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன நிம்மதி, இல்லற சுகம். | காலை | 8 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, அதிக உழைப்பு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- உறவினர் வருகை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| புதன்- உறவினர் துயர், மனச் சஞ்சலம். | பி.ப. | 1 மணி |
| வியாழன்- நண்பர்கள் உதவி, உயர்ந்த எண்ணம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், நண்பர்கள் பாராட்டு. | மாலை | 6 மணி |
| சனி- விருந்தோம்பல், பணச் செலவு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன சேர்க்கை, பணச்செலவு. | காலை | 6 மணி |
| திங்கள்- கடன்படல், காரியக்கேடு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன நிம்மதி. | பி.ப. | 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, கடன்படல். | பி.ப. | 1 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், சஞ்சலம் நீங்குதல். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக்கிலேசம். | மாலை | 6 மணி |
| சனி- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசனச் சேர்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| திங்கள்- தூர இடப் பயணம், புதிய நட்பு. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- உடல் உபாதை, மனச் சோர்வு. | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண் செலவு, காரியத் தடை. | பகல் | 12 மணி |
| வியாழன்- தெய்வ தரிசனம், மன நிம்மதி. | பகல் | 11 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப. | 3 மணி |
| சனி- பயனற்ற செயல், செலவு மிகுதி. | மு.ப. | 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## நீளமான கூந்தல்



"அழகான நீளமான கூந்தலை வளர்த்திருக்கும் பெண்கள், தங்கள் கூந்தலை வெட்டி புதிய ஹெயார் ஸ்டைல் உருவாக்க நினைப்பார்கள். அவ்வாறு ஆசைப்படும் சிலர் முன்பின் யோசிக்காமல் தங்கள் கூந்தலை வெட்டி அது முகத்திற்குப் பொருத்தமில்லாமல் ஆகிவிட்டால் வருத்தப்படுவார்கள்.

கூந்தலை வெட்டி ஸ்டைல் செய்துகொள்ள விரும்பும் பெண்கள் முதலில் தங்கள் முகத்திற்குப் பொருத்தமான 'ஸ்டைல்' எது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

அழகு நிலையம் சென்று அது பற்றி ஆலோசனை பெறலாம். தோழிகளிடமும் இதுபற்றிக் கலந்து பேசுங்கள்.

முன்பின் அறிமுகமில்லாத அழகுநிலையங்களில் சென்று முடி வெட்டுவதைவிட தங்கள் தோழிகள் முடி வெட்டும் இடத்திற்குச் சென்று, ஆலோசனை செய்து வெட்டுவது நல்லது.

முதல் தடவை முடி வெட்டச் செல்லும்போது முடிவெட்டுகிறவரிடம் நீங்கள் வழக்கமாக உடுத்தும் உடைகளைப் பற்றிச் சொல்லி விடுங்கள். அந்த உடையிலே செல்வது நல்லது. அதற்குப் பொருத்தமாக முடிவெட்ட வாய்ப்பு ஏற்படும்.

## உதடும் சாயமும்



சங்க காலத்தில் லிப்ஸ்டிக் கண்டுபிடிக்கப்படா விட்டாலும், செவ்வரத்தை, மருதோன்றி, வெற்றிலை போன்றவற்றைப் பயன்படுத்தி உதட்டுச்சாயம் சேர்த்தனர். சிலப்பதிகார 'மாதவி' இப்படிச் சாயம் பூசிக் கொண்டதாக இலக்கியச் சான்று உள்ளது.

உதட்டு வெடிப்புக்களுக்கு நெய்யைத் தடவுவதுடன், இளஞ்சூடான நெய்யில் குங்குமப்பூ சேர்த்து தடவுவதால், வெடிப்புக் குறைந்து சிவப்பு நிறத்தைக் கொடுக்கும்.

கரட்சாறு எடுத்துத் தினமும் தவுவதால் உதடு நிறம் பெறும்.

தொடர்ந்து பல ஆண்டுகள் லிப்ஸ்டிக் பயன்படுத்துபவர்களுக்குப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

உதடுகள் சிவப்பு நிறமாக இருக்க வேண்டும் என்றால் இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு 16 மில்லி கிராம் இருக்க வேண்டும். ஆனால் சராசரியாக 11 மில்லிகிராம் அளவே இருக்கிறது. அதனால் உதடுகளுக்கு சிவப்பு நிறமில்லை. இந்தக் குறையைப் போக்க நெய் தடவிக் கொள்ளவோ அல்லது கொத்தமல்லி போன்ற கீரை வகைகளை உணவில் சேர்த்துக்கொள்ளவோ வேண்டும்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்.
செல்வி தர்ஷனி மாரியப்பா,
97/21, கமத்தவத்த வீதி, வெலிக்கட, இராஜகிரிய.

## இது ஆண்களுக்கு



★ ஆண்களில் சிலர், தங்கள் தலை முடிக்கு வஸ்லைன் போட்டுத் தலைவாரிக் கொள்வார்கள். இது கூடாது. தலையில் வஸ்லைன் தடவுவதால், தூசி ஒட்டிக்கொண்டு, அழுக்குப் படிந்துவிடும். சுத்தமான தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தவிர வேறு எதையும் பயன்படுத்தாதீர்கள்.

★ ஆண்கள் ஷேவ் செய்து முடித்ததும் டெட்டோல் அல்லது ஆப்டர் ஷேவ் லோஷன் போட்டுத் தேய்த்துவிட வேண்டும். அப்போதுதான் கண்ணுக்குத் தெரியாத கீறல்களால் முகத்தோல் கெடாமல் இருக்கும்.

★ ஆண்களின் புருவங்கள் அடர்த்தியாக இருக்க வேண்டும். அதற்கு தினமும் விளக்கெண்ணெய் (ஆமணக்கு எண்ணெய்) தடவி வர வேண்டும்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 56

புவனா

உயர்மட்ட விருந்துகளில் கலந்து கொள்ளுதல், கைகுலுக்கி புன்னகைத்தல், குட்டிப் பிரசங்கம் செய்தல் போன்றவை டயானாவுக்கு சலிப்பாக இருந்தன.

சம்பிரதாயத்துக்காக நடிப்பது போன்ற வெறுப்பூட்டும் காரியங்களாக அவை இருந்தன.

அவ்வாறான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை படிப்படியாக குறைத்துக் கொண்டார் டயானா.

அதனால் சிலகாலம் டயானா பற்றிய செய்திகள் வெளியாகவில்லை.

'டயானா பொது வாழ்க்கையில் இருந்து ஒதுங்கப்போகிறார்.'

'அரச குடும்பத்தினரின் மிரட்டலுக்கு பயந்து டயானா கூண்டுக்கிளியாகிவிட்டார்.'

'இனிமேல் டயானா வெளியே தலைகாட்ட மாட்டார். நிரந்தரமாக விவாகரத்து பெற்றுக் கொண்டு தனியான தீவு ஒன்றுக்கு சென்று வாழத்திட்டமிட்டிருக்கிறார்.'

மேற்படியான பல செய்திகள் ஊகங்களாக வெளிவந்தன.

எப்படியாவது டயானாவைப் பற்றிய செய்திகளை வெளியிட வேண்டும் என்பதுதான் பத்திரிகைகளின் அத்தகைய ஊகங்களுக்கு காரணம்.

### முற்றுப்புள்ளி

அத்தனை ஊகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதைப்போல ஸிம்பாப்வேக்கு சென்றார் டயானா.

ஸிம்பாப்வேயில் பட்டினியால் வாடிய கறுப்பினச் சிறுவர்களுக்கு உதவுவதற்காகவே அங்கு சென்றார்.

ஸிம்பாப்வேக்கு செல்லும் விடயத்தை பிரபலப்படுத்த டயானா விரும்பவில்லை.



ரிகியுடன் வில்லியம்ஸ்



ஸிம்பாப்வேயில் ஆபிரிக்கச் சிறுவர்களுக்கு டயானா உணவு பரிமாறும் காட்சிகள் உடனடியாக பத்திரிகைகளில் வெளியாகின.

அவற்றைப் பார்த்த டயானா முகம் சுளித்தார். "ஆபிரிக்கர்கள் உணவுக்காக கையேந்துகிறார்கள். என்ற தவறான எண்ணத்தை இத்தகைய படங்கள் உருவாக்கப் போகின்றன. இது விரும்பத்தகாத செயலாகும். ஆபிரிக்க மக்களை அவமதிப்பது போன்றதாகும்" என்று கூறி வேதனைப் பட்டார்.

அதிலும் வேடிக்கை என்னவென்றால் டயானா அழைக்காமல், தாமகவே சென்று புகைப்படம் எடுத்து வெளியிட்ட பத்திரிகைகள் சில 'டயானா விளம்பரம் கருதித்தான் ஸிம்பாப்வேக்கு சென்றார்' என்று விமர்சனம் பண்ணியிருந்தன.

## இன்னுமொரு காதலி

ஆனால் டயானா எங்கு சென்றாலும் பத்திரிகையாளர்களின் கண்ணில் இருந்து அவர் தப்ப முடியாது. மின்னும் கமரா வெளிச்சங்கள் அவரை நனைக்காமல் விடுவதில்லை.

### செவிலித்தாய்

டயானாவை கோபத்தின் உச்சிக்குக் கொண்டு செல்லும் ஒரு காரியத்தை செய்தார் இளவரசர் சாள்ஸ்.

இளவரசர் சாள்ஸுடன் இரு பிள்ளைகளும் தங்கியிருக்கும் காலத்தில் அவர்களுக்கு பணிபுரிய ஒரு அழகியை ஏற்பாடு செய்திருந்தனர்.

சாள்ஸ்தான் அவளை நியமித்திருந்தார்.

அப்பெண் சாதாரணப் பெண்மணி என்றால் டயானா கோபப்பட்டிருக்க மாட்டார். டயானாவின் வயதுதான் அந்தப் பெண்ணுக்கும். உயர் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது பெயர், அலெக்ஸாண்ட்றா லெகி போர்க். எனினும் 'ரிகி' என்றே அழைக்கப்பட்டாள்.

"இளவரசர் வில்லியம்ஸுக்கும், ஹரிக்கும் செவிலித்தாய் ஒருவர் புதிதாக வந்துவிட்டார்.

இருபிள்ளைகளையும் அவர் அன்போடு கவனிக்கிறார். அதனால் பிள்ளைகளும் என்றுமில்லாத மகிழ்ச்சியோடு காணப்படுகிறார்கள்." என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டது.

அச் செய்தி வந்த பத்திரிகையை தூக்கி எறிந்தார் டயானா. அரச குடும்பமோ, அல்லது சாள்ஸின் நண்பர்களோ கொடுத்த செய்தியாகத்தான் இருக்கும் என்பதில் டயானாவுக்குச் சந்தேகம் இல்லை.

'டயானா ஒரு நல்ல தாயாக நடந்து கொள்ளவில்லை' என்று சொல்லாமல் சொல்லுவதற் காகத்தான் 'ரிகி' புராணம் பாடினார்கள் சாள்ஸின் நண்பர்கள்.

ரிகியின் மடியில் ஹரி இருந்து விளையாடும் காட்சியும் பத்திரிகைகளில் வெளியானது.

சாள்ஸின் நண்பர்களுடனும் ரிகி நெருங்கிப் பழகினாள்.

இக்காலகட்டத்தில் மேலும் சில அந்தரங்கத் தகவல்கள் டயானாவுக்கு எட்டின.

சாள்ஸின் அரண்மனையில் வேலை பார்த்த பணியாட்களில் ஒருவர் டயானாவின் மாளிகையில் பணியாற்றிய பணியாளருக்கு நண்பன்.

அதனால் சாள்ஸுக்கும், ரிகிக்கும் இடையே உள்ள உறவு பற்றிய தகவல்கள் டயானாவுக்கு கிட்டின.

சாள்ஸின் மடியில் ஒருநாள் ரிகி அமர்ந்திருக்க, சாள்ஸ் ரிகியின் நெஞ்சில் முகம் புதைத்து தன்னை மறந்திருந்தார்.

ஒருமுறை சாள்ஸின் அறையில் ரிகி சாள்ஸ்சை பின்புறமாக கட்டியணைத்து, அவர் காதுக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

பணியாளர்கள் முன்பாகவே சாள்ஸுடன் குழைந்தும், உரசியும் கூச்சநாச்சமில்லாமல் நடந்து கொள்வார் ரிகி.

பணியாளர்கள் சிலர் இந்தக் களியாட்டங்களை இருவரும் அறியாவண்ணம் பல நாட்கள் கண்டுகளித்திருக்கின்றனர்.

சன்னல்கள் திறந்திருப்பதையும் மறந்து கட்டிலில் சாள்ஸும், ரிகியும் காதல் லீலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

மாறி மாறி முத்தமிட்டுக் கொண்டிருந்த இருவரில் சாள்ஸ்தான் அவசரக்காரராக இருந்தார். அவரது கைகளை சில சமயம் அனுமதிப்பதும், சில சமயம் தடுத்து நிறுத்தி



அவரது தவிப்பை இரசிப்பதுமாக வித்தை காட்டினாள் ரிகி.

அவளை தன்மீது இழுத்துப் போட்டு இறுகத் தழுவிக்கொண்டார் சாள்ஸ்.

ரிகியின் சிணுங்கலும், முணுமுணுப்பும் தாபமான குரலும் சாள்ஸை மெய்மறக்கச் செய்தன.

ஒரு பூப்பந்துபோல சாள்ஸ்மீது புரண்ட ரிகி, சாள்ஸின் மேலிருந்தபடியே உதட்டை கௌவிக்கொண்டாள்.

இந்த லீலைகளைப் பற்றி சாள்ஸ்சின் பணியாளர்கள் மூலம் விலாவாரியாக வெளியே கூறப்பட்டன.

சாள்ஸுக்கு ரிகியின் அணுகு முறைகள் புதுமையாக இருந்தன. கமீலாவிடமும், டயானாவிடமும், மற்றும் சில பெண் நண்பிகளிடமும் கண்ட அனுபவத்தோடு ரிகியுடனான அனுபவத்தை ஒப்பிட்டுப்பார்த்தார் சாள்ஸ்.

ரிகிக்கு சாள்ஸ் அதிக சுதந்திரம் கொடுத்தார். அல்லது ரிகியே அதனை எடுத்துக் கொண்டாள் என்றும் கூறலாம்.

"இளவரசர்கள் வில்லியம்சும் ஹரியும் என் குழந்தைகள். ஆம் இனிமேல் என் குழந்தைகள்!" என்று ரிகி ஒருமுறை கூறினாள்.

அந்தக் கூற்று டயானாவிடம் மட்டுமல்ல கமீலாவிடமும் புயலைக் கிளப்பியது.

அதன் விளைவுகளை அடுத்தவாரம் பார்க்கலாம்.

(அடுத்த வாரமும் வரும்)


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EN

பெயர்:........................
முகவரி:..............................
..............................
தொழில்:..........................
கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-10-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி
இவர்தான் ☞ பி. கிருஷ்ணவேணி, என்பீல்ட் எஸ்டேட், டிக்கோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்

இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு - அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 22

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.






www.padippakam.com
படிப்பகம்


www.padippakam.com





வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்
- அதில்
மானுடர் வேற்றுமையில்லை!
எண்ணங்கள் செய்கை யெல்லாம்
- இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



## தன்னை அறிக!

ஒரு நாள் மாலை ஒரு கணவனும் மனைவியும் தமது குழந்தையைக் கூட்டிக் கொண்டு கடற்கரைக்குச் சென்றனர்.

ஒன்றரை வயதுக் குழந்தை, கடற் கரை மணலில் கால் புதைய சாய்ந்து சாய்ந்து நடந்து, பெற்றோருடன் விளை யாடியது. தமது பிள்ளை தத்தித் தத்தி நடப்பதைப் பார்த்து அவர்கள் சந் தோஷப்பட்டனர்.

நேரமாக, அவர்கள் குழந்தையுடன் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

இவற்றையெல்லாம் அந்தக் கடற் கரையில் இருக்கும் சிறிய நண்டு ஒன்று கவனித்துக் கொண்டிருந்தது.

அவர்கள் கடற்கரையை விட்டுப் போனதும் சிறிய நண்டு நேராகத் தன் தாயிடம் சென்றது. அது தாயிடம்,

"அம்மா! இன்று எமது இருப்பிடத் திற்கு ஒரு தாயும் தந்தையும் தமது குழந் தையைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அந்தக் குழந்தை நடந்து விளையாடி யதைப் பார்த்து அவர்கள் குதூகலித் தார்கள்.

ஆனால் அந்தக் குழந்தைக்குச் சரி யாக நடக்கத் தெரியவில்லை. அது சாய்ந்து சாய்ந்துதான் நடந்தது. அது நேராக நடந்திருந்தால் நன்றாக இருந் திருக்கும் அல்லவா?" என்று கேட்டது.

இதைக் கேட்ட தாய் நண்டிற்குச் சிரிப்பு வந்தது.

"மகனே! எனக்கு முன்னால் நேராக ஒரு முறை நடந்து காட்டு பார்க்கலாம்!" என்று சொன்னது தாய் நண்டு.

உடனே சிறிய நண்டு தாய் நண்டுக்கு முன்னால் நடந்து காட்டியது. ஆனால் நேராக நடக்காமல், ஒரு பக்கமாக இழுத்தாற் போல் இருந்தது சிறிய நண்டின் நடை.

இதைப் பார்த்த தாய் நண்டு,

"நீயும் ஒருபக்கம் சாய்ந்து கொண்டு தானே நடக்கிறாய்?" என்று சொன்னது.

சிறிய நண்டு மறுபடியும் நடந்து காட்டியது. ஆனால் எவ்வளவோ முயன்றும் அதனால் நேராக நடக்கமுடியவில்லை.

"நீ எப்படி நடக்கிறாய் என்று தெரியா மல் மற்றவரின் நடையில் குற்றம் கண்டு பிடிக்கிறாய். முதலில் உன் நடையைத் திருத்திக்கொண்டு, மற்றவர்களைப் பார்க்க வேண்டும்!" என்று அறிவுரை சொன்னது தாய் நண்டு.

சிறிய நண்டும் தாயின் அறிவுரையை அமைதியாகக் கேட்டது.


எம்மில் பலர்கூட இப்படித்தான்! தன்னிடம் இருக்கும் பிழைகளைப் பற்றி அறிய மாட்டார்கள். ஆனால் மற்றவர்களின் பிழைகளைப் பெரிதுபடுத்திக் கூறுவார் கள். முதலில் ஒருவர் தன்னை அறிதல் வேண்டும்.

## அதிசயம் - ஆனால் உண்மை!

### மருதோன்றிப் பாறை:



↑ எகிப்தின் சினாய் தீபகற்பத் திலுள்ள இப்பாறை மீது மருதோன்றிக் கிளையின் மெல்லிய அடையாளத்தைக் காணலாம். இந்த அடையாளம் பல நூற்றாண்டுகளுக்கு முன் இப்பாறைக ளின் மீது மருதோன்றிக் கிளைகள் விழுந்ததால் ஏற்பட்டதாம்.



### ஒய்கோ:பிலா எறும்புகள்:

↑ மேற்கு ஆபிரிக்காவில் உள்ள இந்த எறும்புகள், பட்டுநூல் கொண்டு இலைகளைச் சேர்த்துத் தைத்துக் கூடுகட்டுகின்றன. இந்த நூல் எறும்புக ளின் முட்டைப் புழுவில் இருந்து தயாராகிறது.



### வோட்டர் ஃப்ளீ:

← தெள்ளுப் பூச்சி போன்று காணப்படும் வோட்டர் ஃப்ளீ என்ற இந்தக் கடல் உயிரி, உண் மையில் ஒருவகை நண்டா கும். இந்த நண்டுக் கூட்டத் தில் 10 இலட்சம் பெண் நண்டுகளுக்கு மத்தியில் ஒரு ஆண் நண்டு மட்டுமே இருக்கும்.

### கரட் சப்பாத்து:

→ அமெரிக்கா வைச் சேர்ந்த ரிச்சர்ட் கார்னி என் பவரது தோட்டத் தில் விளைந்த கரட், குதிரைச் சவாரிக் காரர்களின் சப் பாத்துப் போன்ற வடிவத்தில் காணப் பட்டதாம்.



## வாரம் ஒரு நாடு

### பொஸ்னியா - ஹெர்சேகோவினா

தலைநகர்- சரஜிவோ
பரப்பு-51,129 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை- 43 இலட்சம்.
மொழி- செர்போ-குரோஷியன்.
எழுத்தறிவு-90%
சமயம்- கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம்.
நாணயம்-புதிய யூகோஸ்லாவிய டினார்.
தனிநபர் வருமானம்- 3590 டொலர்.

**அமைவிடம்:**

தென்வடக்கிலும், மேற்கிலும் குரோஷியா வும்; கிழக்கில் செர்பியாவும்; தென் கிழக்கில் மோன்டெனெக்ராவும் எல்லைகளாக அமைந் துள்ளன.

**வரலாறு:**

முன்னாள் யூகோஸ்லாவியக் குடியரசு கள் 1992 ஏப்ரலில் சுதந்திரமடைந்தன. செர்பியர் அதிகமாக வாழும் பகுதியில் செர்பியக் குடியரசு அமைக்கப்பட்டுள்ளது. போஸ்னியாவில் மிகப் பெரிய கலவரங்கள் நிகழ்ந்தன. 1993ல் தனி பொஸ்னியா குறித்த




பேச்சுவார்த்தை. 1994 போர்நிறுத்தம். எனினும் கலவரங்கள் ஓயவில்லை. 1995ல் நாட்டை இரண்டாகப் பிரித்து செர்பியர் கள் நாட்டின் ஒரு பகுதியையும், இஸ்லா மியர் மற்றும் குரோஷியர் மற்றப் பகுதியை யும் எடுத்துக்கொள்ள முடிவு செய்யப் பட்டது. 1996ல் அமைதி வந்த போதும் நாட்டைச் செப்பனிடுவது பெரும் கேள்விக் குறியாக இருக்கிறது.

**பொருளாதாரம்:**

உள்நாட்டுப் போரினால் பொருளா தாரம் மிகவும் நலிவடைந்துள்ளது. கோது மையும், பார்லியும் முக்கிய விளைபொருட் கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.10.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 266**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 264

**பரிசுக்குரியவர்:**
**எஸ். அருண் பிரியந்தன்,**
**றோயல் கல்லூரி, கொழும்பு-7.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பிரஷான் திவ்வியராஜன், புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. | கருணாகரம் சந்திரமோகன், விபுலாநந்தா மத்திய கல்லூரி, பிரதான வீதி, காரைதீவு.01. |
| ஷ:பியா பேகம், பாகும் மாவத்தை, அந்திடிய, தெஹிவளை. | முஹம்மட் பாஸீம், பாரதி தமிழ் மகா வித்தியாலயம், மடவளை. |
| சைமன் ஸ்பைரோஸ், ஜம்பட்டா வீதி, கொழும்பு-13. | கனூஷா, சென் ஜோசப் தமிழ் வித்தியாலயம், மஸ்கெலியா. |
| தாமோதரம் திலீபன், கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. | எம்.என். பாத்திமா சப்னா, அல்-ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. |
| செல்வி முன்ஸிலா கரீம், பிஹில்லதெனிய, ரம்மலக்கை, வட்டப்பொல. | எம். மேபல் பினிடா, க. கலாபொக்க த.வி., மடுல்கலை. |

## எப்படி வந்தது?

இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடை வதற்காக எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துவதை அறிந் திருப்பீர்கள். இது எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

அவுஸ்திரேலிய பத்திரிகை நிருபரான எட்வேர்ட் ஹனி என்பவர், பல்வேறு நாடு களின் சுதந்திரப் போராட்டங்களில் உயிர் நீத்த எண்ணற்ற தியாகிகளை இந்த உலகம் மறந்து விடக்கூடாது என்று நினைத்தார்.

இதற்கு என்ன செய்யலாம் என்று பல நாட்களாகச் சிந்தித்தார். இறுதியில், எல்லா ராலும் செலுத்தக்கூடிய மௌன அஞ்சலியே சிறந்த வழி என்று நினைத்தார். இதை இங்கிலாந்தின் ஐந்தாம் மன்னர் ஜோர்ஜிடம் தெரிவித்தார் ஹனி.



உடனே ஹனியை, பக்கிங்ஹாம் அரண் மனைக்கு வரவழைத்த மன்னர், மௌன அஞ்சலியைச் செய்து காட்டும்படி கூறினார். ஐந்து நிமிடம் மௌன அஞ்சலி செய்தார் ஹனி. இது சற்று அதிகம் என்று கூறி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செய்ய லாம் என்று மன்னர் ஒப்புதல் அளித்தார்.

இப்போது உலகம் முழுவதிலும் இது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

## வினோதச் செய்திகள்

* பூமிக்கு அடியில் ஆழத்திற்குத் தகுந்த வாறு வெப்பம் அதிகரித்துச் செல்கி றது. 3000 மீட்டர் ஆழத்தில் 260 பாகை சென்டிகிரேட் வெப்பநிலையும், 6000 மீட்டர் ஆழத்தில் 650 பாகை சென்டி கிரேட் வெப்பமும் உள்ளது.
* யானை மூச்சு விடுவது துதிக்கையால் தான் என்றாலும் வாசனையை அறிவது வாயால்தான். ஏனென்றால் அதன் வாயில்தான் வாசனையை அறியும் நரம்புகள் உள்ளன.
* ஃபிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் யாரும் தங்கள் குழந்தைகளுக்கு இஷ்டப் படி பெயர் வைக்க முடியாது. அரசாங் கப் பெயர்பட்டியலில் உள்ள பெயர் களில் ஒன்றைத்தான் அவர்கள் தேர்ந் தெடுத்து வைக்கவேண்டும்.
* ஃபிஜித் தீவில் உள்ள மக்கள்- யாருக்காவது மரியாதை செய்ய விரும் பினாலோ, அவர்களைப் பாராட்ட நினைத்தாலோ அவர்களுக்குத் திமிங் கிலத்தின் பல்லை அன்பளிப்பாகக் கொடுப்பார்கள்.
* ஒருவருடைய கைரேகையைப் போல் மற்றவருடைய கைரேகை இருப்ப தில்லை. அதேபோல்தான் எந்த வரிக் குதிரையின் உடலில் உள்ள வரிகளைப் போல் மற்றையதின் வரிகளும் இருப் பதில்லை.
* தென் அமெரிக்காவில் உள்ள 'ஹவுலிங்' குரங்குகள் மிக மிக சத்தமாகக் கத்தக் கூடியவை. இவை எழுப்பும் ஒலி 16 கிலோமீட்டர் தூரம் வரை கேட்கும்.

## நீலத் திமிங்கிலம் (BLUE WHALE)

உலகிலேயே மிகப்பெரிய உயிரினம் எது என்று கேட்டால், எல்லாரும் யானை என்று சொல்வார்கள். தரையில் வாழும் உயிரினங்களில் பெரியது யானை. ஆனால்



உலகில் வாழும் பெரிய உயிரினம் என்றால் அது நீலத்திமிங்கிலம்.

நீலத் திமிங்கிலம் 20 யானைகளின் நிறை கொண்டது. இதன் குடலில் 2 1/2 தொன் உணவை அடைக்கலாம். இதன் இரத்தக்குழாய்களில் சிறு குழந்தைகள் தவழ்ந்து செல்லலாம். கிரில் (KRILL) எனப் படும் இறால் இனத்தையே இது உணவாக உட்கொள்கிறது.

கடலில் கிரில்கள் கூட்டம் கூட்டமாக உணவு தேடிக்கொண்டு இருக்கும் போது, நீலத் திமிங்கிலம் அதனருகில் சென்று வாயைத் திறந்து கொள்ளும். அப்போது ஒருமுறை வாயைத்திறந்து மூடினால் ஆயிரக் கணக்கான கிரில்கள் போய்விடுமாம்.

நீலத்திமிங்கிலத்தின் தசைக்காகவும், கொழுப்புக்காகவும் இவற்றைக் கொல்வது அதிகரித்துள்ளது. எனவே இதைக் கொல்ல சர்வதேசத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உல கில் அழிந்து வரும் விலங்கினங்களில் இது வும் ஒன்றாகும்.

## சாதனையாளர்கள்

✪ முதன் முதலாக அட்லாண்டிக் சமுத் திரத்தை விமானம் மூலம் கடந்தவர்கள் யார்?

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜோன் அல்கொக் மற்றும் ஆர்தர் பிரவுண்.

✪ இந்தச் சாதனையை எப்போது புரிந்தார் கள்?

1919ம் ஆண்டு ஜுன் மாதம் 14ம் திகதி கனடாவில் உள்ள நியூஃபவுண்ட்லாண்டில்



இருந்து புறப்பட்டு அயர்லாந்தில் மறுநாள் இறங்கினார்கள்.

✪ இவ்விருவரும் இச்சாதனைக்காக எவ்வளவு தூரம் பயணம் செய்தனர்?

3 ஆயிரத்து 118 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்தனர். இந்தத் தூரத்தை 16 மணித்தியாலம் 12 நிமிடங்களில் கடந்தனர்.

✪ இருவரில் விமானத்தை ஓட்டியவர் யார்?

ஜோன் அல்கொக் என்பவர்தான் விமானத்தை ஓட்டினார். இவருடன் சென்ற ஆர்தர் பிரவுண் உண்மையில் ஒரு கப்பலோட்டி. எனினும் இருவரது சாதனையையும் பாராட்டி 'நைட்' என்ற பட்டம் இங்கிலாந்து மன்னரால் வழங்கப் பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாம் பாகம்

அங்கம் 07

# மேற்கே ஒரு குற்றம்

எழுத்துலக வேந்தன் சுஜாதா



"**மி**ஸ்டர் ஸ்டைன் ஹாஃப்! நான் கணேஷ் பேசுகிறேன்."

"சொல்லுங்கள்."

"அவர்கள் என்னிடம் தொடர்பு கொண்டு என்னை இன்று மாலை ஆறரைக்கு ஒலிம்பியா பார்க்கில் ஒரு இடத்தில் வரச் சொல்லியிருக்கிறார்கள். சரக்குடன்."

"வெரிகுட்."

"என்ன வெரிகுட்? சரக்குக்கு எங்கே போவேன்? அந்த கலாராதனாவின் பெட்டிகளை சோதனையிட்டீர்களா?"

"பூரா சோதனையிட்டு விட்டோம். ம்ஹூம். சுத்தம்! அவர்களிடம் ஒண்ணுமில்லை! உங்கள் பெட்டிகளைப் பார்த்தீர்களா?"

"இனிமேல்தான் போய்ப் பார்க்க வேண்டும். எனக்கு நம்பிக்கை இல்லை."

"உடனே ஹொட்டலுக்குப் போய் உங்கள் பெட்டிகளையும் பாருங்கள். எதுவும் இல்லையென்றால் எனக்குத் தெரிவியுங்கள். நாங்கள் ஏற்பாடு பண்ணுகிறோம்!"

"எதற்கு?"

"சரக்குக்கு?"

"போலியா?"

"ஆம்! அவர்கள் உங்களிடம் அந்தப் பெட்டியை வாங்கும்வரை காத்திருந்து நீங்கள் விலகின பிற்பாடு நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்! ஹொட்டலுக்குப் போய் ஃபோன் பண்ணுங்கள்!"

"சரி" என்று சந்தேகத்துடன் வைத்தான். வசந்த், "என்ன?" என்றான்.

"சரியானபடி சிக்கிட்டோம்டா! பொலிஸ் நம்மகிட்ட ஒரு போலிச் சரக்கை குடுத்து அவங்களைப் புடிக்கப் போறாங்களாம்!"

"நம்மை அவுங்க உபயோகிக்கப் போறாங்க பாஸ். முணுக்குன்னா ரெண்டு பேரும் துப்பாக்கியைத் தூக்கிடு வாங்க. டிய்யா டிய்யான்னு ரெண்டு பக்கமும் குண்டு பறக்கப்போறது. நாம் நடுவில் செத்தோம். பேசாம கண் மறைவாப் போயிடலாம்"

"அப்புறம் அவுங்க பொலிஸ்கிட்ட தப்பிச்சாக்கூட போலிச்சரக்கைப் பார்த்திட்டு நம்மைத் துரத்தப் போறாங்க. என்னடா செய்யறது?"

"அந்த கலாராதனாவைப் பார்த்துட்டாங்களாமா?"

"அவுங்ககிட்ட ஒண்ணும் கிடையாதாம்! துப்புரவாத் தேடிட்டாங்களாம்!"

"சரக்கு என்னன்னே தெரியாது?"

"தெரியாது!"

அவர்கள் ஹொட்டல் அறைக்குச் சென்றதும் தங்கள் பெட்டிகளை முழுவதும் சோதனை செய்து கொண்டார்கள். பெட்டியின் அடிப்பாகத்தைக் கிழித்துக் கூடப் பார்த்தார்கள்... பவுடர் டப்பாக்கள், தைலங்கள், லோஷன்கள்... ம்ஹூம், ஒன்றுமில்லை!

ஸ்டைன் ஹாஃப்புக்கு டெலிஃபோன் செய்தான்.

"எங்கள் பெட்டிகளையும் சோதித்து விட்டோம். ஏதும் அகப்படவில்லை."

"சரி பரவாயில்லை. நாங்கள் ஏற்பாடு செய்து விடுகிறோம்."

"மிஸ்டர் ஸ்டைன் ஹாஃப்! அவர்கள் பொருள் போலி என்று தெரிந்து என்மேல் பாய்வார்கள் அல்லவா?"

"ஆம்! அதற்கு முன்பே அவர்களை நாங்கள் பிடித்து விடுவோம் பயப்படாதீர்கள். ஒலிம்பியாவில் எல்லா பந்தோபஸ்தும் செய்து விடுவோம். உங்களிடமிருந்து அவன் பெட்டியைப் பெற்றுக் கொண்ட பிறகே நீங்கள் விலகின பிற்பாடு- வாண வேடிக்கைகள் நடக்கும்! உங்களிடம் ப்ரீஃப்கேஸ் போல் ஏதாவது இருக்கிறதா?"

"இருக்கிறது."

"அதில் காகிதங்கள் கற்களை நிரப்பிக் கொள்ளுங்கள்! அதுதான் சரக்கு!"

"அவர்கள் திறந்து பார்த்தால்..?"

"திறந்து பார்ப்பதற்குள் ஆள் பிடிபட்டு விடுவான்!"

"சுடுவீர்களா?"

"தேவையிருந்தால்தான்! நீங்கள் அந்தப் பெட்டியை, உங்களை அணுகுபவனிடம் கொடுத்துவிட்டு உடனே விலகி ஓடிப்போய் விடுங்கள்! ஸிம்பிள்!"

"சரிதான்!"

"மிஸ்டர் கணேஷ் உங்கள் உயிர் என் பொறுப்பு. இதில் நீங்கள் எங்களுடன் ஒத்துழைப்பதினால் எங்களுக்கு மிகவும் பொறுப்பு அதிகமாகிறது.. குட்லக்."

கணேஷ் டெலிஃபோனை வைத்ததும், "வசந்த், என் ஃப்ரெண்ட் ஒருத்தன் இருப்பான். இந்த ப்ளக்ல ஷாக் அடிக்குமான்னு கேட்டா நீ தொடு. ஷாக் அடிக்காது. நான் காரண்டி என்பான். அதுபோலத்தான் இருக்கு. நீ பெட்டியைக் கொண்டு போ... நாங்க பார்த்துக்கறோம்! வசந்த் அந்த வட்டங்கள்! வட்டங்களுக்கு என்ன அர்த்தம்னு நாம் இன்னமும் கண்டு பிடிக்கவே இல்லையே?" என்றான்.

"ஒன் மினிட் பாஸ். ஒலிம்பியா பார்க்குனு தானே அவன் சொன்னான்? ம்யூனிக்ல ஒலிம்பிக் கேம்ஸ் நடந்தது. அந்த ஒலிம்பிக் சின்னமே இந்த மாதிரி கோத்துக்கொண்ட வட்டங்கள்!"

"அதனால அதுக்கு என்ன அர்த்தம்?"

"அவுங்க நம்மை ஒலிம்பிக் பார்க்குக்குத் தானே வரச் சொல்லியிருக்காங்க..?"

"சரி! இதுலேர்ந்து 'சரக்கு' என்ன? அது எங்கே ஒளிஞ்சிண்டு இருக்குன்னு ஏதாவது தெரியறதா? அதுதான் முக்கியம்!"

"அது இன்னும் கொஞ்சம் யோசிக்கணும்!"

"அந்த வட்டங்களில்தான் விடை இருக்கு! அதிலதான் சரக்கு எங்க இருக்குங்கறதுக்கு அடையாளம் இருக்கு."

மாலை ஆறு மணிக்கு அவர்கள் பூமிக்கடியில் அந்த நவீன ரெயிலில் விரைந்து கொண்டிருந்தார்கள். கூட்டம் சுமாராக இருந்தது. முன்ஷ்னெர் ஃப்ரைஹைட் என்ற இடத்தில் அவர்கள் ரெயில் மாற வேண்டியிருந்தது. கணேஷ் அந்தப்பெட்டியைத் தன் கையில் வைத்திருந்தான். அதனுள் செய்தித் தாள்களையும் காலி பீர் பாட்டில்களையும் அடைத்து கனம் அளித்திருந்தான்.

கணேஷுக்கு கவலையாக இருந்தது. எந்த நிமிஷமும் தப்பு நேர்ந்து யாராவது தவறாகச் சுட்டுவிட்டால் முதல் விபத்து கணேஷுக்குத்தான் ஏற்படும். என்ன செய்வது? பேய்க்கு வாழ்க்கைப்பட்ட கதையாகிவிட்டது.

ஒலிம்பியா ஸெண்ட்ரம் என்கிற நிலையத்தில் அவர்கள் இறங்க வேண்டும். அங்கிருந்து டாக்ஸி பிடித்து... அவன் சொன்ன ஐஸ்போர்ட் ஹாலுக்குச் செல்ல வேண்டும். பெட்டியை சந்திப்பவனிடம் கொடுத்துவிட்டு உடனே ஓட வேண்டும். அவன் ஓடினதும் ஆங்கங்கே எங்கெங்கோ பதுங்கியிருக்கும் பொலிஸ் உடனே பாய்ந்து அவனைப் பிடித்து விடுவார்கள்...

அப்படியெல்லாம் நடப்பதற்கு சந்தர்ப்பம் எதுவும் ஏற்படவில்லை. ஒலிம்பியா செண்ட்ரம் அடைந்து பிளாட்பாரத்தில் நடக்கும்போது யாரோ அவன்மேல் சற்று உரசினாற்போல் நடந்தார்கள். மற்றொருவன் மேலே விழுந்தான். ஒரு கணத்தில் அவன் கையிலிருந்த பெட்டி பிடுங்கிக்கொள்ளப்பட்டது! யார் எப்படி என்கிற கேள்விகளுக்கு பதில், அந்த ஜன நெருக்கத்தில் கரைந்துவிட்டது.

ஒலிம்பிக் டவரின் உச்சியில் இருந்த சுழலும் ரெஸ்டாரண்டில் கணேஷ், வசந்த் ஸ்டைன் ஹாஃப், ஹோனிஷ் மற்றொரு பொலிஸ் ஆபீஸர் உட்கார்ந்திருந்தார்கள்.

"சே! கோட்டை விட்டுட்டோம்! இதை நாம் எதிர்பார்த்திருக்க வேண்டும்! அத்தனை பொலிஸ் படையும் இங்கே தயாராக இருக்கிறோம்! ஸ்டேஷனிலேயே பிடுங்கிக்கொண்டு சென்றுவிட்டார்கள்." என்றார் ஸ்டைன் ஹாஃப்.

"பெட்டியைத் திறந்ததும் அவர்களுக்கு ஆச்சரியம் காத்திருக்கிறது." என்றான் கணேஷ்!

"நமக்கு அபாயம் காத்திருக்கிறது!" என்றான் வசந்த்.

"இல்லை நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் சரக்கு கிடைக்கும்வரை உங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள். மிஸ்டர் கணேஷ், அவர்கள் உங்களுடன் மறுபடி தொடர்பு கொள்ளுவார்கள். அப்போது சொல்லி விடுங்கள். எங்களை ஏமாற்றிப் பணம் கொடுக்காமல் பெட்டியைப் பிடுங்கிக்கொண்டு செல்ல நீங்கள் நினைப்பீர்கள் என்று நாங்கள் வேண்டுமென்றே அப்படிச் செய்தோம். உண்மையான பெட்டி பத்திரமாக என் நண்பனிடம் இருக்கிறது என்று சொல்லிவிடுங்கள்."

கணேஷ் சிரித்தான்.

"இந்த அபாயகரமான விளையாட்டில் ஒன்றே ஒன்று நம்முடன் கண்ணாமூச்சி விளையாடுகிறது!"

"தெரியும். சரக்கு!"

"நீங்கள் அந்த நாட்டியக் குழுவின் பெட்டிகளை சரியாகத் தேடிப்பார்த்து விட்டீர்களா?"

"மிகத் தீவிரமாகக் குடைந்து விட்டோம்! அவைகளில் ஒன்றுமில்லை!"

"அந்த வட்டங்கள்?"

"ம்யூனிக் நகரைக் குறிக்கும் ஒலிம்பிக் வட்டங்கள் அவை!"



"இல்லை! வேறு ஏதோ!"

அகன்ற கண்ணாடி யன்னல்களுக்கு வெளியே ம்யூனிக் நகரத்தின் இராத்திரி சொர்க்கத்தில் விழாக் கொண்டாடுவதுபோல் தெரிந்து, மெலிதாக அந்த ரெஸ்டாரண்டின் சுழற்சிக்கேற்ப நகர்ந்து கொண்டிருந்தது. இந்த விந்தை நகரத்தின் எந்த ஓரத்தில் அவர்கள் இருக்கிறார்கள்? அடுத்து என்ன செய்யப்போகிறார்கள்?

"மிஸ்டர் கணேஷ். நீங்கள் இப்போது எங்கே செல்ல வேண்டும்? நாங்கள் கொண்டு விடுகிறோம்."

"அந்த கலாராதனா குழு தங்கியிருக்கும் இடத்தில் என்னைக் கொண்டு விடுங்கள்."

"ஏன்?"

"அவர்களுடன் பேசிப் பார்க்கிறேன். ஏதாவது பாதை தெரியறதா என்று பார்க்கலாம்!"

✦✦✦

'**கா**லினிற் சிலம்பு கொஞ்ச கொஞ்ச!'

டேப்ரிக்கார்டர் பதம்பாடிக் கொண்டிருக்க, அந்தப் பெண்கள் எட்டுப்பேரும் அதற்கேற்ப, ஜல் ஜல் என்று ஆடிக் கொண்டிருக்க, நடு நாயகமாக ரேணுகா அபிநயம் செய்து கொண்டிருந்தாள்.

ஒத்திகை நடந்து கொண்டிருந்தது. கலாராதனா தங்கியிருந்த டார்மிட்டரியின் ஒரு சிறிய ஹாலில் அவர்கள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெள்ளைக்காரப் பெண்கள் சிலர் அபிநயத்தை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

கணேஷும் வசந்தும் உள்ளே நுழைந்தார்கள். ரேணுகா அற்புதமாக அபிநயித்தாள். அவள் கண்கள் புன்னகை உடல் அசைவு எல்லாம் அப்போது சிறிய பாலகனான கண்ணனின் குழந்தைத் தனத்தை பிரதிபலித்தன.

ஏதோ ஒரு இடத்தில் அசைவுகள் தடைப்பட சட்டென்று நிறுத்தி டேப் ரிகார்டரை திருப்பிப் போடச் சொன்னாள். சற்று நேர ஆசுவாசத்திற்காக ஜல் ஜல் என்று நடந்து நாற்காலியில் உட்கார்ந்தாள்.

கணேஷ் அருகில் சென்றான்.

"ஹலோ!"

"ஹலோ! நீங்களா?"

"என்னிக்கு பர்ஃபார்மன்ஸ்?"

"நாளைக்கு! இன்னும் ஸ்டெப்ஸ் செட் ஆகலை. இராத்திரி ஜெர்மன் பாஷையிலே விளக்கங்களை எல்லாம் ரிகார்ட் பண்ணனும். நிறைய வேலை இருக்கு. பூரா ஒரு தடவை ரிஹர்ஸல் பண்ணிட்டாத்தான் எனக்குத் திருப்தி!"

"ரொம்ப அழகா ஆடறீங்க. நாளைக்கு இந்த ஜெர்மன் இளைஞர்கள் எல்லாம் மயங்கிடப்போறாங்க!"

"தாங்ஸ்! போதாது! இன்னும் பர்ஃபெக்ஷன் வரணும்! என்ன ரெடியா...? ஒரு நிமிஷம்."

மறுபடி அந்தப் பாடல் துவங்கியது.

காலினிற் சிலம்பு கொஞ்ச
கைவளை குலுங்க, முத்து
மாலைகள் அசைய...
காலினிற் சிலம்பு கொஞ்ச...

அவர்கள் சிலம்புகள் கொஞ்சின.

கைவளை குலுங்க...

அவர்கள் வளையல்களைக் குலுக்கினார்கள்.

கணேஷின் மூளைக்குள் ஒரு மின்னலடித்தது!

(தொடர்ந்து வரும்)

---

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன் 10

ராஜையா



1959-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தன் பொறுப்பை நிறைவேற்ற சதாமின் அதிரடிப்படை முயன்றது. காரில் வந்த காசிமை அது எந்திரத் துப்பாக்கிகளால் தாக்கியது. இத் தாக்குதலில் காசிம் உயிர் தப்பினார். எனினும் படுகாயம் அடைந்தார். ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் படுத்திருக்க வேண்டிய அளவுக்கு அது படுகாயமாக இருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக 75 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், காலில் குண்டடிபட்டிருந்தபோதிலும் சதாம் பொலிசிடம் அகப்படவில்லை.

ஜனாதிபதியை துணிச்சலுடன் கொல்ல முயன்ற இச் சம்பவத்தின் மூலம் சதாம் பெயர் ஈராக் முழுக்க பிரபலம் அடைந்தது. அவன் யார்? அவனது பின்னணி என்ன? என்பதை சிறுகச் சிறுகத் தெரிந்து கொண்ட ஈராக் இளைஞர்கள் அவன்மீது தனி மதிப்பும் மரியாதையும் கொள்ளத் தொடங்கினார்கள்.

சதாம் பற்றிய ஒரு கேள்விக்கு மட்டும் அவர்களுக்கு விடை கிடைக்காமல் இருந்தது. தப்பி ஓடிய சதாம் என்ன ஆனான் என்பது அவர்களுக்குத் தெரியாமல் மர்மமாகவே இருந்தது....

பொலிசுக்கும்தான்...!

டைகிரீஸ் ஆற்றின் மறுகரையில் ஈரம் சொட்டச் சொட்ட உட்கார்ந்திருந்தான் சதாம்....

குண்டடிபட்ட காலுடன் இத்தனை பெரிய ஆற்றை சிரமப்பட்டு நீந்தி வந்ததால், அவனுக்கு களைப்பாக இருந்தது. மூச்சு வாங்கியது..

ஆற்றங்கரை மேல் எழுந்து நின்றான். அங்கிருந்து பார்க்கையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை எங்கும் மணலாய் பாலைவனம் விரிந்து கிடந்தது. கரையோரத்தில் ஒரு சின்ன கிராமம் மட்டும் தெரிந்தது.

கிராமத்தை நோக்கி நடந்தான்.

கிராமத்துக்கு வெளியே ஒரு கழுதை மேய்ந்து கொண்டிருந்தது.

கழுதையின் சொந்தக்காரன் யார் என்று தெரியாமலே அவரிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுவிட்டு, அந்த கழுதையை பிடித்து இழுத்து வந்தான். பிறகு அதன் மீது ஏறி அமர்ந்தான்.

பாலைவனத்தினூடாக பயணம் தொடங்கியது. பல மணி நேர பயணத்துக்குப் பின் ஈராக்கின் எல்லையை அவன் கடந்தான். அண்டை நாடான சிரியாவுக்குள் நுழைந்தான்....

சதாம் ஜனாதிபதியைக் கொல்ல முயன்ற சம்பவம் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த சிரியா மறுமலர்ச்சிக் கட்சித் தோழர்கள் அவனுக்கு தங்க இடமும், உண்ண உணவும் கொடுத்து உபசரித்தார்கள். கால் காயம் ஆறுவதற்காக மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்கள்.

ஈராக்கில் பொலிஸார் சதாமை வலைவீசி தீவிரமாக தேடிக்கொண்டிருக்கும் தகவல் சிரியா மறுமலர்ச்சிக் கட்சித் தோழர்கள் மூலம் அவனுக்குக் கிடைத்தது. இதனால் உடனடியாக ஈராக்குக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டான்.

'இனி என்ன செய்யலாம் இங்கு?' என்று அவன் மூளையைக் குடைந்து கொண்டிருந்த போது அவனுக்கு அந்த செய்தி கிடைத்தது:

"நாசர் உனக்கு அழைப்பு அனுப்பியிருக்கார். அவர் உன்னைச் சந்திக்க விரும்புகிறார்...!"

'நாசரா....??'

பிரமிப்பால் பேச்சற்று நின்று விட்டான் சதாம். நினைவேடுகள் படபடவென பின்னோக்கி புரண்டன...

சதாம் விடலைப் பருவத்திலிருந்த நாட்களில் அவனை 'ஹா'வென பிரமிக்க வைத்த பெயர்-

நாசர்..!

"ஏ...யப்பா! இத்தனை பெரிய வீரனா?" என்று நாசரை நினைத்து, வியந்து மலைத்துப் போவான் அப்போதெல்லாம். நாசரின் படத்தை நெஞ்சிலும், பெட்டியிலும், வீட்டுக் கதவிலும் ஒட்டி வைத்திருந்தான்.

இப்படி சதாமை மட்டுமல்ல; அன்று ஏறக்குறைய எல்லா அரேபியர்களையும் தன் வசப்படுத்தி, அவர்களின் தூக்கத்திலும், விழிப்பிலும் சதா தன் பெயரை பெருமிதத்துடன் உச்சரிக்கச் செய்த நாசர்-

எகிப்து ஜனாதிபதி!

ஜவஹர்லால் நேருவின் நண்பர்!

இஸ்ரேல் பிரச்சனையில் போர் முரசு கொட்டியதால் சகல அரேபியர்களின் இதயங்களிலும் இடம் பிடித்தவர்...

"உலகம் முழுக்க யூத இன மக்கள் சிதறிக் கிடக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே மெஜாரிட்டி இனத் தலைவர்களால் சித்ரவதை செய்யப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்படுகிறார்கள். யூத இன மக்கள் பாதுகாப்புடன் வாழ வேண்டுமானால் அவர்களுக்கென்று ஒரு தனி நாடு வேண்டும்.

யூதர்களின் புனித தேவாலயம் அரபு மண்ணில்- எருசலேம் நகரில் இருக்கிறது. அந்த எருசலேமிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் யூதர்கள் வாழ்ந்து வந்ததாக பைபிள் கூறுகிறது. ஆகவே எருசலேம் நகரம் உள்ள பாலஸ்தீன நாடே யூதர்களின் தொன்மைத் தாயகம்! "ஒ...யூதர்களே! உலகெங்கிலுமிருந்து வந்து பாலஸ்தீனத்தில் குடியேறுங்கள். தற்போது அங்கு வசித்து வரும் அரபு மக்களை விரட்டியடியுங்கள். ஆட்சியைக் கைப்பற்றுங்கள். நாட்டின் பெயரை இஸ்ரேல் என்று மாற்றுங்கள்." என்று 'ஜியோனிஸ்ட்' என்ற அமைப்பு குரல் கொடுத்து, யூதர்களை தட்டியயெழுப்பி விட்டது. இந்த அமைப்பின் கொள்கையே ஜியோனிசம்!

இதை அரேபியர்கள் கடுமையாக எதிர்த்தார்கள்...

"யூதர்கள் கொடுமைக்கு ஆளாவது மேற்கத்திய கிறிஸ்தவ நாடுகளில் தானே தவிர அரபு நாடுகளில் அல்ல. ஆகவே ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமை என்ற அடிப்படையில் யூதர்களுக்கு வேண்டுமானால் ஜெர்மனியிலோ, இங்கிலாந்திலோ இடம் ஒதுக்கி தனி நாடு கொடுங்கள். பாலஸ்தீனத்தை ஆக்கிரமிக்க முயல வேண்டாம்!

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் யூதர்கள் வசித்ததாகக் கூறும் பைபிளை ஆதாரமாகக் காட்டி, பாலஸ்தீனியர்கள் ஆண்டாண்டு காலமாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் பூமியை கைப்பற்றப் பார்க்காதீர்கள். அப்படிப் பார்த்தால், இந்தியாவில் உள்ள 'ஆரியர்' எனப்படும் இனமக்கள் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஈரானில் குடியிருந்தார்களாம். அதை வைத்து ஆரியர்கள் இன்று ஈரானை ஆக்கிரமித்தால் அதுவும் நியாயம் என்றாகி விடாதா? அமெரிக்கர்களெல்லாம் சில நூற்றாண்டுகளுக்கு முன் வரை ஐரோப்பாவில் வசித்தவர்கள்தான். இதை சாக்காகக் கொண்டு அமெரிக்கர்கள் இன்று ஐரோப்பாவை ஆக்கிரமிக்க முயன்றால், அதுவும் நியாயம் என்றாகி விடாதா? வேண்டாம் விஷப் பரீட்சை!" என்றார்கள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# முள் நிலவு

## நிலவு 16

டெலிஃபோன் ரிஸீவரை கையில் பிடித்தபடி அதை வைக்கத்தோன்றாமல் அப்படியே நான் நின்று கொண்டிருக்க-வாசலில் கோலம் போட்டுவிட்டு வந்த என் மனைவி தோளைத் தொட்டாள்.

"ஃபோன்ல யாருங்க.....?"

"டாக்டர் மிருதுபாஷிணி"

"என்ன விஷயம்..? ஏன் உங்க முகம் என்னவோ மாதிரி இருக்கு... டாக்டர் நிலா வைப்பத்தி ஏதாவது சொன்னாங்களா?"

"ஆமா..."

"என்ன சொன்னாங்க..?"

"நிலா இப்போ வெளிச்சமான அறைக்கு மாற்றப்பட்டு இருக்காளாம். காதுகளைப் பொத்திக்கிட்டு கத்தற கொடுமையெல்லாம் இப்போ கிடையாதாம்..."

"பரவாயில்லையே..."

"நிலாவுக்கு இப்போ இந்த முன்னேற்றம் இருந்தாலும், அவளுக்கு வேற ஒரு ஆபத்து உருவாயிட்டு வருதாம்..."

னார். எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுத்தார். கிட்டத்தட்ட ரெண்டு மணி நேர சோதனைக்குப்பின் அவர் எங்களுக்கு ஒரு அதிர்ச்சியான ரிப்போர்ட்டைக் கொடுத்தார்.

நான் இதயப்படபடப்பைக் கட்டுப் படுத்திக் கொண்டு கேட்டேன். "என்ன ரிப்போர்ட் டாக்டர்...?"

புன்னம் சுந்தர் குறுக்கிட்டு தொடர்ந்தார். "மனிதர்கள் ஏதாவது ஒரு அதிர்ச்சிக்கு உட்பட்டு உணர்ச்சி வசப்படும்போது மூளையில் உள்ள ந்யூரான்கள் ந்யூரோ பெப்டைடஸ் என்ற இரசாயனத்தைச் சுரக்கும். இந்த ந்யூரோபெப்டைடஸ் என்கிற இரசாயனத்தோட வேலை உணர்ச்சி வசப்படும் மனிதர்களை சில மணி நேரத்திற்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து உடம்பையும் மனதையும் ஒரு நார்மல்ஸிக்குக் கொண்டு வந்து விடும்... இது இயற்கை மனிதனுக்குக் கொடுத்து இருக்கக் கூடிய ஒரு வரப்பிரசாத இரசாயனம்... பட் இந்த இரசாயனம்தான் இப்போதைக்கு நிலாவுக்குள் ஒரு ஆபத்தான விளைவை ஏற்படுத்தப்போகுது..."

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்
எழுதியுள்ள
விறு விறு காதல்கதை....
உங்கள் இதயத்தில்
இந்தக் கதையின் நாயகி
'நிலா'வுக்கும்
இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

"டாக்டர் ஹரிஹரேஷ் ஒரே ஒரு வழியைத்தான் சொன்னார். நிலா தன்னோட நினைவுகளை ஐமீன்... பழைய நினைவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்துட்டு வர்ற இந்த நேரத்துல அவள் சம்பந்தப்பட்ட பழைய நினைவுகள் மறுபடியும் புதுப்பிக்கப் படணும்..."

நான் என் நெற்றியில் குழப்பவரிகளை உருவாக்கிக் கொண்டே கேட்டேன்:

"புதுப்பிக்கப்படணும்னா எப்படி...?"

"நிலா இனி இந்த மென்ட்டல் ஹோமில் இருக்கக்கூடாது. அவளை வீட்டுக்குக் கூட்டிப் போய் பழகிய இடங்களில் நடக்க வைக்கணும். அவளுக்கு பழக்கமான பரிச்சயமான முகங்களைப் பார்க்க வைக்கணும். இந்த சென்னையில் அவளுக்குப் பிடித்தமான இடங்கள் சில இருக்கும். அங்கே அவளை அடிக்கடி கூட்டிட்டுப் போகணும்... அவளுக்குப் பிடிச்ச கவிதைகள் அவ காதுல விழணும். பிடிச்ச சினிமா நடிகர், கிரிக்கெட் வீரர், பிடிச்ச அரசியல் தலைவர் இவர்களோட ஃபோட்டோஸ் அடிக்கடி நிலாவோட பார்வைக்குத் தட்டுப்படணும்..."

"இப்படியெல்லாம் செஞ்சா அவ குணமாயிடுவாளா டாக்டர்...?"

"குணமாயிடுவாள்னு ஹரி ஹரேஷ் சொல்லலை. அந்த ந்யூரோபெப்டைடஸ் இரசாயனம் தன் சுரப்பைக் குறைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கு. அதன் காரணமா பழைய நினைவுகள் சிதையப்படறது ஒரளவுக்குக் கட்டுப்படும்னு சொன்னார்."

நான் மௌனமாய் நெற்றியைத் தேய்த்துக்கொண்டு அவஸ்தையாய் மிருதுபாஷிணியைப் பார்க்க அவர் தொடர்ந்தார்.

என் மனைவியின் முகம் மாறியது.

"என்னங்க அது புதுக்குண்டு..? நிலாவுக்கு என்ன ஆபத்தாம்...?"

"தெரியலை...! டாக்டரம்மா என்னைக் காலையில பத்துமணி சுமாருக்கு ஹாஸ்பிடலுக்கு வரச் சொல்லியிருக்காங்க..."

"உங்களை எதுக்கு அந்த டாக்டரம்மா வரச் சொல்றாங்க...? நிலாவுக்கு ஏதாவது பிரச்சனைன்னா அவரோட அப்பா அம்மாவுக்கு ஃபோன் பண்ணிச் சொல்ல வேண்டியதுதானே...."

"ஏதாவது காரணம் இல்லாமே டாக்டரம்மா என்னை வரச் சொல்ல மாட்டாங்க. பத்து மணிக்கு நான் போய்ட்டு வந்துடறேன்...."

"நான் வரலைங்க... நிலாவை அந்தக் கோலத்துல பார்த்தா வயித்தை பிசைஞ்சு விட்டு-மனசை என்னவோ பண்ணுது. நீங்க மட்டும் போய்ட்டு வாங்க..."

நான் தலையாட்டி ரிஸீவரை வைத்துவிட்டு வாக்கிங் கிளம்பினேன்.

'நிலாவுக்கு இப்போது என்ன புது ஆபத்து....?'

இருதயம் கத்திக்குத்துப்பட்ட காயம் போல் வலித்தது.

***

காலை சரியாய் பத்துமணிக்கெல்லாம் டாக்டர் மிருதுபாஷிணிக்கும் டாக்டர் புன்னம் சந்தர்க்கும் முன்பாய் நான் உட்கார்ந்திருந்தேன்.

அறைக்குள் சில விநாடிகள் வரைக்கும் வேண்டாத ஒரு நிசப்தம் நிலவ மிருதுபாஷிணி அதைக் கலைத்தார்.

"மிஸ்டர் ஆர்.கே...! நேத்து ராத்திரி ந்யூரோ சர்ஜன் ஹரி ஹரேஷ் இங்கே வந்து நிலாவை டயகனைஸ் பண்ணி

என் இதயத் துடிப்பு அதிகமாகிக் கொண்டிருக்க டாக்டர் புன்னம் சந்தர் தொடர்ந்தார்.

"விமானம் வெடித்துச் சிதறியபோது, நிலாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக நிலாவின் மூளையில் சுரக்க ஆரம்பித்த ந்யூரோபெப்டைடஸ் இரசாயனம் தன் சுரப்பை உடனடியாய் நிறுத்தாமல் இன்னமும் சுரந்து கொண்டே இருக்கிறது. சுரக்கிற அளவு மிகக் குறைவுதான் என்றாலும் இது நிற்காமல் தொடர்ந்தால் மூளையில் பதிவாகியுள்ள கடந்த காலத்தைப் பற்றிய எல்லா சம்பவங்களும் கொஞ்சம் கொஞ்சமாய் அவளை விட்டு விலகிப் போய்விடும்..."

புன்னம்சந்தர் சொல்லச் சொல்ல-என் மனதில் வலி பரவியது.

"டாக்டர் இது என்ன விபரீதம்?"

"விபரீதம்தான். இப்போதைக்கு இது முழுமையான மனம் சம்பந்தப்பட்ட பிரச்சனை மட்டும் கிடையாது. மூளையில் உள்ள நரம்புகள் சம்பந்தப்பட்ட பிரச்சனையாக மாறிவிட்டது."

"இதை மருந்துகளால குணப்படுத்த முடியாதா...?"

"சாத்தியம் இல்லைன்னு டாக்டர் ஹரி ஹரேஷ் சொல்லிட்டார். மருந்துகளைக் கொடுத்து அந்த ந்யூரோபெப்டைடஸ் இரசாயனத்தைக் கட்டுப்படுத்த நினைத்தால் வேறு விளைவுகள் ஏற்படலாம்..."

"வேறு விளைவுகள் என்றால்...?"

"உடம்பின் உள் உறுப்புக்களில் அதன் செயற்பாட்டுத் திறனில் கொஞ்சம் கொஞ்சமாய் பாதிப்புக்கள் ஏற்பட்டு, அடுத்த இரண்டு மூன்று வருடங்களில் உடம்பு கோமா நிலைமைக்குத் தள்ளப்படும்..."

"நிலாவைக் குணப்படுத்த வேறு என்னதான் வழி டாக்டர்...?" நான் கேட்க மிருதுபாஷிணி பெருமூச்சோடு தொடர்ந்தார்.

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

"மிஸ்டர் ஆர்.கே...! நிலாவைப் பற்றிய இந்த விபரீதமான விஷயத்தை அவளோட பேரண்ட்ஸுக்கு சொல்லாமே உங்ககிட்ட ஏன் சொல்லிட்டிருக்கோம்னு நீங்க ஆச்சரியப்படலாம்... நிலாவோட பேரண்ட்ஸ் ரொம்பவும் நம்பிக்கையோட மகளை தினசரி பார்க்க வந்துட்டும் போயிட்டும் இருக்காங்க... அவங்க ஒவ்வொரு தடவையும் என்னைப் பார்த்ததும் கேட்கக்கூடிய முதல் கேள்வி இது தான். 'டாக்டர் எங்க நிலா பழைய மாதிரி கிடைப்பாளா...?' நான் இந்தக் கேள்விக்கு சொல்ற பதில்' கண்டிப்பா கிடைப்பா'. இப்படி நான் சொல்லும்போதே அவங்க முகங்கள்ல தெரியற அந்த சின்ன சந்தோஷத்தின் அளவு என்னைப் பொறுத்த வரைக்கும் ரொம்பப் பெரிசு. அந்த சந்தோஷம் அவங்க மனசுல ஒட்டிக்கிட்டு இருக்கிற ஒரே ஒரு காரணத்தாலதான் இன்னமும் உயிரோடு இருக்காங்க... இந்த ந்யூரோபெப்டைடஸ் விஷயத்தையெல்லாம் சொல்லி அவங்க சந்தோஷத்தை கொலை செய்ய நான் விரும்பலை மிஸ்டர் ஆர்.கே...!"

புன்னம்சந்தர் குறுக்கிட்டுப் புன்னகைத்தார். "நீங்க ஒரு ரைட்டர். நிலாவுக்கு எதிர் வீட்டுக்காரர். நிலா உங்ககூட நல்லா பழகியிருக்கா.. நீங்க இந்த நிலா விஷயத்துல கொஞ்சம் இண்ட்ரஸ்ட் எடுத்துக்கிட்டு அவளை டீல் பண்ணினா போதும்..."

"அதாவது நிலாவை நான் அடிக்கடி அவ வீட்டுக்குப் போய் பார்க்கணும். ஏற்கனவே நாங்க பேசின விஷயங்களை அவளோட நினைவுக்குள்ளே தட்டுப்படற மாதிரிப் பேசணும்... அவளோட ஃப்ரண்ஸ்களையெல்லாம் வரவழைச்சுப் பார்க்க வைக்கணும்..."



"அதே தான்..."

"மிஸ்டர் வெங்கடேஷ்வரனை இது சம்பந்தமா நான் கலந்து பேசிக்கலாமா?"

"கிருஷ்ணகாந்தோட அப்பாவைத்தானே சொல்றீங்க?"

"ஆமா..."

"தாராளமா கலந்து பேசிக்கலாம். அவர் கிட்ட மட்டும் இந்த ந்யூரோபெப்டைடஸ் விஷயத்தைச் சொன்னா போதும். வேற யார் கிட்டேயும் வேண்டாம்...."

நான் எழுந்தேன்.

விழுந்துவிட்ட இந்த நிலா இனி வெளிச்சத்தோடு மீள்வாளா...? இல்லை... குழியிலேயே புதையுண்டு போவாளா?

●●●

வெங்கடேஷ்வரன் காலை பதினொரு மணிக் காப்பியைக் குடித்துக்கொண்டிருந்த போது, "வணக்கம்" என்று சொல்லிக் கொண்டே ஹாலுக்குள் நுழைந்தேன். அவர் பாதி காப்பியை அப்படியே வைத்துவிட்டு எழுந்தார்.

"வாங்க... வாங்க..." கை குவித்து சோபா காட்டினார். உட்கார்ந்தேன்.

"காப்பி வரவழைக்கட்டுமா...?"

"அதெல்லாம் வேண்டாம் மிஸ்டர் வெங்கடேஷ்வரன். நான் உடனடியா இப்ப வீட்டுக்குக் கிளம்ப வேண்டியிருக்கு. உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்லிட்டு போலாம்னுதான் வந்தேன்...."

"சொல்லுங்க..."

"இப்ப நான் நேரா ஹாஸ்பிடல்லயிருந்து தான் வர்றேன்..."

"நிலா எப்படியிருக்கா...?"

"நான் நிலாவைப் பார்க்கப் போகலை. டாக்டர்ஸ் வரச்சொல்லியிருந்தாங்க... போனேன்..."

"என்ன விஷயம்..?"

"நிலாவோட நிலை இப்போ கொஞ்சம் காம்ப்ளிகேட்டட். ந்யூரோசர்ஜன் ஹரிஹரேஷ் பார்த்துட்டு...."

நான் பேசப் பேச- ஹாலின் மூலையில் ஒரு பீபாயின் மேல் உட்கார்ந்திருந்த டெலிஃபோன் கூப்பிட்டது.

"ஒரு நிமிஷம்...."

வெங்கடேஷ்வரன் எழுந்து ஃபோனுக்குப் போனார்.

"ஹலோ...."

"......"

"சொல்லுங்க... நான் வெங்கடேஷ்வரன்தான் பேசறேன்...."

"......."

"ஏர் இண்டியாவா...? என்ன விஷயம்?"

"...."

"எ...ன்...ன...?"

"......"

வெங்கடேஷ்வரன் இரைந்தார். "நிசமாவா...? நிசமாவா சொல்றீங்க...? என்னோட சன் கிருஷ்ணகாந்த் உயிரோடு இருக்கானா...? துபாயிலிருந்து இப்பத்தான் தகவல் வந்ததா...?"

வெங்கடேஷ்வரன் கையில் ரிஸீவரோடு என்னை நோக்கி ஓடிவந்தார். நான் ஆனந்தத்தில் சுவாசிக்கத் திணறினேன்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை

## 18

கவியரசு கண்ணதாசன்
எழுதிய–அவரது
சுயசரிதத்தின்
முக்கிய பக்கங்கள்
உங்கள் முன் விரிகின்றன.
'எப்படி வாழ வேண்டும்
என்பதற்காக அல்ல;
எப்படி வாழக்கூடாது
என்பதற்கான
வழிகாட்டிகள்' இவை....

சிறைச்சாலையில் நிறைந்து கிடந்த வேப்பமரங்கள் ஆடி அசைந்துகொண்டிருந்தன.

காற்று இலைகளை அசைத்தவண்ணம் பறந்துகொண்டிருந்தது.

அந்தச் சத்தத்தை மட்டுமே கேட்கக் கூடிய நிலையில் சிறிய கூண்டுக்குள் அவன் அமர்ந்திருந்தான்.

மின்சார விளக்கின் ஒளி லேசாக வீசிக்கொண்டிருந்தது.

அவன் சிந்தனை நதியில் மூழ்கிக் கிடந்தான்.

பிறப்பு, வாழ்க்கை, இறப்பு ஆகிய மூன்று பகுதிகளுக்கும் போய்ப் போய்த் திரும்பினான்.

இளம் பருவத்தில் வாழ்க்கையை துறந்த ஞானியைப்போல் ஞானத் தத்துவத்தில் ஆழ்ந்துகிடந்தான்.

"ஒன்று நடந்துதான் தீருமென்றால் அதிலே கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது...?" என்ற மராட்டிய ஆசிரியன் 'காட்கரியின்' பொன்மொழி அவனுக்கு நினைவிற்கு வந்தது.

பதினெட்டு மாதங்கள்...!

அவன் உடம்பு சிலிர்த்தது...!

எப்படி அவ்வளவு காலம் சிறைக்குள்ளேயே இருப்பது...?

அவன் மனத்திற்கு ஒத்த வேலையைத் தான் அவன் செய்தானா?

பெரிய தியாகியாக வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டுதான் சிறைச்சாலைக்கு வந்தானா?

அரசியலில் உயர்ந்த பதவிகளை அடைவது அவன் இலட்சியமாக இருந்ததா...?

எதுவும் இல்லை...!

படிப்பதும் எழுதுவதுமே அவனுக்கு உற்சாகமான வேலைகள்.

இனம் விளங்காத சபலத்திற்கும் சலனத்திற்கும் இரையாகி அவன் அரசியலில் கலந்து விட்டான்.

அரசியலை வாழ்க்கைத் திட்டமாக ஆக்கிக்கொண்டவர்கள் மட்டுமே முழுநேர அரசியலில் ஈடுபட முடியும்.

ஒன்று: அரசியல் பிழைக்க வேண்டும்; அல்லது ஈடுபட்டவன் பிழைக்க வேண்டும்.

அரசியல்மூலம் பிழைப்பு நடத்த வேண்டும் என்று அவன் கொஞ்சம்கூட எண்ணியதில்லை.

அரசியலைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் தனக்குப் பங்கிருப்பதாகவும் அவன் கருதியதில்லை.

பின் ஏன் அவன் அந்தப் பெரிய காரியத்தில் ஈடுபட்டான்....?

பேச்சுக்களைக் கேட்டுப் பேசப் போனான்.

இழுப்பவர் இழுப்புக்கு வந்து, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டான்.

தான் அறிய மனமறிய தன்னை அவன் இயக்கிக் கொள்ளவில்லை.

அன்றைய அவன் நிலையை 'எடுப்பார் கைப்பிள்ளை' என்பது பொருந்தும்.

வந்தாகிவிட்டது; இனி என்ன செய்வது..?

மேலும் மேலும் பலவீனத்தையே வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் செய்யும் தியாகத்திற்கும் மரியாதை இல்லாமல் போய்விடும்.

சரியாகவோ தவறாகவோ, விரும்பியோ விரும்பாமலோ அவன் தியாகியாகிவிட்டான்.

வெளியிலே அவனுக்காக அரசியல் உயிர்கள் துடித்துக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மை.

ஆனால், விடுதலை பெற்றுப் போகும் போதாவது மரியாதை இருக்காதா?

நாலுபேருக்கு நடுவே "நானும் தியாகி தான்" என்று பேசிக்கொள்ள முடியாதா?

இது வாழ்க்கைக்குத் தேவையான அனுபவம்தானே!

அவன் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

ஆனால், கட்சியின் பிரமுகர்கள் என்று சொல்லிக்கொள்வோர் நடந்துகொண்டவிதம் அவனை அறுத்துக் கொண்டே இருந்தது.

அவனை அவர்கள் யாரும் மதிக்கவில்லை.

வாழத் தெரியாத கோமாளி ஒருவன் சிக்கலிலே வந்து மாட்டிக்கொண்டு விட்டான்; சிரிப்பதற்குச் சுவையான அம்சம் என்று அவர்கள் கருதினார்கள்.

உள்ளுக்குள்ளேயே புதைந்து கிடந்த எண்ணங்களை வெளிப்படுத்தச் சக்தியற்ற நிலையிலே அவன் மிகச் சாதாரண மனிதனாகத் தோற்றமளித்தான்.

கட்சிப் பிரமுகர்கள் மட்டும் அவனை மதிக்கவில்லை என்பதல்ல; உலகத்தில் யார் தான் அவனை மதித்தார்கள்?

தூங்குகிற நேரம் போக பாக்கி நேரங்களில் ஒரு நாளைக்கு இரண்டு மணிநேரமாவது அவன் அவமானப்படாமல் இருந்ததில்லை.



எல்லாவகைகளிலும் அவன் கேலிக்கு ஆளாக நேர்ந்ததால் அவன் பேசிய உயர்ந்த தத்துவங்கள்கூட கேலிக்கே ஆளாயின.

உலகத்தின் மதிப்பை எப்படிப் பெறுவது...? அதற்கென்று ஏதாவது திட்டம் இருக்கிறதா...?

வாழ்க்கை வசதிகளற்ற மனிதன் அந்த மதிப்பைப்பெற முடியுமா...?

பாகவதர் சுதிகெட்டுப் பாடினாலும் பக்கவாத்தியங்கள் உச்சஸ்தாயியில் இருந்தால் கெட்டசுதி வெளியே வராமல் போகிறது; மரியாதையும் ஏற்பட்டுவிடுகிறது!

உலகத்தில் மரியாதை என்பதும் அப்படித்தான்.

பத்து வாத்தியங்கள்கூடி "அவனைப் போல் உண்டா..?" என்று ஒருவனை வர்ணிக்க ஆரம்பித்து விட்டால், அவன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் ஒரளவுக்கு மரியாதை பெற்றுவிடுகிறான்.

அந்த அப்பாவி தனக்கென்று எந்தக் கோஷ்டியையும் வைத்துக் கொண்டதில்லை.

கையிலிருப்பதைக் கேட்பவருக்குக் கொடுத்துவிட்டுத் தன் வழியே போய்க்கொண்டிருந்தானே தவிர, "இந்தக் கூலிக்கு நீ கைமாறு செய்ய வேண்டும்" என்று யாரையும் கேட்டதில்லை.

அதனால் அவனுக்கு 'வள்ளல்' என்ற பட்டமும் கிடைத்ததில்லை.

அந்தப் பட்டத்தின் மறு பெயரான 'ஏமாளி' என்ற பெயர் கிடைக்கத் தவறவுமில்லை...!

இப்படி ஒருவன் வாழ்வானா...?

அவன் தகப்பன் வாழ்க்கையின் சூதுவாதுகளையெல்லாம் அவனுக்குக் கற்பிக்கவே இல்லை.

தான் எப்படி ஏமாந்தானோ அப்படியே தன் மகனும் ஏமாறட்டும் என்று விட்டு விடுவான்.

வளைந்தும் நெளிந்தும் குழைந்தும் வஞ்சித்தும் வாழ வேண்டிய உலகில் கிஞ்சித்தும் அவனுக்கு அந்தப் பழக்கமில்லை.

இது எங்கே அவனைக் கொண்டு போகுமோ...?

(சரிதம் தொடரும்)

www.padippakam.com

# காதல் கல்யாணம்

"என்னை லவ் பண்றியா நீ...?" ஒரு மாலைப் பொழுதில் கடற்கரையின் ஈரமணலில் விஜயா, நான் அவளுக்கருகே உட்கார்ந்திருந்தபோது என்னிடம் வெட்டி விடுகின்ற மாதிரிக் கேட்டாள்.

விஜயா, இருபது வயது, வளைந்த புருவம், கனிந்த பார்வை, கூர்மையான நாசி, வாழை இலை மாதிரி வயிறு, சின்ன உதடு, வெள்ளைப் பல் வரிசை, நீண்ட கார் கூந்தல், சுத்தமாய் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுகின்ற இனிமையான பெண். நிறைய வசதி... யாராவது காதலிக்க மறுப்பார்களா...?

நான் காதலிப்பதாய் சத்யப் பிரமாணம் செய்த மறு நிமிடமே...



"ஹய்....யோ..." என்று கத்தினாள்.

"ஏய்...!, எதுக்கு இதுக்கு இவ்வளவு சத்தம்...?"

"பின்ன, லவ் பண்றது சாதாரண விஷயமா...? சந்தோசமில்லையா...? ஒரு பெண் உன்னைப் பார்த்து ஐ லவ் யூ சொன்னால் அழுவாயா நீ...? அட முட்டாளே! இப்ப எனக்கு எப்படித் தெரியுமா இருக்கு...? உலகத்தையே ஜெயிச்ச மாதிரி இருக்கு. நான்தான் ராணி மாதிரி படறது எனக்கு..."

"அய்யோ... அம்மாவுக்கு கற்பனையைப் பாரு...." என்று செல்லமாய் கன்னத்தைத் திருகினேன்.

இதன் பிறகு,

யாரோ ஒரு சித்தி திருகோணமலையில் இருப்பதாகவும், அவரைச் சந்திக்கப் போவதாகவும் சொல்லிவிட்டு சுத்தமாய் இருபத்தேழு நாட்கள் காணாமல் போனாள். அந்த இருபத்தேழு நாட்களிலும் தினம் ஒரு கடிதம் வந்தவண்ணமாகவே இருந்தது- அதில், இப்படி ஒன்று:

'ரமேஷ், நீங்கள் எவ்வளவு அழகு என்று உங்களுக்குத் தெரியுமா? உடனே கண்ணாடியின் முன் நின்றுவிடாதீர்கள். கண்ணாடி வெறும் உருவப் பிம்பத்தின் அழகை மட்டும்தான் காண்பிக்கும். என்னைப் பாருங்கள், உங்கள் மனசின் அழகு கூடத்தெரியும். உங்கள் நேர் வகிடும்; பரிசுத்தமான தமிழ் பேச்சின் இனிமையையும், யப்பா...! ஒரு வருடம் முழுவதும் ஒரு நாளாகக் கூடாதா...?

இங்கு ஹோலில் குறுக்கும், நெடுக்குமாக அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன். 'என் அன்பு காதலா, என்னாளும் கூடலா...' என்று சினிமா பாட்டு பாடிக் கொண்டிருக்கிறேன். அப்போதும் நீங்களாய், நீங்களே எப்போதுமாய், ஒரு மயக்கத்தில் கிடக்கிறேன். அப்புறம், வரும்போது, ஒரு கதைப் புத்தகம் கொடுத்தீர்களல்லவா...? இன்னும் அதில் முதல் பக்கத்திலிருந்து அடுத்த பக்கம்கூட நகரவில்லை. ஏன் தெரியுமா....? முதல் பக்கத்தில் உங்கள் கைவிரல் பட்டது எந்த இடமாய் இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.'

இந்தக் கடிதம் படித்து முடித்தபோது எனக்குச் சிரிப்புதான் வந்தது. அதே சமயம், இந்தப் பெண்ணிற்கு என்மீது இவ்வளவு ஆசையா என்று வியக்க வைத்தது. வியப்பு கவலை கொடுத்தது. அது இந்தப் பெண் எனக்கே வேண்டுமென்கிற கவலை- இதனால் பத்துநாள் பட்டினி கிடந்தவன் போல் முகமும், கலைந்த கேசமும், குறுந்தாடியும், குழிவிழுந்த கண்ணுமாய் மாறினேன்.

திடீரென்று, ஒரு நாள்.

சித்தி வீட்டில் இருந்து வந்த விஜயா, என்னைப் பார்க்க வந்தாள்,. என் கோலம் பார்த்துச் சீற ஆரம்பித்தாள்.

"ஏன் ரமேஷ் இப்படியிருக்கிறே? எதுக்கு உன்னையே நீ வருத்திக்கிறே? இருபது நாள் நான் இல்லங்கிறதுக்காக எதுக்கு தாடி வேசம் போடறே? ஏன் தாடின்னு கேக்கறவங்ககிட்ட ஊரில என் ஆளு இல்லன்னு சோகமா ஒரு பதில் சொல்றதுக்கா?

முட்டாள்தனமா இருக்கிறது எந்தப் பொண்ணுக்கும் புடிக்காது ரமேஷ். அதே சமயம் படு புத்திசாலியா இருந்தாலும், இவன் நம்மள ஏமாத்திடுவானோ என்ற பயம் வந்துடும். அதனால வெகுளியா இயல்பா இரு!" என்று பட்டவர்த்தனமாய் பேசி என் முகத்தை சவரம் செய்ய வைத்தவள், பின் என்னை உடைமாற்றி, "வா ஷொப்பிங் போகலாம்!" என்று அழைத்துக் கொண்டு போனாள்.

எனக்கு ஏதோமொடர்ன் ஆர்ட் வாங்கி கொடுத்தவள்,

"எனக்கு ஏதேனும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்குத் தோணலயா ரமேஷ்...?" என்று மெல்ல பேச்சிழுத்தாள்.

நான் "அய்யோ" என்று தலையிலடித்துக் கொண்டே, "ஸொரி... வெரி ஸொரி... உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டேன்.

"கொலுசு..." பட்டென்று பதில் சொன்னாள்.

"ஏன் தாலி கேக்க மாட்டியா" குறும்பாக கேட்டேன்.

"தாலி வேணாம் ரமேஷ். என்னைப் பொறுத்தவரை தாலி ஒரு அடையாளச் சின்னம்! உனக்கு நான் பொண்டாட்டிங்கிறதை ஊருக்குக் காட்டறதுக்கு என் கழுத்துல கட்டற மஞ்சள் கயிறு அது. நாம ஊருக்காக வாழ வேணாம். நமக்காக வாழ்வோம்... மனசுக்குள்ள... எப்பவோ நீ தாலி கட்டியாச்சி... தாலிதான் இல்லியேன்னு என்னை விட்டுட்டு போன... உன்னக் கொன்னுடுவேன்.."

மெதுவாய், அதே சமயம் அழுத்தமாய் அவள் சொன்னதில் உறுதி தெரிந்தது. ●

**ஆர்.நிலா**

# தீனை

நிலவு அழகு. நிலவு நீந்தும் வானம் அழகு. புற்களின் நுனியில் பனித்துளி அழகு. புளுதியில் விளையாடும் குழந்தையின் சிரிப்பு அழகு. இத்தனை அழகுகளையும் இரசிக்கத்தான் எங்களால் முடியவில்லை. நின்று பார்க்க நேரமில்லை.

எங்களைச் சுற்றி பலவித அழுத்தங்கள்...

ஒரு பக்கம் மாங்குளம் முனை... மறு பக்கம் பரந்தன்முனை... இப்படி இரு முனைகளாலும் வளைக்க ஆயத்தமாய் நிற்கின்ற இராணுவ முனைப்பு... பொருளாதாரத் தடையால் பட்டினி நிலையை எதிர்நோக்கியிருக்கும் வன்னி மக்களின் பரிதாப நிலமை...

வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்து எத்தனை நாட்களாகிவிட்டன..? எந்நேரமும் நெஞ்சுக்குள் பாறாங்கல்லாய் எதுவோ அழுத்தும் உணர்வு... எங்கள் அலுவலக வாசலில் நிவாரணம் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்கின்ற அந்தப் பசித்த முகங்கள்தான் எந்நேரமும் நினைவில் நின்று வதைத்தன.

நான் நீண்ட பெருமூச்சுடன் அலுவலகம் புறப்பட ஆயத்தமானேன்.

வழக்கமாய் எட்டு மணியாகும்போதே வாணியை விரட்டுவேன், "நேரம் போயிட்டு... கெதியாய் சாப்பாட்டைக் கொண்டு வா..." அவள் தருவதை அவசரமாய் அள்ளிச் சாப்பிட்டுக் கொண்டே, "அந்த பேப்பருக்குள்ள கட்டிவைச்சதுகளை எடுத்து வை. கந்தோருக்குக் கொண்டுபோக வேணும்." என்று அவசரப்படுத்துவேன். அவள் ஓடி ஓடி ஒவ்வொன்றையும் செய்வாள்.

இப்போது அந்த அவசரம் இல்லை. நிதானம். ஆறுதலாய் எழுந்து அவசரமில்லாமல் வெளிக்கிட்டு, நிதானமாய் சாப்பிட்டு, கால் வீசி அலுவலகம் போய் வரலாம்.

ஒரு மாதமாகிறது.... கச்சேரி அலுவல்களை செய்யவிடாமல் சனங்கள் மறியல் செய்யத் தொடங்கி...

பசிக்கின்ற வயிறோடும் கொதிக்கின்ற நெஞ்சோடும் வெய்யிலுக்குள் நாள் முழுவதும் நின்று கத்திக் குளறிக் கொண்டிருக்கும் சனங்களைப் பார்த்தாலே பரிதாபமாக இருக்கிறது.

"நிவாரணத்தை வெட்டாதே- வயிற்றில் நெருப்பைக் கொட்டாதே!" என்றும் "உணவைத் தடுக்காதே உயிரைக் குடிக்காதே!" என்றும் அந்த சனங்கள் கத்திக் கொண்டிருப்பது கனவிலும் கேட்கிறது. மனதுக்குள் சொல்லத் தெரியாத ஒரு பதைபதைப்பு மையம் கொண்டிருக்கிறது.

நான் உடை அணிந்து தலைவாரிக் கொண்டதும் வாணி தட்டை என் கைகளில் தந்தாள். மண் குந்தில் பேப்பர் விரித்து அதில் அமர்ந்து சாப்பிட்டேன்.

"மண்குந்தில இருக்கிறீங்களப்பா. ஜீன்ஸ் ஊத்தையாய்ப் போகப்போகுது. இப்ப சவுக்காரமும் தட்டுப்பாடு."

அவளுக்கு அந்தக் கவலை...

எழுந்து நின்ற நிலையில் சாப்பிட்டுவிட்டு கச்சேரிக்குப் புறப்பட்டேன்.

கச்சேரி என்றதும் கல்கட்டடம் என்று நினைத்துவிடக்கூடாது. இடப்பெயர்வுக்குப் பின்னர் நீளம் நீளமாய் போடப்பட்ட கொட்டில்களில் இயங்கிக் கொண்டிருக்கும் நிர்வாகம். அதுகூட இந்த சனங்களின் உண்ணாவிரதப் போராட்டத்தால் ஒரு மாதமாய் இயங்காமல் இருக்கிறது.

நான் கச்சேரி வாசலில் வரும்போதே பார்த்தேன். சனங்கள் ஏற்கனவே வந்து நிறைந்து போயிருந்தார்கள். சக அலுவலக ஊழியர்கள், அதிகாரிகள் தொடக்கம் சிற்றூழியர் வரை வெளியே...

"என்னப்பா... இந்த ஆர்ப்பாட்டம் எப்பதான் முடியுமோ... இந்த மாதச் சம்பளம் எங்களுக்கு இல்லைப்போல கிடக்கு..." ஒருவர் அலுத்துக் கொண்டார்.

எமக்கு ஒரு மாதச் சம்பளம் வராமல் விட்டாலே நெஞ்சு 'திகீர்' என்கிறது. ஒரு வருமானமோ தொழிலோ இல்லாதிருக்கும் இவர்கள் நிவாரண வெட்டை எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள்...?


வெய்யில் ஏற ஏற அந்த மக்களின் முகங்கள் வியர்வையில் மினுமினுத்தன. நெஞ்சின் ஆழத்திலிருந்து சுயமாய் வெளிப்படும் அவர்களின் வேண்டுகோள்கள்... பசி என்ற கோரப்பிடியிலிருந்து தம்மை விடுவிக்கக் கோரும் கெஞ்சல்கள்... இயலாமையில் ஏற்படுகின்ற ஆவேசங்கள்... இத்தனை பேரின் முகங்களிலும் வரிவரியாய் பதிந்து போயிருந்த சுருக்கங்கள்...

ஒவ்வொரு வரிக்கும் ஒவ்வொரு கதை இருக்கக்கூடும்.. அந்தச் சனங்களின் கதறல்களைக் கேட்கும்போது நெஞ்சின் ஆழம்வரை நடுக்கம் ஏற்பட்டது.

> 'வெய்யில் ஏற ஏற அந்த மக்களின் முகங்கள் வியர்வையில் மினு மினுத்தன.'

அநேகமானவர்கள் பெண்கள். பலதரப்பட்ட வயதினர். அதிலும் முதியவர்கள்.. முன்னுக்கு நின்று கத்திக்கொண்டிருக்கும் கிழவிக்கு எழுபது வயதுக்கு மேல் இருக்கக் கூடும். எங்கள் ஆட்களிடம் அதிகம் மன்றாடுவது அந்தக் கிழவிதான்.

"நாங்கள் என்ன ஆச்சி செய்யிறது? அரசாங்கம்தான் நிவாரணத்தை நிற்பாட்டினது."



**வெண்ணிலா சூரியகுமாரன்**
**(வன்னி)**

"அவையிட்ட எங்களுக்காக கதைச்சு நீங்கள் வாங்கித் தாறதுதான்!"

நறுக்கென்று கிழவி சொன்னதைக் கேட்டு நாங்கள் அசந்து போய் நின்றதென்னவோ உண்மைதான்.

கிழவி கையேந்திக் கெஞ்சிய கோலம்...

"நிவாரணம் வாறபோதே அரை வயிறுப்பட்டினி. இப்ப முழுப்பட்டினி. ராசா வயிறு கொதிக்குதணை. எத்தினை நாளைக்குத்தான் சாப்பிடாம இருக்க ஏலும்?"

குரல் இறங்கி வர கண்களில் 'பளிச்' சென்று திரளும் கண்ணீர். நாங்கள் எப்பிடிக் கதைச்சாலும் அவையள் மனம் வைக்காட்டி எதுவும் நடக்கப்போவதில்லை என்ற விஷயத்தை இந்தப் பாமரக் கிழவிக்கு எப்படி விளங்கப்படுத்த முடியும்...

'பகல் முழுக்க இந்த மாதிரி வெய்யிலுக்குள் நின்று கத்திவிட்டு, பின்னேரம் வீடு போய் பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டுத்தான் இவர்கள் படுத்துக் கொள்வார்களோ...?' என்று நினைக்கையில் மனம் தாங்க முடியாமல் நொருங்குகிறது.

இப்போது நாலைந்து நாட்களாய் அந்தக் கிழவியின் முகத்தில் சோர்வு அதிகம் தெரிந்தது.

'இந்த விதமாய் போராடினால் அரசு இறங்கி வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்து விடுமோ?' என்ற கலக்கம்... ஏதாவது சாதகமான நிகழ்வு ஏற்பட்டு விடாதா என்ற தவிப்பு அந்த முக வரிகளில்...

இந்தப் போராட்டத்திற்கு என்ன முடிவு ஏற்படப் போகிறதோ என்று மனதுக்குள் திகிலாக இருக்கிறது.

எங்களாலும் கூட ஒழுங்காய் சாப்பிட முடியவில்லை. நிம்மதியாய் நித்திரைகொள்ள முடியவில்லை. ஏனோ மனமெல்லாம் வெறுமையாய்போன உணர்வு... பசித்த முகங்களின் ஞாபகம்...

மறுநாள் நான் கச்சேரிக்குப்போனபோது சனங்களின் கூட்டம் அதிகமாய் அலைமோதியது. ஆவேசமும் கூக்குரல்களும் அதிகரித்திருந்தன. நேற்றையப் பொழுது போலவே இன்னொரு பொழுது. சனத்தின் முன்னணியில் நிற்கின்ற கிழவியைக் காணவில்லை.

"எங்க அந்த ஆச்சியைக் காணேலை...?"

"இராத்திரி கிழவி செத்துப் போச்சுதாம்..."


'குப்' பென்று நெஞ்சுக்குள் அடைத்த உணர்வு...

'இன்று அந்தக் கிழவி...

நாளை...?'

# எதிர்பாராத பயணம்

"பயங்கரவாதம் இந்த நாட்டில் இப்போதைக்கு ஓயாது. நீர் படித்துவிட்டு தொழில் கிடைக்குமென எவ்வளவு காலத்துக்குத்தான் காத்து இருக்கப்போகிறீர்? கனடா போக விருப்பமெண்டால் சொல்லும் தம்பி; ஒழுங்கு செய்து தாறன். நல்லதொரு சம்பந்தம் வந்திருக்கு. பெட்ட நல்ல வடிவு. நல்ல அந்தஸ்தில் உள்ள குடும்பம். படிப்பும் பரவாயில்ல. சோதனை எழுதிற்று யூனிவசிற்றி கிடைக்குமெண்டு எதிர்பார்க்கின்றாள். அண்ணன் கனடாவுக்குப் போய் பத்து வருசத்துக்கு மேல, தங்கச்சிய சீரும் சிறப்புடன் வைத்திருக்க ஆசைப்படுகிறார். இங்க நடக்கிற பிரச்சனைகளத் தெரியும்தானே. அதனால கலியாணத்தை முடித்துக் கொடுத்திட்டு மாப்பிள்ளைய முதலில் கனடாவுக்கு எடுக்கவுள்ளார். தங்கச்சிட கலியாணத்துக்குப் பிறகு தானும் விரும்பி இருக்கிற பெட்டைய ரெஜிஸ்டர் பண்ணப் போகிறார் போல இருக்கு. நல்லதொரு சம்பந்தம் தம்பி. விருப்பமெண்டால் யோசித்து முடிவைச் சொல்லும்!" என்றார் தரகர் சங்கரப்பிள்ளை.



திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டது என்பார்கள். சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதோ என்னவோ, இரு வீட்டாரின் சம்மதத்துடன் ஊரறிய பிரதாப்புக்கும் கீத்தாவுக்கும் திருமணம் இனிதாக நடக்க ஏற்பாடாகியது. கொழும்பில் நடாத்தினால் நல்லதென முடிவாகியதால் இளவாலையில் உள்ள தனது குடும்பத்தை மொனரா விமானத்தில், பல சிரமத்தின் மத்தியில் வரவழைத்தான் பிரதாப். கீத்தாவின் குடும்பம் இரண்டாம் ஈழப்போர் மூண்ட காலத்தில் இருந்தே கொழும்பில் வசித்து வந்ததால் அவர்களுக்கு பயணச் சிரமம் ஏற்படவில்லை.

கீத்தாவுக்கு கொழும்பில் தெரியாத வீதிகளில்லை எனச் சொல்லுமளவுக்கு தலைநகரைக் கரைத்துக் குடித்திருந்தாள். சிங்களமும் நன்றாகக் கதைக்கப் பழகியிருந்தாள். இதனால் திருமணத்துக்கு வந்த உறவினர்களை அழைத்துச் சென்று கொழும்பைச் சுற்றிக் காண்பித்தாள். ஆரம்பத்தில் கொழும்பென்றால் படு பயங்கரம். திடீர்க் கைதுகள் இடம்பெறுமென்று வெளியே செல்லப் பயப்பட்ட பிரதாப்பின் சகோதரிகளை தெளிவுபடுத்தி வீதி வீதியாக அழைத்துச் சென்றாள் கீத்தா. சென்ற வழிகளில் எவ்வித பிரச்சனைகளோ பாதுகாப்புக் கெடுபிடிகளோ இருக்கவில்லை. கொழும்பு இதுதானோவென மூக்கில் விரல் வைத்தாள் நண்பி ஒருத்தி. பாதுகாப்பு பந்தோபஸ்தின் பலவீனங்கள் இதுதானென்றோ அல்லது படையினர் கண்களுக்கு மண் தூவக்கூடிய பகுதிகள் இதுவென்றோ இவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

இரண்டு வாரத்தில் உறவினர்களின் பிரியாவிடையுடன் கனடா பயணமானான் பிரதாப். அவனது நினைவலைகள் அனைத்தும் மனைவி கீத்தாவைப் பற்றியதாகவே இருந்தது. இந்தப் பிரிவு நிரந்தரப் பிரிவாகிவிடக்கூடாதென அடிக்கடி கடவுளைப் பிரார்த்தித்த வண்ணமிருந்தான். இருந்தும் கொழும்பு லொட்ஜ்களில் இளம் பெண்கள் படும்பாட்டை கண்ணால் கண்டு கொண்டமையினால் சற்றுச் சலிப்பும் ஏற்படலாயிற்று. என்றாலும் மனைவியின் ஞாபகம் தோன்றும் போதெல்லாம் அது பறந்துவிடும்.

"கொழும்பு லொட்ஜ்களில் தங்கியிருப்பவர்களில் அனேகமானோர் வெளிநாடு செல்ல வந்தவர்கள் என்றே கூறிக்கொள்கின்றார்கள். இளம் பெண்களே இவ்வாறு அதிகம் காணப்படுகின்றனர். காலையில் அலங்கரித்து தோளில் ஹாண்ட் பேக்குடன் புறப்பட்டால் மாலையில்தான் திரும்பி வருவார்கள். எங்கு செல்கின்றார்களென்பது புரியாமல் உள்ளது. கேட்டால் பேங்கிற்கு காசெடுக்கப் போனதென்கின்றார்கள். சிலரைக் கடற்கரையிலும் சிலரை படமாளிகையிலும், சிலரை பஸ் தரிப்பிடத்திலும் காணக் கூடியதாகவுள்ளது. "கலியாணம் முடித்துவிட்டு புருசன்மார் வெளிநாட்டுக்குப் போய்விட்டால் அவளவையும் என்னதான் செய்யுறது? வெளிநாடு போகலாம் போகலாமெண்டு எவ்வளவு காலத்துக்குத்தான் எதிர்பார்க்கிறது? அவளவைக்கும் பொழுது போகத்தானே வேணும்?" கொமினிக்கேசன் வாசலில் நின்ற புறோக்கர் சங்கரப்பிள்ளை கூறியது பிரதாப்பிற்கு ஒலித்தது.

'எப்பாடுபட்டாவது சீக்கிரமாக கீத்தாவை இங்கு எடுத்துவிட வேண்டும். கொழும்பு நாகரிகத்தில் முற்றிச் சீரழியுது. எம்மையும் மற்றவர்கள் பிழையாகக் கூறக் கூடாது, உழைக்கவேண்டுமெனும் நோக்கில் கனடாவில் இயந்திரமாய் இயங்கினான் பிரதாப். மனைவி கேட்கும் அனைத்தையும் உடனுக்குடன் அனுப்பி வைப்பான். தனக்குச் செலவுக்கென்று எதையும் எடுத்துக்கொள்ளாமல் மனைவியை கனடாவுக்கு உடன் எடுக்க வேண்டுமென்பதற்காக கீத்தாவின் கொழும்பு வங்கிக் கணக்கிற்கே பணத்தை அனுப்பி வைப்பான் பிரதாப். அடுத்தவாரம் மனைவியிடம் இருந்துவரும் பதிலில் 'நீங்கள் அனுப்பிய பணம் முடிந்துவிட்டது. விரைவில் காசு அனுப்பி வைக்கவும்' என்றிருக்கும்.

மனைவியைக் கனடாவுக்கு வரவழைக்க ஏஜென்ஸியிடம் முற்பணம் செலுத்தியதால் விஸாவும் கிடைத்துவிட்டது. சந்தோசத்தில் மனைவிக்கு தகவலை அனுப்பிவிட்டு, அன்று வந்திருந்த தபாலைப் பிரித்தான் பிரதாப். அது கனடா ஏஜென்ஸியிடமிருந்து வந்த அவசரத் தபால்.

"உங்களது மனைவியை கனடாவுக்கு வரவழைக்க முடியாது. அவரது இரத்தத்தில் எச்.ஐ.வி. வைரசு இருப்பதாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. மன்னிக்கவும்."

சிந்தனை ஸ்தம்பிதமான நிலையில் மன நோயாளர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பிரதாப் சிகிச்சை பெற்று வருகின்றான். ●

**வீரமுனை வானவர்கோன்**

www.padippakam.com

# குற்றம் புரிந்தவன்



மன்னன்
மார்த்தாண்டனால்
கண் மூட முடியவில்லை!

அயல் நாட்டின்
நடமாடும் சிற்பம்!
பக்கத்து நாட்டின்
பருவச் சிலை!

சிற்றிடை அசைய
சில்லென்ற இதழில்
முறுவல் உதிர
குற்றிடும் கொம்பாய்
இரு எழில் உயர
வெற்றி வில்லாக
புருவம் தெரிய
குற்றிடப்பாயும்
இரு விழி அசைய
வந்தவள் அவளே!

கண்டது முதல்
உண்டது பாதிதான்!

கண்டதன் பின்னர்
உறக்கமும் பாதிதான்!

பூக்களைப் பார்த்தால்
அவள்
புன்னகைதான்
ஞாபகம் வருகிறது!

பாயும் புலியைக்
கண்டால்
அவள் பார்வைதான்
ஞாபகம் வருகிறது!

துள்ளும் குதிரையை
கண்டால்
அவள் இளமைதான்
ஞாபகம் வருகிறது!

அழகுத் தேரை
கண்டால்
அவள் தேகம்தான்
ஞாபகம் வருகிறது!

வில்லை எடுத்து
அம்பை தொடுத்தால்
அவள்
புருவமும், விழிகளும்
நினைவில் வருகிறது!

வாளை எடுத்து
வீசிப் பார்த்தால்
அவள் பார்வை
வீச்சு
நினைவில் எழுகிறது!

கேடயம் எடுத்து
மார்பில் அணிந்தால்
அவள் மார்பை மூடிய
மேலாடை
ஞாபகம் வருகிறது!

மார்த்தாண்டன்
மனம் பேதலித்து
கிடந்தான்.

"மகளைத்தர
மனம் உண்டோ?"
தூது விட்டான்!

எறிந்த பந்தாய்
திரும்பிய தூதன்
'அயலக மன்னன்'
விரும்பவில்லை என்றான்!

"குரங்கின் கையில்
பூமாலையாக
என் மகளைக்
கொடுக்க சம்மதமில்லை!"

"கொடுக்காவிட்டால்
நாமாக
எடுத்துக் கொள்வோம்!"

மார்த்தாண்டன்
கர்ஜித்துப் பார்த்தான்!

"கர்ஜனைகளுக்கு
பணிபவர்கள் நாங்களல்ல!

வீழ்ந்தாலும்
கௌரவப் பிரஜைகளாக
வீழ்வோமே தவிர
மானமிழந்து
வாழ விரும்பமாட்டோம்!"

அயலக மன்னன்
அசையாத மலையாக
விடையளித்துவிட்டான்!

காமம் கண்களை
மறைக்க,
ஆணவம் நெஞ்சினில்
உதிக்க.
மார்த்தாண்டன்
உத்தரவிட்டான்:
"தொடு போரை!"

இரத்தம் கொப்பளிக்க
படுகளம் கொதித்தது!

இரத்தமும் வியர்வையும்
கலங்கிச் சேறான
களத்து மேட்டில்
மனித உடல்கள்
வெட்டுண்டு வீழ்ந்தன!

அசைந்து வந்த
யானைகள்
அம்புகள் பட்டு
பிளிறி வீழ்ந்தன!

தேர்ப் படை
யானைப் படை
பறக்கும்
குதிரைப் படை
காலாற்படை
நால்வகைப் படையும்
மன்னனின் ஆசைக்காக
மண்ணில் மடிந்தன.

"எத்தனைபேர்
அழிந்தாலும்
என் சித்திரவிழியாள்
வசமாகும்வரை
விஷமாக உயரட்டும்
யுத்தம்!"
மார்த்தாண்டன்
கர்ஜித்தான்!

போர் தொடர்ந்தது
புழுதியெல்லாம்
குருதியில் நனைந்தது!

நுரைக்கும் குருதியும்
ஆசைக்கு
திரை போடவில்லை!

"தலைகளை
வெட்டிக் கொண்டே இருங்கள்
அவள் தலைக்கறுப்பு
எனக்கு தெரிகிறவரைக்கும்!"
கட்டளையிட்டான்.

நெடுநாள் போரில்
ஒரு நாள் வீழ்ந்தது
எதிரிக் கோட்டை!

"ஆஹா ஆஹா
வெற்றி எமதே!

வீழ்ந்தது கோட்டை
ஏற்றுக கொடியை!

எம்மில் மாண்டவரை
எடுத்துப் புதையுங்கள்
எதிரே மாண்டவர்கள்
எண்ணிக்கை அறியுங்கள்!

நம்மில் நூறு
அவர்களில் முந்நூறு
மூன்றால் பெருக்கி
முரசு அறைக!"

மன்னன் முழங்கினான்
மனதுக்கினியாளை
விழிகள் எறிந்து
வீதிகளில் தேடினான்!

எதிரே தோன்றினாள்!
எழிலரசியாக அல்ல
பழிதீர்க்கும் அரசியாக,
வாளுடன் தோன்றினாள்!

"வா மன்னா!
பார் மன்னா!
உன் வெற்றி
வெறியால்
என் நாடு நலிந்தது!

நீ கொடி ஏற்றி
குதூகலிக்கிறாய்
என் குடி
அழிந்து கிடக்கிறது!

நீ நகர்வலம் வருகிறாய்
என் நகர்
எரிந்து கிடக்கிறது!

நீ எக்காளமிடுகிறாய்
என் மக்கள்
துக்கம் கொண்டாடுகின்றனர்!

எரிந்த தேசம்
ஒரு நாள் எழும்!

வீழ்ந்த பிணங்கள்
விதையாக மாற
வருகின்ற சந்ததி
வீரம் கொள்ளும்!

உன்னை
கட்டிலில் மயக்கி
ஒழித்திருக்க முடியும்!

கட்டியணைத்தபடி
விஷ முத்தம் தந்து
வேரோடு அறுத்திருக்கலாம்!

இலக்கிய நயம்

செய்யவில்லை நான்!
வாழ்ந்து பார் மன்னா!
உன் கண்முன்பாக
எம் சந்ததி எழும்!
இன்று விதைத்ததை
நீ அறுத்தாக வேண்டும்!
அதற்காக வாழ்!"

பிரமித்து நின்றான்
மன்னன்
வெற்றிக் களிப்பு
காற்றோடு பறந்தது!

செய்த தவறு
நெஞ்சில் உறுத்தியது!

"குற்றத்தை நீ
தடுக்க தவறினாய்!
நெருப்பின் முன்னால்
நிற்கும்
வைக்கோல் போரானாய்!

இனி வருந்தி
என்ன பயன்?
நிலையல்ல மன்னா
நீறாகும் உன் பெருமை!"

"வருமுன்னர் காவதான் வாழ்க்கை
—எரி முன்னர்
வைத்தூறு போலக் கெடும்"
அதிகாரம்: 44- குறள்: 435

தருவது ரசிகன்

## ஸ்போர்ட்ஸ்

### வீரர்களின் தரநிலை

உலக கிரிக்கெட் வீரர்களின் பெப்ஸி தரப்பட்டியல் இம்மாதம் 1ம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. இதில் துடுப்பாட்டத்தில் இலங்கை வீரர் மார்வன் அத்தபத்து 9538 புள்ளிகள் எடுத்து முதலிடத்தில் இருக்கிறார். இவரை அடுத்து 9003 புள்ளிகள் எடுத்து 2ம் இடத்தில் இருக்கிறார் இந்தியாவின் அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சக்லெய்ன் முஷ்டாக் 8869 புள்ளிகள் பெற்று முதலாவது இடத்தில் இருக்கிறார். இரண்டாவது இடத்தில் 8416 புள்ளிகளுடன் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் உள்ளார். 3வது இடத்தில் இங்கிலாந்தின் டரன் கொஃப்பும், 4ம், 5ம் இடங்களில் இலங்கை வீரர்களான ஜெயசூரியாவும், முரளீதரனும் உள்ளனர்.

பெப்ஸி தரப்பட்டியலில் துடுப்பாட்டத்தில் முதல் 5 இடங்களைப் பெற்ற வீரர்கள், மற்றும் பெற்ற புள்ளிகள் போன்ற விபரங்கள் இதோ:

| வீரர் | புள்ளிகள் |
|---|---|
| 1. மார்வன் அத்தபத்து(இலங்கை) | 9538 |
| 2. சச்சின் டெண்டுல்கர்(இந்தியா) | 9003 |
| 3. அரவிந்த டி சில்வா(இலங்கை) | 7488 |
| 4. கிரஹாம் ஹிக்(இங்கிலாந்து) | 6628 |
| 5. நிக் நைட்(இங்கிலாந்து) | 6272 |

### மும்பாயில் கோப்பை

இம்மாதம் 24ம் திகதி பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் வில்ஸ் மினி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகிறது. 9 நாடுகள் பங்குபற்றும் இப்போட்டிக்கான வெற்றிக்கோப்பை இந்தியாவில் உள்ள மும்பை நகரில் தயாராகிறது.

இந்தியாவின் ஜெய்ப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த அருண் பப்புவால் இந்த வெற்றிக் கோப்பையைத் தயாரிக்கிறார். அருண் பப்புவால் 1987ல் இந்தியாவில் நடந்த ரிலையன்ஸ் உலகக் கோப்பைப் போட்டிக்கான கோப்பையை ஏற்கனவே தயாரித்தவர்.

நொக்-அவுட் முறையில் நடைபெறும் இப்போட்டிகள் இம்மாதம் 24ம் திகதி தொடக்கம் நவம்பர் 9ம் திகதிவரை நடைபெறுகின்றன. தொடக்கப் போட்டியில் நியூஸிலாந்து அணி, ஸிம்பாப்வே அணியை எதிர்த்து விளையாடுகிறது.

### 39 ஆண்டுகளின் பின்னர்

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள அவுஸ்திரேலிய அணி முதல் டெஸ்டில் வென்றதன் மூலம் 39 ஆண்டுகளுக்குப் பின் பாகிஸ்தான் மண்ணில் சரித்திர வெற்றியைப் பெற்றுள்ளது. இப்போட்டியின்போது ஓர் உலக சாதனை ஒன்றும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் கீப்பர் இயன் ஹீலி, டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய விக்கெட் கீப்பர் என்ற புதிய சாதனையைப் படைத்துள்ளார். ராவல்பிண்டியில் நடந்த முதல் டெஸ்ட்டில், முதல் இன்னிங்ஸில், பாகிஸ்தான் வீரர்களான அமீர் சொஹைல், முகமட் வாசிம் ஆகியோரை கேட்ச் பிடித்து அவுட்டாக்கியதன் மூலம் 355 என்ற இலக்கை எட்டினார். இதுதான் உலக சாதனை. இந்தச் சாதனையை அவுஸ்திரேலிய முன்னாள் விக்கெட்கீப்பர் ரொட்னி மார்ஷ் ஏற்படுத்தியிருக்கிறார்.

முதல் இன்னிங்ஸில் சாதனையைச் சமப்படுத்திய ஹீலி, இரண்டாவது இன்னிங்ஸில் வாஸிம் அக்ரமின் கேட்சைப் பிடித்ததன் மூலம் 356 விக்கெட்டுக்களை எடுத்து உலக சாதனை புரிந்தார்.

### டை-பிரேக்கர்

உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி தோல்வியின்றி இறுதிவரை சமநிலையில் ஆடும் அணிகளின், வெற்றிதோல்வியை நிர்ணயிக்க டை-பிரேக்கர் முறை பின்பற்றப்படுவதை அவதானித்திருப்பீர்கள். இதேபோல் கிரிக்கெட் விளையாட்டிலும் டை-பிரேக்கர் முறை புகுத்தப்பட்டுள்ளது.

டாக்காவில் நடைபெறவுள்ள வில்ஸ் மினி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியிலேயே இந்த டை-பிரேக்கர் முறை முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது. மழை அல்லது போதிய வெளிச்சமின்மை காரணமாக 25 ஓவர்களுக்கும் குறைவாக ஒரு ஆட்டம் தடைப்பட்டால் டை-பிரேக்கர்முறை செயற்படுத்தப்படும்.

இதன்படி, ஒவ்வொரு அணியில் இருந்து 5 பந்துவீச்சாளர்கள், ஆள் இல்லாத விக்கெட்டை நோக்கி தலா ஒரு முறை பந்து வீசுவார்கள். இதில் அதிகமுறை விக்கெட்டை வீழ்த்தும் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். இதிலும் சமநிலை நீடித்தால் மறுபடியும் பந்துவீச்சு தொடரும்.

"டை-பிரேக்கரின் போது 3 ஸ்டம்புகளும் நிறுத்தப்படுமா அல்லது ஒரு ஸ்டம்ப் மட்டும் நிறுத்தப்படுமா என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை." என்று மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்த, சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் தலைவர் ஜக்மோகன் டால்மியா கூறியுள்ளார்.

## சிந்தியா பதில்கள்

*** விவேகமான கதை ஒன்று கூறுங்கள்?**

பி. ஜெயராகினி, கொழும்பு-06.

மற்றதெல்லாம் விவேகமற்ற கதை என்றா கூறுகிறீர்கள்?!

புகழ்பெற்ற இந்திய விண்வெளி விஞ்ஞானி ஜெயந்த் நர்லிகர். அவர் மூன்று வயதுச் சிறுவனாக இருந்தபோது, அவருடைய ஏழு வயதுச் சகோதரிக்கு கணக்குச் சொல்லித்தர ஒரு ஆசிரியர் வருவார்.

ஜெயந்த் நர்லிகருடைய அக்காவிடம், இரண்டு இலக்க எண் ஒன்றைச் சொல்லுமாறு கேட்க அக்கா 76 என்று சொல்ல, ஆசிரியர் விளையாட்டாக 67 என்று எழுதினார். மீண்டும் அக்கா 98 என்று கூற, ஆசிரியர் 89 என்று எழுதினார். 14 என்று அக்கா கூற 41 என்று எழுதினார் ஆசிரியர்.

அங்கு விளையாடிக் கொண்டிருந்த மூன்றுவயது ஜெயந்த் 66 என்று கூறினார். ஆசிரியர் அவரது கூர் அறிவைப் பார்த்து வியந்து போனாராம்.

*** சிந்தியா! கிளிநொச்சி சண்டை பற்றி என்ன கூறுகிறீர்?**

சி. ரங்கநாதன், கொழும்பு-09.

அதுதான் முரசு கூறிவிட்டதே, 'பேய்ச் சமர்...!'

*** யுத்தம் தொடர்பாக ரணில் கூறியுள்ள கருத்துக்கள் நியாயம்தானே? அரசுக்கு உறைக்குமா?**

சி. முகேஷ், வவுனியா.

உறைக்காது! 'நாமும் எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் இப்படித்தானே நியாயம் கதைத்திருப்போம்' என்றுதான் நினைப்பார்கள்!

*** சிந்தியா! முல்லைத்தீவில் ஹெலி பறந்ததாமே? உண்மையா?**

பூ. ஆமிஷா, மருதானை.

உண்மையைத்தவிர அதில் வேறொன்றும் இல்லை!

*** அம்பாறை மாவட்டத்தில் பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியான விடயத்தில் அரசு ஏன் தலையிடவில்லை?**

கே. சந்திரன், காரைதீவு.

வடக்கு-கிழக்கில் வினாத்தாள் வெளியானால் என்ன, விமானம் வீழ்ந்தால்தான் என்ன? அரசு அலட்டிக்கொள்ளாது!

*** சிந்தியா! யாருக்கு உதவலாம்; யாருக்கு உதவக்கூடாது? (உதவியே கெட்டவன் நான்)**

கே. சங்கர், திருமலை.

ஜோக்கான கதை ஒன்று:

கடற்கரை ஓரம் ஒருவன் நடந்து சென்று கொண்டிருந்தான். கடலில் யாரோ ஒருவர் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

இவன் கடலில் பாய்ந்து அவரைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தான்.

காப்பாற்றப்பட்டவர் அவனிடம்:

"ரொம்ப நன்றி! நான்தான் ஹிட்லர். என் உயிரைக் காப்பாற்றியதற்கு என்ன வேண்டும் கேள்!" என்றார்.

உடனே அவன்: "என் உயிர் போனதும் என்னைப் புதைக்க ஒரு அழகான சமாதி கட்டித்தரவேண்டும்!" என்று கேட்டான்.

ஹிட்லருக்கு ஆச்சரியம். "ஏன் சமாதி கேட்கிறாய்? உனக்கு என்ன வயதா ஆகிவிட்டது? நீ சாக இன்னமும் பலகாலம் இருக்கிறது!" என்றார்.

அதற்கு அவன் சொன்னான்: "நீங்கள் நினைப்பது தவறு. நான் உங்களைக் காப்பாற்றியது தெரிந்தால் மறுநிமிடமே பொது மக்கள் என்னை கல்லால் அடித்தே கொன்று விடுவார்கள்!"



வினிதா

*** புலிகளுக்கு உணவு போய்ச் சேரும் என்பதால்தான் நிவாரணவெட்டு நடத்துவதாக அரசு கூறுகிறதே?**

இ. பேரின்பநாதன், மன்னார்.

புலிகளுக்கு எது தேவையோ அதனை அவர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் அரசு கொடுத்தபடிதானே இருக்கிறது!

*** சிந்தியா! என் காதலி என்னைத் தொடர்ந்து புறக்கணித்து வருகிறாள். என்ன செய்யலாம்?**

எம். இக்பால், கின்னியா.

ஒரே பெண்ணையோ, ஒரே பஸ்ஸையோ தொடர்ந்து ஓட வேண்டாம். பின்னால் வேறொன்றும் கிடைக்கும்!

*** ஒரு நாட்டின் படைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?**

கு. மகேந்திரராசா, மட்டக்களப்பு.

எப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று கேளுங்கள்:

ஒரு படைத் தளபதி வேகமாக மன்னனிடம் வந்து, "அரசே! நீங்கள் கூறியபடி நாட்டின் வட பகுதியில் உள்ள கிராமங்களைக் கொள்ளையடித்து அங்குள்ள பெண்களை பலாத்காரம் செய்து விட்டோம்!" என்றான்.

அதற்கு மன்னன் "அடப்பாவி நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள கிராமங்களைத்தானே கொள்ளையிடச் சொன்னேன். வடக்குப் பகுதியில் நமக்கு எதிரிகளே கிடையாதே!" என்றார்.

உடனே தளபதி கூறினான்:

"கவலையே வேண்டாம் அரசே! இதுவரை அவர்கள் நம் எதிரிகளாக இல்லாவிட்டாலும் இப்போது எதிரிகளாகி இருப்பார்கள்!"



'வீரம் வௌஞ்ச மண்ணு' படத்தில் விஜயகாந்த்-குஷ்பு

*** சிந்தியா! நடிகை வினிதாவை இப்போது காணமுடிவதில்லையே?**

ஆர். தங்கமலர், மஸ்கெலியா.

வினிதாவைத் தேடும் வனிதாமணியே! அவர் மாப்பிள்ளை தேடிக்கொண்டிருக்கிறார்!

*** சிந்தியா! அறிவுரைகளால் பலன் உண்டா?**

எஸ்.எஸ். ஹனீஸா, கண்டி.

அது யாருக்குச் செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்தது.

ஒரு கிறிஸ்தவ பாதிரியார் குடிகாரன் ஒருத்தனிடம்:

"குடி மனிதனுக்கு விரோதி. அதைத் தொடக்கூடாது என்று உனக்கு எத்தனை முறை சொல்லிவிட்டேன்." என்று கூறினார்.

அதற்கு குடிகாரன்: "குடியை நானும் விட்டுவிடலாம் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் விரோதியையும் நேசிக்க வேண்டும் என்று நீங்கள்தானே சொல்லியிருக்கிறீர்கள்!" என்றான்.

*** அன்புக்கும் காதலுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?**

சி. தவச்செல்வி, தலவாக்கலை.

சமீபத்தில் படித்த ஜோக் ஒன்று:

ஆசிரியர்: அன்புக்கும் காதலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

மாணவன்: நீங்கள் உங்கள் மகள்மேல் வைத்திருப்பது அன்பு.

அதே அன்பை நாங்கள் வைத்தால் அது காதல்!

*** கோபப்படாத மனிதர்கள் இருக்கிறார்களா?**

ஆர். வளர்மதி, வத்தளை.

இருதய மாற்று சிகிச்சையை முதன் முதலில் வெற்றிகரமாக செய்தவர் டாக்டர் கிறிஸ்டியன் பெர்னார்ட். அவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

"மனிதன் சிரித்தால் முகத்தில் உள்ள நான்கு தசைகள் வேலை செய்கின்றன. கோபப்பட பற்களை கடித்துக்கொண்டு முறைக்கும்போது முகத்தில் உள்ள பதினெட்டுத் தசைகள் வேலை செய்கின்றன.

ஆனால் மனிதன் சுலபமான வேலையான சிரிப்பை விட்டுவிட்டு கடினமான வேலையான கோபப்படுவதையே எப்போதும் செய்து கொண்டிருக்கிறான்!"

*** பிரபு-குஷ்பு, விஜயகாந்த்-குஷ்பு எந்த ஜோடி தூக்கல்?**

எஸ். ரவிக்குமார், பதுளை.

முன்னது ஜாடிக்கேத்த மூடி.
பின்னது கறுப்பு- வெள்ளை!
இரண்டுமே எடுப்புத்தான்!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 30

ஆண்டவரின் அருளினால் மிகவும் உறுதியான உடல் வளம் பெற்ற சிம்சோன், இஸ்ரயேல் மக்களுக்கு இருபது ஆண்டுகள் நீதித்தலைவராக இருந்தார். அம் மக்களை அடிமைப்படுத்தித் துன்புறுத்திய பெலிஸ்தியர்களிடமிருந்து இஸ்ரயேல் மக்களை- தன் இன்னுயிரைக் கொடுத்தே மீட்டெடுத்தார். பெலிஸ்தியச் சிற்றரசர்களும் அவர்களின் அதிகாரிகளும் பெலிஸ்தியக் குடிமக்களும் ஒன்றுகூடி விழாவெடுத்து மகிழ்ந்திருக்கும்போது- விழா நடைபெற்ற அம் மாமண்டபத்தையே தமது பராக்கிரமத்தால் இடித்துத்தள்ளி, அத்தனை பேரையும் கொன்றார்.



## மாமியாருக்கு ஏற்ற மருமகள்

இதன்பின்னர் இஸ்ரயேல் மக்கள் ஓரளவு துன்பம் நீங்கி வாழ்ந்த போதிலும் பெலிஸ்தியருடனான மோதல்கள் முற்றாக நீங்கவில்லை. இருதரப்பினரும் படைகளைத் திரட்டி மோதிக் கொண்டே இருந்தனர்.

இக்கால கட்டத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. உண்ண உணவின்றி குடும்பம் குடும்பமாக மக்கள் வெளியேறி வேறிடங்களுக்குச் சென்றனர். யூதாவிலுள்ள பெத்லகேம் என்ற ஊரைச் சேர்ந்த எலிமலேக்கு என்பவர் தனது மனைவி நகோமி, இரு புதல்வர்களான மக்லோன் மற்றும் கிலியோன் ஆகியோருடன், மோவாபு என்ற நாட்டுக்குச் சென்றார். அங்கு வாழ்ந்த காலத்தில் எலிமலேக்கு இறந்துவிட்டார். நகோமி தனது இரு புதல்வர்களையும் பாடுபட்டு வளர்த்துப் பெரியவர்களாக்கினார்.

வாலிப வயதையடைந்த இருவருக்கும் மோவாபு நாட்டுப் பெண்கள் இருவரை மணம் முடித்து வைத்தார். மக்லோனும் கிலியோனும் நீண்ட நாட்கள் உயிர்வாழ முடியவில்லை. தாயாரையும் மனைவியரையும் தவிக்க விட்டு விட்டு இருவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்து போயினர். நகோமியும் அவருடைய மருமக்களான ஓர்பாள் மற்றும் ரூத் ஆகிய மூவரும் ஆண்துணையற்றவர்களாகச் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தினர்.

### நாடு திரும்புதல்

யூதா நாட்டில் அப்போது மழைபொழிந்து, பயிர்கள் செழித்து வளர்ந்து, பஞ்சம் நீங்கிவிட்டதாக அறிந்த நகோமி தனது நாட்டுக்குத் திரும்பிச் செல்லத் திட்டமிட்டார். அவருடைய மருமக்கள் இருவரும் தமது மாமியாருடனேயே பெத்லகேமுக்கு வரப்போவதாக அடம்பிடித்தனர். அவர்களை அவர்களுடைய சொந்த நாடான மோவாபுவில், அவர்களுடைய பெற்றோருடன் தங்கியிருக்குமாறு நகோமி எவ்வளவோ கேட்டும் பயனில்லாமல் போய் விட்டது.

"என் அன்புப் பிள்ளைகளே! நானோ மிகவும் வயதாகிவிட்டவள். நீங்கள் இருவரும் மறுமணம் புரிந்துகொண்டு பிள்ளைகளைப் பெற்று வாழ வேண்டிய இளவயதுடையவர்கள். என்னுடன் நீங்கள் வருவதால் உங்களுக்கு எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. ஆகவே, உங்கள் பெற்றோருடன் சேர்ந்து இந்த நாட்டிலிருப்பதுதான் உங்களுக்கு நன்மை. எனது பிள்ளைகளாகிய உங்கள் கணவர்கள் இறந்த பின்னரும் என்னுடனிருந்து எனக்கு மன நிறைவுடன் சேவை செய்தீர்கள். அதற்காக உங்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பார். நான் எனது நாடான யூதா நாட்டில் போய் எப்படியாவது பிழைத்துக் கொள்வேன். போக விடைதாருங்கள்...!" என்று நகோமி கூறினாள்.

இதனைக் கேட்ட இரு இளம்பெண்களும் கோவெனக் கதறி அழுதனர். நகோமியுடனேயே புறப்பட்டு விட்டனர். பாதி வழி கடந்ததும் மீண்டும் நகோமி தன் மருமக்களைத் திரும்பிச் செல்லுமாறு கேட்டாள். அப்போது ஓர்பாள் தனது பெற்றோரிடம் செல்ல ஒப்புக் கொண்டாள். ஆனால் ரூத் இறுதிவரை நகோமியைவிட்டுப் பிரியப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். தனது மருமகளான ரூத்தின் பிடிவாதத்துக்கு விட்டுக் கொடுப்பதைத்தவிர நகோமிக்கு வேறு வழிதெரியவில்லை.

இருவரும் கால் நடையாகவே பெத்லகேமை அடைந்தனர். இவர்கள் அங்கு வரும் காலகட்டம், பெத்லகேமில் பொன்னான காலம் என்றே சொல்லலாம். வாற்கோதுமைப் பயிர்கள் தங்க வர்ணக் கதிர்களைத் தரையில் பரப்பிக்கிடந்தன. பெருமகிழ்ச்சி கொண்ட விவசாயிகள், கதிர்களை அறுத்துக் குவித்துக் கொண்டிருந்தனர். இக்கண்கொள்ளாக் காட்சியினைப் பார்த்து இரசித்த வண்ணம் நகோமியும் அவர் மருமகள் ரூத்தும் நடந்து சென்றனர்.

### நகோமியின் ஏக்கம்

பல வருடங்களுக்கு முன்னர்- பஞ்சத்தின் போது- நாட்டைவிட்டு வெளியேறிச் சென்ற நகோமி வயதான நிலையில் தளர்ந்த



இராஜகுமாரன்

நடையுடன் வருவதை பெத்லகேம் வாசிகள் கண்டு பரபரப்படைந்தனர். போகும்போது கணவனுடனும் இருபுதல்வர்களுடனும் சென்ற இளவயதினளான நகோமி, இப்போது முதிர்ச்சியடைந்தவளாக- ஒரேயொரு இளமங்கையுடன் மட்டும்- சோர்வுடன் நடந்து வருவதைக் கண்டு அம்மக்கள் பரிதாபப்பட்டார்கள்.

சொந்த ஊருக்கு வந்தாகிவிட்டது. அது ஒருவகையில் ஆறுதலளித்தது. எனினும் தன்னையும் இளவயதினளான தன் மருமகளையும் பாதுகாத்து வருவதற்கான ஓராண்துணை இல்லையே என்ற ஏக்கமே நகோமியை வாட்டத் தொடங்கியது.

வாற்கோதுமை அறுவடை காலம் என்றால் அந்நாட்டில் பசி-பட்டினி என்று எவரும் வாடமாட்டார்கள். விவசாயிகள் அறுவடையிலீடுபட்டு கதிர்களை அறுத்து ஒன்று சேர்க்கும்போது, வயலில் சில கதிர்கள்- கட்டுகளுக்குள் அடங்காமல் கீழே விழுந்துவிடும். அவற்றைப் பொறுக்கிச் சேர்த்தெடுப்பதற்கென்றே ஒரு கூட்டம் சேர்வர். (இத்தகைய பழக்கம் இன்றும் எல்லா இடங்களிலும் நடப்பதுண்டு.) இவ்வாறு பொறுக்கி எடுக்கப்படும் தானியம் பல நாட்களுக்கு அவர்களுக்கு உணவாகப்போதுமானது.

அறுவடை நடைபெறும் வயல்களுக்குச் சென்று கதிர் பொறுக்கி வருவதற்கு ரூத், தன் மாமியாரிடம் அனுமதி கோரினாள். அந்நிய நாட்டைச் சேர்ந்தவளும், இளமையும் அழகுமுடையவளுமான தன் மருமகளை அப்பணிக்கு அனுப்பி வைக்க, ஆரம்பத்தில் நகோமி விரும்பவில்லை. வேறு வழியில் வாழ்க்கையை நடாத்துவதற்கு முடியாது என்பதனால் அரை மனதுடன் அனுமதித்தாள். ஒவ்வொருநாளும் காலை முதல் மாலைவரை கதிர்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு ரூத் வீடு வந்து சேர்வாள். இதனால் இருவரும் உணவுக்குத் தட்டுப்பாடில்லாமல் வாழ்ந்தனர்.

### தாராள மனம் கொண்ட தனவந்தர்

ரூத்து, கதிர் பொறுக்கும் வயலுக்குச் சொந்தக்காரன் போவாசு என்ற தனவந்தனர். இவர் நகோமியின் உறவினர். தன்னுடைய வயலில் ஒரு புதுப்பெண்- அந்நிய நாட்டுப் பெண்- கதிர் பொறுக்குவதைக் கண்டார் போவாசு. தனது வேலையாட்களை அழைத்து விசாரித்தார். பலவருடங்களுக்கு முன்னர் நாட்டைவிட்டு தன் குடும்பத்துடன் சென்ற நகோமி, கணவனையும் பிள்ளைகள் இருவரையும் பறிகொடுத்துவிட்டு ஒரேயொரு மருமகளுடன் வந்திருப்பதாகக் கூறினார்கள். போவாசு அனுதாபத்துடன் நகோமியின் கதையைக் கேட்டார். கதிர் பொறுக்க வரும் பெண்ணுக்கு எந்தவிதத் தொந்தரவும் ஏற்படாமல் பாதுகாக்கும்படி கூறினார். அப்பெண் தாராளமாக கதிர்களைப் பொறுக்குவதற்கேற்றவாறு விட்டுக் கொடுக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.

போவாசு ரூத்தையும் அழைத்து, வேறு வயல்களுக்குப் போகாமல் தன்னுடைய வயலிலேயே கதிர் பொறுக்குமாறும் அங்கு வேலை செய்யும் ஆட்களுடன் உணவு உட்கொண்டு, தண்ணீர் பருகிவருமாறும் சொன்னார். பிற நாட்டைச் சேர்ந்தவளான தன்மீது ஏன் இத்தனை அக்கறை கொள்ள வேண்டும் என்று ரூத் போவாசுவிடம் கேட்டாள்.

"பெண்ணே! நீ உன் கணவனை மிக இளமையிலேயே பறிகொடுத்து விட்டாய். இருப்பினும் உன் கணவனின் தாய்மீது பாசம் கொண்டு அவளுக்காக நீ பாடுபட்டு வருகிறாய். இளமையும் அழகும் பொருந்திய நீ உன் தாய்வீட்டிலேயே தங்கி மற்றுமொரு ஆடவனை மணந்து மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் உன் கணவனின் தாயையே உன் தாயாக ஏற்று அவருக்கு உதவி புரிய முன் வந்தாய். இத்தகைய பெருந்தன்மை உடைய உனக்கு உதவ வேண்டியது என் கடமை. உனக்கு என்றும் ஆண்டவரின் அனுக்கிரகம் கிட்டும்!"

இவ்வாறு போவாசு சொன்னார்.

அன்று மாலை வீடு திரும்பிய மருமகள் ரூத், வழமையைவிட அதிகமான தானியக் கதிர்களுடன் வந்து சேர்ந்ததை நகோமி கண்டார். மருமகளை அழைத்து விசாரித்தார். வயலில் நடந்த சம்பவங்களனைத்தையும் ரூத் தன் மாமியாரிடம் கூறினார். தன் உறவினனான போவாசு, தனக்குரிய கடமையை உணர்ந்து நடந்து கொண்டதை அறிந்து நகோமி மனம்மகிழ்ந்தார். இருப்பினும் ரூத்து பற்றிய கவலையும் அவர் உள்ளத்தில் எழாமலில்லை. தனக்கோ வயதாகிக் கொண்டு வருகிறது. 'இளமை குன்றாத அழகான இப்பெண் இன்னும் எத்தனை காலம் என்னுடன் தங்கியிருக்க முடியும்?' என்ற கவலை நகோமியை ஆட்கொண்டது.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 28 விடை** - பெலிஸ்திய இனத்தைச் சேர்ந்தவள்.

**பரிசு பெறுவோர்:**

1. **எம்.ஆர்.எப்.நஸீரா,** 141/A, குருகுத்தலை, கண்ணாவ.
2. **ந.சிதம்பரம்,** 56/4, 2ம் கட்டை, பசறை வீதி, பதுளை.
3. **சு.யமுனாராணி,** லோகி எஸ்டேட், தலவாக்கலை.
4. **வி.தயாரூபன்,** மூன்று முறிப்பு, கண்டிவீதி, வவுனியா.
5. **செல்வி நிஷாந்தினி ரட்ணம்,** இ/தமிழ்.ம.வித்தியாலயம், பலாங்கொடை.

**திருமறை 30 வினா:-** ரூத்தின் மாமனார் பெயர் என்ன?


ஒக்.17க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 30— தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : அரச பிரசார சாதனம். |
| தொழில் | : மெய் மறக்க வைத்தல்! |
| பொழுதுபோக்கு | : பொய் கறப்பது! |
| உபதொழில் | : ஸ்கோர் கூறுவது! |
| நம்புவது | : தணிக்கையை! |
| நம்பாதது | : தனது செய்தியை! |
| வெறுப்பது | : வெளிநாட்டு செய்தி நிறுவனங்களை! |
| சமீபத்திய சாதனை | : கூறாத ஸ்கோர். |
| இலட்சியம் | : மக்களை மெய்மறக்கச் செய்தல்! |

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : ரூபவாஹினி |
| தொழில் | : அறுவை. |
| உபதொழில் | : தமிழ்க்கொலை. |
| பொழுதுபோக்கு | : உண்மைகளை ஒழி மறைப்பு செய்தல்! |
| விரும்புவது | : தமிழ் நிகழ்ச்சி நேரத்தில் அடிக்கடி கைவைப்பதை. |
| விரும்பாதது | : சிங்கள நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்வதை. |
| இரசிப்பது | : ஓடாத, உருப்படாத தமிழ் சினிமாக்களை! |
| வெறுப்பது | : தனியார் தொலைக்காட்சிகளை. |
| ஒரே இலட்சியம் | : நேயர்களின் பொறுமையை சோதிப்பது! ஆள்வோரின் பெருமையை போதிப்பது! |

## அதிசயம், அதிசயம்



இனப்பிரச்சனையை இந்த அரசு தீர்த்தால் அது அதிசயம்.

தமிழ்க் கட்சிகள் இணைந்து அரசை எதிர்த்தால் அது அதிசயம்!

அறிக்கை விடாது தமிழ்க் கட்சிகள் இருந்தால் அதிசயம். விட்ட அறிக்கையை அத்தோடு மறந்துவிடாமல் இருந்தாலும் அதிசயம்.

பொதியை நீலன் எதிர்த்துப் பேசினால் அதிசயம். பொதியை பீரிஸ் போற்றாதிருந்தாலும் அதிசயம்.

அடையாள அட்டை இல்லாத தமிழர் கொழும்பில் வாழ்ந்தால் அதிசயம்! பொலிஸ் பதிவு இல்லாத தமிழர் தெருவில் திரிந்தால் அதுவும் அதிசயம்.

சோதனை அரணில் சந்தேகப் பார்வை வாங்காத தமிழர் வடக்கு-கிழக்கில் வாழ்ந்தால் அது அதிசயம்.

காணாமல்போன தமிழர் குடும்பங்களுக்கு நிதி கிடைத்தால் அதிசயம்! நஷ்டஈடாய் நிதி கிடைத்தாலும் அதிசயம்! அதிசயம்!

தமிழினம் இங்கு துன்பம் இன்றி எங்கு வாழ்ந்தாலும் அதிசயம்! அதிசயம்! அதிசயமே!

## நீயும் நாமும்

*நீ அரசு*
*நாங்கள் தமிழ்க்கட்சிகள்*
*நீ என்ன சொன்னாலும்*
*தலையாட்டுவோம்!*

*நீ பொதி*
*நாங்கள் தமிழ்க் கட்சிகள்*
*நீ எதைத் தந்தாலும்*
*கை நீட்டுவோம்!*

*நீ எமர்ஜென்சி*
*நாங்கள் தமிழ்க் கட்சிகள்!*
*நீ என்ன செய்தாலும்*
*ஏற்றுக்கொள்ளுவோம்!*

*நீ யுத்தம்*
*நாங்கள் தமிழ்க் கட்சிகள்*
*நீ குண்டு பொழிந்தாலும்*
*கண்டுகொள்ளாதிருப்போம்!*

*நீ நிவாரண வெட்டு*
*நாங்கள் தமிழ்க் கட்சிகள்*
*நீ வயிற்றில் அடித்தாலும்*
*வாய் திறவாதிருப்போம்!*

*நீ பேச்சு*
*நாங்கள் தமிழ்க் கட்சிகள்!*
*நீ என்ன பேசினாலும்*
*மூச்சுவிடாதிருப்போம்!*

## பேச்சாளர் பேரம்பலம்



எங்கள் ஆட்கள் பலியானதற்கு அரசுதான் காரணம் என்பதை சற்று மறந்து, ஏதோ திடீர் உணர்ச்சி காரணமாக, கேட்கக்கூடாதோர் சொற் கேட்டு அந்த இயக்கத்தினர்மீது குற்றம்சாட்டியதை எண்ணி விரக்தி அடைந்துள்ளதோடு, நாம் இதுவரை அரசை ஆதரித்து வந்ததை எல்லாம் கெட்ட கனவாக மறந்துவிடும்படியும், இந்த அரசு எங்களை ஏமாற்றி விட்டது என்பதை கூறிக்கொண்டு, ஆனாலும் அரசை தொடர்ந்து ஆதரிப்பதையும் கைவிட மாட்டோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன் என்று எங்கள் அண்ணர் சங்கதி கூறியதில் சாணக்கியம் நிரம்ப இருக்கிறது!



## திருவாளர் பொதுஜனம்

### விடுக்கும் வேண்டுகோள்

தாக்குப்படாமல் விமானம் ஓட்டுவது எப்படி என்று அரசுக்கு ஆலோசனைகூறி அறிக்கைவிடுத்துள்ள அருமை பெருமைமிக்க தமிழ்க் கட்சிகள் முதலில் தமது உறுப்பினர்களுக்கு தெருவில் வாகனம் ஓட்டும் விதிமுறைகளை சொல்லித்தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலரிஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


## குறுந்திரை




➡ ஜப்பானின் 'கசியோ' நிறுவனம் தயாரித்து அண்மையில் சந்தையில் விட்டிருக்கும் கைக்கடக்கமான தொலைக்காட்சி இது.

எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லக் கூடியது. JY10 TV என்று பெயரிடப்பட்டுள்ளது. மிகத்துல்லியமாகக் காட்சிகளைக் காட்டவல்லது.

இலண்டன் மாநகரக் கண்காட்சிச் சாலைகளில் 99.99 பவுண் விலையில் விற்கப்படுகிறது. இன்றைய நமது நாட்டுக் கணக்குப்படி-கிட்டத்தட்ட பதினொரு ஆயிரம் ரூபாய்கள்தான். வரிகள் சேர்த்தால் மேலும் உயரும்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657



## கலை நயம்



➡ புது டில்லிச் சந்தைக்கு செக் கோஸ்லோவாக்கிய பூச்சாடிகள்-இவ்வாறு வண்ணம் வண்ணமாக வந்து சேர்ந்துள்ளன. கண்ணாடியால் செய்யப்பட்ட இவைக்கு அங்கு நல்ல கிராக்கியாம்.

வீடுகளில் அழகுக்கு வைப்பதற்கு வர்ண ஜாடிகளை இந்தியர்கள் விரும்புகின்றனராம். நமக்கும் பிடித்தமாயுள்ளன தானே.

## மேற் சாலை



➡ போக்குவரத்து நெரிசலின் அவலம் கொழும்பில் வாழ்வோருக்கு கூடுதலாகப் புரியும். திட்டமிட்டு சாலைகளை அமைத்தால் இந்த நெருக்கடிக்கு இடமிருக்காது.

படத்தில் இருப்பது இங்கிலாந்தில் உள்ள சாலை அமைப்பு. தரையில் இருந்து தூண்கள் நிறுவி காத்திரமான மேம்பாலச் சாலைகள். பல கிளைச் சாலைகளும் உள்ளன. ஆறு செல்வதுபோல சாலைகள் வளைந்தும், நெளிந்தும் காணப்படுகின்றன.

இங்கிலாந்தின் கேந்திர நிலையமாக விளங்குவது 'வெஸ்ட்மிட்லண்ட்' பிரதேசம். அங்கு பல தொழிற்சாலைகள் உள்ளன. அங்கேதான் இந்த வலைப்பின்னல் போன்ற சாலைகள் உள்ளன. வாகன நெரிசல் என்ற பேச்சுக்கே இடமில்லை. 25 இலட்சம் மக்கள் வாழும் பிரதேசமாக இருந்தபோதும் கச்சிதமான போக்குவரத்து பாதை இருப்பதால் தொழிற் சாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் உரிய நேரத்தில் போய்ச்சேருகிறார்கள்.

இப்பகுதியில் இலங்கை உட்பட பொது நலவாய நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரம் தொழிலாளர்களும் உள்ளனர்.

## தாவல்



தவளைகள் பற்றி தொள்ளு சமாச்சாரங்கள் சில கூறப் போகிறோம். காதைக் கொடுங்கள். ➡

தவளைகளின் கர்ண கடூரமான ஓசைகளை கேட்டிருக்கிறீர்கள் அல்லவா. அந்த ஓசையின் பின்னாலுள்ள சமாச்சாரம் என்ன தெரியுமா?

அதுதான் ஆண் தவளையின் காதல் கீதம். பெண் தவளைகளை அழைக்கும் ஓசை. அந்த ஓசை கேட்டால் பெண் தவளைகள் எழுந்தோடிவரும்.

அதுமட்டுமா? இன்னமும் இருக்கிறது விஷயம். தவளைகள் எழுப்பும் ஓசையில் வேறுபாடுகள் இருக்குமாம். இனத்துக்கு இனம் வேறுபாடு. எந்த இனத் தவளை ஓசை எழுப்புகிறதோ அதே இனப் பெண்தவளைதான் ஜோடி சேர நாடி வருமாம். இனம் இனத்தோடு சேரும் என்பது எப்படி கச்சிதமாகப் பொருந்துகிறது பார்த்தீர்களா?!

படத்தில் உள்ள தவளை ஏன் உப்பிக் காணப்படுகிறது? சொன்னால் நம்பமாட்டீர்கள், காதல் கீதம் எழுப்ப முன்னர் தன் தொண்டைக்குள் காற்றை இழுத்து உப்பவைக்கும் போது எடுக்கப்பட்ட படம் இது. எத்தனை முன்னேற்பாடு பார்த்தீர்களா!



⬅ கடற்கரைகளில் உலாவச் செல்லும் சிறார்கள் மணலில் ஆங்காங்கே பரந்து கிடக்கும் சிப்பிகளைச் சேகரிப்பார்கள். இவற்றில் பெரும்பாலும் பலவர்ணங்களையும் தோற்றங்களையும் கொண்டவையாகக் காணப்படும்.

சிப்பிகளை பண்டைக்கால எகிப்தியர்கள் நாணயங்களாகப் பயன்படுத்தியுள்ளனர். இவற்றை ஆபரணங்களாகவும் முன்னாளில் பல்லின மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.

படத்தில் இருப்பது சாதாரண சிப்பியல்ல. சிற்பி ஒருவரால் தங்கத்தால் செய்யப்பட்ட சிப்பி. ஆமை உருவத்தின் மேல் ஒரு பறவை உருவம். அதன்மேல் ஒரு பறவை உருவம். அதன்மேல் தங்கச் சிப்பி. உச்சியில் மம்மியின் உருவம். இதனை 'றோஸ்பிக்லியோசி கப்' என்று அழைக்கின்றனர். எத்தனை நுட்பமான வேலைப்பாடு பார்த்தீர்களா!

## அலங்காரம்



⬆ இந்தியாவின் தலைநகரான புது டில்லியில் 'வில்-ஏ-வில்' என்ற நிறுவனம் ஒரு கலைக் கண் காட் சியை ஏற்பாடு செய்திருந்தது. இக்கண்காட்சிக்கு 'விநோத சிருஷ்டிகள்' என்று பெயரிட்டிருந்தனர்' பலதுறைக் கலைஞர்களின் சிருஷ்டிகள் இங்கு காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டிருந்தன.

பிரசித்தி பெற்ற கலைஞர்களின் கற்பனையிலுருவான சிருஷ்டிகள் பார்ப்போருக்குப் பெருவிருந்தளித்தன.

படத்தில் காணப்படுவது மூலைத்தூண். மிக நுட்பமான கலை வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. வீட்டுக்கு அழகு. விழிகளுக்கு விருந்து. ஆனால் விலைதான் சற்று உசத்தி.

## தங்கச் சிப்பி

⬆ சிப்பி, சங்கு போன்ற பொருட்கள் உயிரினங்கள் சிலவற்றின் உடலுடன் இணைந்து வளர்பவை. அவற்றைக் காப்பவை. உயிரற்ற பின் ஊன் வடிந்து விடும். அவற்றின் ஓடு மட்டும் தனியாக நீண்டகாலம் இருக்கும்.

விலை மதிப்பற்ற முத்துகளும் சிப்பிகளுக்குள் தான் வளர்கின்றன. முத்துச் சிப்பிகள் மிக அழகான தோற்றத்துடன் காணப்படும்.

## துறு துறு



⬅ நண்பர்களை மிகக் கொஞ்சமாக சம்பாதித்து வைத்துள்ள ஜடேஜாவுக்கு நண்பிகள்தான் ஏராளம்.

சமீபத்தில் பொதுநலவாய நாடுகளின் கிரிக்கெட் போட்டிக்கு கப்டனாகச் சென்றபோது அந்த நண்பிகளும் அன்பு முத்தங்களை பரிசளித்து வாழ்த்தினர்.

ஆனால் என்ன பிரயோசனம். வெற்றியை முத்தமிடமுடியவில்லை. வென்று திரும்பியிருந்தால் ரசிகைகள் உண்டு இல்லையென்றாக்கியிருப்பர்.

இந்திய அணியின் அடுத்த கப்டன் ஜடேஜாதான் என்று கூறப்படுகிறது. அதனை உறுதிப்படுத்த கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த தவறிவிட்டாரே என்பதுதான் அவரது ரசிகைகளின் பெருமூச்சு.

சகாரா கிண்ணப் போட்டியிலும் ஜடேஜா இறுதி நேரத்தில் கலந்து கொண்டார். அதிலும் சோபிக்க வில்லை.

திடீர் என்று இறங்கு முகமாக செல்லுவார். சடுதியாக மற்றொரு சீசனில் பிளந்துகட்டத் தொடங்குவார். அதனால் தான் அணியில் நிரந்தர இடத்தை பிடித்து வைத்திருக்கிறார்.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



**இலக்கியா**

**26.06.1998**

திருமலையைச் சேர்ந்த புருஷோத்மன்-வசந்தகோகிலம் தம்பதியினரின் செல்வப் புதல்வி **இலக்கியா** தனது இரண்டாவது பிறந்தநாளை 26.06.1998 அன்று தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா-அம்மா, தங்கை அகல்யா, மற்றும் அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மச்சான்மார்-மச்சாள்மார், மாமாமார்-மாமிமார், சித்தப்பாமார்-சித்திமார், மற்றும் உறவினர், நண்பர்கள் சகல கலையும் பயின்று நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

*தகவல்: சேய் பெரியண்ணா- திருகோணமலை*



படிப்பகம்

... அச்சகத்தில் ஒக்டோபர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.